வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1995 வைகாசி திங்கள் 11-ம் நாள் (24—5—1964) ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் 11 | இதழ் 52

# அரசியல் சட்டம் 29ம் பிரிவை

## மாற்றவே முடியாது

## பிறிவிக் கவுன்சில் தீர்ப்பு தரும் விபரம்

இலங்கைவாழ் சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஓரளவு உரிமைகளை வழங்கும் இலங்கை அரசியல் சட்டத்தின் 29வது சரத்தை எந்த வகையிலும் மாற்றியமைக்க பாராளுமன்றத்துக்கு உரிமை கிடையாது. இவ்வாறு அண்மையில் பிறிவிக் கவுன்சிலில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட இலஞ்ச விசாரணை ஆணைக் குழுவுக்கும், திரு. பெட்றிக் ரணசிங்கிக்கும் நடைபெற்ற வழககில்—பிரபு பியர்ஸ் அளித்துள்ள தீர்ப்பினைக் கருத்திற் கொண்டு நமது நிருபரிடம் ஒரு பிரபல சட்ட நிபுணர் கூறினர்.

சிங்களம் மட்டும் சட்டம் 29-வது சரத்தை மீறுகிறது என்றே கோடீசுவரன் வழக்கின் தீர்ப்பும் அறுதியிட்டுக் கூறுகிறது.

இலங்கைப் பாராளுமன்ற நடைமுறையின் பிரகாரம், பாராளுமன்ற உறுப்பினர்களின் முழுத் தொகையினரே சேர்ந்து வாக்களித்தாலும்கூட 29-ம் சரத்தை மாற்றி அமைக்கவோ, அச்சரத்துக்குப் பாதகமான சட்டங்களை இயற்றவோ பாராளுமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று அச்சட்ட நிபுணர் மேலும் கூறினர்.

பௌத்த ஜாதிக பலவேகயா போன்ற சிங்கள வகுப்புவாத இயக்கங்கள் 29-வது சரத்தை அரசியல் சட்டத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஜாதிக விமுக்தி பெரமுனே நாடெங்கணும் இதையிட்டுப் பெருங் கிளர்ச்சி நடாத்திவருகிறது.

### 29-வது சரத்து கூறுவதென்ன?

அரசியற் சட்டத்தின் 29வது சரத்து கூறுவதாவது:-

(1) இந்த ஆணையின் விதிகளுக்கடங்க, தீவின் அமைதி ஒழுங்கு, நல்ல அரசாங்கம் இவைகளுக்கான சட்டமியற்ற பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இருக்கும்.

(2) இத்தகைய எந்தச்சட்டமும்—

(அ) எந்தவொரு சமயத்தினைப் பின்பற்றும் சுதந்திரத்தைப் பாதிக்கவோ, தடுக்கவோ; அல்லது

(ஆ) ஒரு இனம், மதம் சார்ந்த மக்களுக்கு இல்லாத இன்னல்களையோ, தடைகளையோ பிறிதொரு இனம், மதம் சார்ந்த மக்களுக்கு உண்டாக்கவோ; அல்லது

(இ) ஒரு, இனம், மதம் சார்ந்த மக்களுக்கில்லாத விசேட சலுகைகளையோ, வசதிகளையோ பிறிதொரு இனம், மதம் சார்ந்த மக்களுக்கு அளிக்கவோ; அல்லது

(ஈ) எந்தவொரு மதத்தாபனத்தின் ஒழுங்குத் திட்டத்தையும் அந்தத்தாபனத்தின் அனுமதியின்றி மாற்றவோ, முடியாது.

(3) இப்பிரிவின் உப-பிரிவு (2) க்கு மாறாக இயற்றப்படும் எந்தச் சட்டமும், எவ்வளவு தூரத்துக்குமுரண்பாடாகவிருக்கிறதோ, அவ்வளவுக்கு, செல்லுபடியாகாது.

## இராசமாணிக்கம் வெற்றி



மண்முனை தென் எருவில் கிராமசபை 8ம் வட்டாரத் தேர்தலில் பட்டிருப்புத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் 230 மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

திரு. இராசமாணிக்கம் அவர்களுடன் திருமதி வில்லியம் சிங்கோ என்ற பெண்மணி போட்டியிட்டார். இத் தேர்தலைக் கொண்டே திரு. இராசமாணிக்கத்தின் வருங்கால அரசியல் அந்தஸ்தை நிர்ணயிக்க அவருடைய அரசியல் விரோதிகள் திட்டம் திட்டிச் செயல் புரிந்ததாக நம்பப்படுகிறது.

## கூட்டாட்சி ஏற்பட சீனு முட்டுக்கட்டை?

கூட்டரசாங்கத்தில் ருஷ்யச் சார்புடைய கொம்யூனிஸ்ட் கட்சியினரைச் சேர்ப்பதையிட்டு சீனுவின் மறைமுகமான ஆட்சேபம், நெருக்கடி நிலையை உருவாக்கியதாக நம்பப்படுகிறது. இதனுலேயே கொம்யூனிஸ்டுகளை அமைச்சரவையில் சேர்க்கமுடியாது என அரசாங்கம் கூறியிருப்பதாக அறிகிறேம்.

இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மூன்று கட்சிகளையும் தம்முடன் சேர்த்து கூட்டரசாங்கம் அமைக்கப் போவதாகக் கூறிவந்த பிரதமரும் மந்திரிமாரும் திடீரென தங்கள் முடிவுகளை மாற்றிக்கொண்டதையிட்டு அரசியல் அவதானிகள் பெருவியப்புக்குள்ளாகியுள்ளனர். இறுதியாக அரசாங்கப் பகுதி உறுப்பினர் பலர் இடதுசாரியை இணைத்து கூட்டரசு ஏற்படுத்துவதை வன்மையாக எதிர்க்க ஆரம்பித்துவிட்டனர். டாக்டர் என். எம். பெரேராவை மட்டுமே ஆளும் கட்சியுடன் இணைக்க இசைவு கொடுத்த ஆளும் கட்சி மேலிடம், கொம்யூனிஸ்ட் கட்சியும், பிலிப்குணவர்தனுவும் அமைச்சரவையில் சேருவதற்கு மறுத்துள்ளனர்.

இ. ஐ. மு. வில் அங்கம் வகிக்கும் கொம்யூனிஸ்டுகள் அனைவரும் ருஷ்யச் சார்புடையவர்கள். இவர்களை அமைச்சரவையில் சேர்த்து விட்டால் பல துறைகளிலும் இலங்கைக்கு இன்று உதவி புரியும் சீனுவின் நல்லெண்ணத்தை இழக்க நேரிடும், என்றே கொம்யூனிஸ்ட் கட்சி அமைச்சில் சேர்வதை விரும்பாதவர்கள் கருத்துத் தெரிவித்திருப்பதாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

கடந்த இரு வார காலமாக ஆளும் கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்களையும் பல பிரமுகர்கள் அண்டி கொம்யூனிஸ்ட் கட்சியை ஆளும் கட்சியுடன் இணைக்க அனுமதி அளிக்கலாகாது என்று பிரசாரம் செய்து வந்தனராம். இப் பிரமுகர்கள் வரிசையில் இங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் பல சீனர்களும் இருந்ததாக வதந்திகள் அடிபடுகின்றன.

இது தவிர ஒரு தூதராலயத்தின் அதிகாரிகள் சிலர் இவ்விஷயத்தில் சுறுசுறுப்பாக செயலாற்றி வந்தனரென்று வதந்தி அடிபடுகிறது.

(இத்தகைய ஒரு சம்பவம் நிகழும் என்பதை நமது அரசியல் நிருபர் கடந்த வாரம் சுட்டிக்காட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.)

## பேச்சு தோல்வி கண்டால் பிரதமர் எடுக்கும் அடுத்த நடவடிக்கை

பாராளுமன்றம் எப்பொழுது கலைத்துவிடப்படுமென்று கூற முடியாதிருப்பதால் தத்தம் தொகுதிகளில் தேர்தல் வேலைகளை ஆரம்பிப்பதற்குத் தயாராயிருக்குமாறு சுதந்திரக்கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்குப் பிரதமர் அறிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கூட்டரசாங்கம் அமைப்பதற்காக நடைபெறும் பேச்சு வார்த்தைகள் தோல்வி அடையும் பட்சத்தில் இடதுசாரிக் கட்சிகளுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தமொன்று செய்து கொண்டு பொது மக்களிடம் செல்வதே சாலவும் நன்று என்று பிரதம மந்திரி முக்கிய அமைச்சர்கள் இருவரிடம் கூறியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

சுதந்திரக் கட்சியுடன் செய்யப்படும் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கொம்யூனிஸ்டுக் கட்சியும் மக்கள் ஐக்கியமுன்னணியும் சேர்ந்து கொள்ளலாமென்பதைப் பிரதமர் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தலுக்குப் பின்னர் கூட்டரசாங்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாமெனப் பிரதமர் இடதுசாரித் தலைவர்களிடம் கூறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 7வது முறை சிறை புகுந்த அண்ணு ஜூன் 13ல் விடுதலையாகிறர்

இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்டு ஆறு மாத கடுங்காவல் சிறைத்தண்டனை பெற்ற தி. மு. க. தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் யூன் மாதம் 13ம் திகதி விடுதலையாகிறர். இவருடன் கைது செய்யப்பட்டு சிறை சென்ற ஏனைய நால்வரும் இம் மாதம் 23 ம் திகதி விடுதலையாகிறர்கள்.

இந்தி ஆட்சிமொழியாக்கப்படுவதை எதிர்த்து திராவிட முன்னேற்றக்கழகம் இரு முனைப் போராட்டத்தைக் கடந்த ஆண்டு செப்டம்பர்த் திங்களில் ஆரம்பித்தது. செப்டம்பர் 17ம் நாள் அறிஞர் அண்ணு தலைமையில் ஐவர் அடங்கிய குழு இந்தியை ஆட்சிமொழியாக்கும் இந்திய அரசியல் சட்டத்தின் 17ம் பிரிவை சென்னை மரீனு கடற்கரையில் வைத்து எரியூட்டுவதுடன் இந்தி எதிர்ப்பு அறப்போரை ஆரம்பிப்பதாக அறிவித்தல் கொடுத்திருந்தது. ஆனல் சட்ட எரிப்பு

(9-ம் பக்கம் பார்க்க)

## இ. த. அ. கட்சி கொழும்புக் கிளை

இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளைக் கூட்டம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் 16, அல்பிறட்கவுஸ் தோட்டம், கொழும்பு-3 முகவரியிலுள்ள கட்சித் தலைமை நிலையத்தில் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் ஒரு இலக்கியப் பேழை

## வரலாற்று ரீதியில் ஆராய்ச்சி வேண்டும்

திருக்குறள் தோன்றுவதற்குரிய காரணத்தை வரலாற்று ஆதாரத்துடன் புதிய கண்ணோட்டத்தில் விளக்க முற்பட்ட கட்டுரை ஆசிரியர், குறளில் காணப்படும் அமைதி, சிறப்பு, மரபு, பண்பு ஆகியவற்றையும் சிறப்புறக் கூறியுள்ளார். ஈற்றில் தமிழ் இலக்கியத்தின் தொன்மைக்கும் சிறப்புக்கும் எடுத்துக் காட்டாக உள்ள திருக்குறள் பற்றி வரலாற்றுக் கருவூலம் என்ற அடிப்படையில் ஆராய்ச்சி செய்யாதது பெரும் குறை என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அற நூல்கள் இலக்கியமாகக் கொள்ளப்படுவது தமிழ் மொழிக்கே சிறப்பாயுள்ள அம்சமாகும். இத்தகைய அற நூல்களின் வரிசையில் திருக்குறள் பொருட் சிறப்பிலும், கவி நயத்திலும் மொழி வளத்திலும் சிறப்பிடம் பெறுகின்றது. திருக்குறள் தமிழிலக்கியச் சோலையில் பூத்த வண்ண மலர். தமிழின் பெருமையை உலகறியப் பறைசாற்றும் இலக்கியக் கருவூலம்.

திருக்குறளின் சிறப்பைப் பூரணமாக உணர்வதற்கு அந்நூல் தோன்றிய காலப் பிரிவின் சமுதாய, வரலாற்றுச் சூழ்நிலைகளை அறிதல் அவசியமாகும்.

### காலம்

திருக்குறள் சங்கமருவிய காலத்தெழுந்த நூலென்பர். சங்கமருவிய காலத்தில் தமிழ் மக்களுக்கு முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கை முறை, கொள்கை, கோட்பாடு என்பன தமிழ் நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. பௌத்தம், சமணம் என்பன வேரூன்றி வளரத் தொடங்கின. இதன் காரணமாகத் தமிழ் மக்கள் ஆண்டாண்டு காலமாகப் பேணி வந்த கொள்கை, கோட்பாடுகளுக்கும், பௌத்தம், சமணம் போன்ற மதங்கள் அறிமுகப்படுத்திய கொள்கை கோட்பாடுகளுக்குமிடையில் மோதல் ஏற்படுவது தவிர்க்க முடியாத நியதியாகியது. இத்தகைய மோதலையும், முரண்பாட்டையும் சங்கமருவிய காலப் பிரிவில் நாம் காண்கிறோம்.

சங்க காலப் பிரிவில் தமிழ் மக்கள் கள்ளருந்தல், புலால் உண்ணல், பரத்தையர் தொடர்பு என்பனவற்றைத் தவருகக் கொள்ளவில்லை. மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த, நாளாந்த, இயற்கை நிகழ்ச்சிகளாகவே சங்க கால மக்கள் இவற்றைக் கொண்டனர்.

### அமைதி

சங்க மருவிய காலத்தில் கள்ளுண்ணுமை, புலால் உண்ணுமை, பரத்தையர் ஒழுக்கத்தால் ஏற்படும் தீமை என்பனவற்றை விளக்கும் தோரணையில் சமண, பௌத்த மதங்கள் பிரசாரஞ்செய்ய ஆரம்பித்ததும், இந்த முரண்பாடும், மோதலும், சமுதாயத்தை மிகவும் பாதித்தது. சமுதாயத்தில் இத்தகைய முரண்பாடும், மோதலும், தோன்றிய காலப் பிரிவில், இந்த மோதல்கள், முரண்பாடுகளுக்கிடையில் அமைதி காணும் முயற்சியும் இலக்கியத் துறையில் நடைபெற்றது. இத்தகைய ஒரு முயற்சியே வள்ளுவரின் குறள்.

**எம். ஏ. எம். சுக்கிரி**

முரண்பாடு, மோதல் என்பவற்றினல் ஏற்பட்ட சிந்தனை, மயக்கம், கருத்து மயக்கம் என்பனவற்றிலிருந்து சமுதாயத்தை விடுதலை செய்தது குறள். இத்தகைய ஒரு பெரும்பணியை வள்ளுவர் செய்தார். இந்த அமைதி காணும் முயற்சி வள்ளுவருக்குப் பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்க வேண்டும். ஒன்றுக்கொன்று முரணுன இரண்டு அம்சங்களுக்கிடையே ஒற்றுமை காண முனைவதுஇலகுவான தொழிலன்று.

### சிறப்பு

நீத்தார் பெருமையில் "உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான் வரனென்னும் வைப்பிற்கோர் வித்து" என ஐம்புலன்களையும் அடக்குவோரின் சிறப்பை வியந்து போற்றும் வள்ளுவர் இல்வாழ்க்கையைப் பற்றிப் பேசும் பொழுது அதனைச் சிறப்பாகப் போற்றுகின்ருர். இதனை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் பொழுது வள்ன்வர் முன்னுக்குப் பின் முரணுன கருத்துக்களைத் தெரிவிக்கின்ருர் என்றே தோன்றுகின்றது. ஆனல் அன்றைய சமுதாயச் சூழ்நிலையில் வள்ளுவருக்கு இருந்த பிரச்சினையும், அவர் அதனைச் சமாளிக்கும் திறமையும் நாம் தெரிந்து கொண்டால் அவர் ஒன்றுக்கொன்று முரணுன அம்சங்களை, மோதலேற்படாத வகையில் நுண்ணிய முறை தொடர்புபடுத்திக் காட்டும் சிறப்பை எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது.

சங்கமருவிய காலத்தில் அறநூல்களே பெருமளவிற்குத் தோன்றின. அறம் பற்றிய கோட்பாட்டின் தீவிர ஆதிக்கம் காரணமாக அற நூல்கள் பெருமளவிற்குத் தோன்றினுலும், கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, போன்ற புறத்திணை நூல்களும் பழைய மரபைப் பேணிய நிலையில் தோன்றின. எனினும் திருக்குறளை நாம் முழுக்க முழுக்க அற நூலென்ருே, அன்றி அகத்திணையின் பாற்பட்டதென்ருே, புறத்திணையின் பாற்பட்டதென்ருே கூற முடியாது.

திருக்குறளின் அடிச் சரடாக ஓடுவது அறம். ஆனல் அறக்கருத்துக்கள் கூட மிக நுண்ணிய முறையில் அகத்திணைக் கருத்துக்களோடு இணைக்கப்பட்டு விளக்கப் பட்டிருப்பது திருக்குறளின் சிறப்பாகும்.

### மரபு

அதே நேரத்தில் அகத்திணை பற்றி சில கருத்துக்களை விளக்கும் பொழுது தமது அடிப்படைக் கோட்பாடான அறம் பற்றிய கொள்கையோடு, அது முரண்படும்பொழுது பழைய மரபையே மீறத் துணிந்து விடுகின்ருர் வள்ளுவர். உதாரணமாக மருதத் திணைக்கு ஊடலை ஒழுக்கமாகக் கொள்வது மரபாகும். சங்கப்பாடல்களில் மருதத் திணையில் கணவன் பரத்தையர் வீடு செல்வதன் காரணமாக, தலைவிக்கு ஊடல் ஏற்படுவதாகக் கொள்ளப்படும்.

திருவள்ளுவர் பரத்தையர் ஒழுக்கத்தை வெறுப்பவராதலாலும், இந்த இலக்கணம் தமது அறம் பற்றிய கோட்பாட்டோடு முரண்படுவதாலும், தமது முன்னோர் வகுத்த இலக்கணத்தையே மீறத் துணிந்தார்.

வள்ளுவரது காமத்துப் பாலில் பரத்தையரைக் காண முடியவில்லை. சங்க இலக்கியங்களில் பரத்தையர் காரணமாக ஏற்படும் ஊடல் குறளில் வேறு காரணங்களாலும் ஏற்படுவதாகக் குறிக்கப்படுகின்றது.

(15-ம் பக்கம் பார்க்க)

## திருக்குறள் மாநாடு

### கரணவாயில் நடைபெறும்

தமிழ்மறைக் கழகத்தின் பன்னிரண்டாவது திருக்குறள் மாநாடு கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் 24, 25, 26ம் திகதிகளில் கரணவாய் உப அஞ்சல் நிலையத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள 'பூதன் தேவனுர்' அரங்கில் நடைபெறும். இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் மாநாட்டைத் திறந்து வைப்பார்.

#### உரையரங்கு

24ம் திகதி பிற்பகல் 4 மணியளவில் கரணவாய் கலட்டிப்பிள்ளையார் கோவிலிலிருந்து திருக்குறள் ஏட்டுச் சுவடி ஊர்வலம் ஆரம்பமாகி, கூட்ட மைதானத்தை வந்தடையும். அன்றைய நிகழ்ச்சிக்கு உலகத் தமிழ் மன்றத் தலைவரும் தமிழ் மறைக் கழகத் தலைவருமாகிய பேராசிரியர் திரு. கா. பொ. இரத்தினம் தலைமை வகிப்பார். திரு. க. முத்துவேலு வரவேற்புரை நிகழ்த்துவார். திருவாளர்கள்: பொன்கிருஷ்ணபிள்ளை, இ.க. முருகேசு, நீ.மே.யோ. வேதநாயகம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் முறையே 'வள்ளுவர் உயர் கருத்து', வள்ளுவர் கண்ட வாழ்க்கை நலம்', 'குறளும் விவிலியமும்', 'வள்ளுவரும் கம்பனும்'என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்கள்.

#### சிறப்புரை

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் 'திருக்குறளும் அரசியலும்' என்னும் பொருள் பற்றிச் சிறப்புரை நிகழ்த்துவார்.

உடுப்பிட்டி அ.மி. கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்ச்சியும், 'புல்டா மகாராஜா' என்னும் நாடகமும் இடம் பெறும்.

#### இரண்டாம் நாள் நிகழ்ச்சி

இரண்டாம் நாள் நிகழ்ச்சி உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் திங்கட்கிழமை மாலை

(15-ம் பக்கம் பார்க்க)

## திருக்குறள் மணி தேர்வு 1965-70

திருக்குறள் மணித் தேர்வு 1965-1970க் குரிய விபரங்களைக் கீழே தருகிருேம். இவற்றை 58, உருத்திரா வீதி, கொழும்பு 6 லுள்ள தமிழ் மறைக் கழகத்தின் செயலாளர் திரு. நீ. மே. யோ. வேதநாயகமும், தலைவர் திரு. கா. போ. இரத்தினமும், அனுப்பி வைத்துள்ளனர். விவரங்கள் பின் வருமாறு:—

#### தேர்வு நாளும் இடங்களும்

இத்தேர்வு ஆண்டு தோறும் யூன் திங்களில் மூன்ருவது சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பின் வரும் இடங்களில் நடை நடைபெறும். யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, மதுரை, திருச்சிருப்பள்ளி, சென்னை, கோலாலம்பூர், இறங்கூன்.

#### தேர்வுக்குத் தோற்றுதற்குத் தகுதியுடையோர்

அண்ணுமலைப் பல்கலைக் கழக, சென்னைப் பல்கலைக் கழகம் முதலியவற்றின் புலவர், வித்துவான் பட்டங்களில் ஒன்றையேனும், மதுரைத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் முதலியவற்றின் பண்டிதர் பட்டத்தையேனும், பல்கலைக் கழகங்களில் சிறப்பு பி. ஏ. (தமிழ்) பி. ஓ. எல் முதலிய பட்டங்களில் ஒன்றையேனும் பெற்றவர்களே இத்தேர்வுக்குத் தோற்றத் தகுதியுடையவராவர்.

இப்பட்டங்களைப் பெருதவர்களாயிருப்பினும் தமிழ்ப் புலமை மிக்கவர்களும் தமிழ் மறைக் கழக ஆட்சிக்குழுவின் ஒப்புதல் பெற்று இத் தேர்வுக்குத் தோற்றலாம்.

#### தேர்வுப் பாடப் பகுதிகள்

பகுதி 1.

(அ) திருக்குறள் முழுவதும் பரிமேலழகர் உரையுடனும் மணக்குடவர் உரையுடனும்.

(ஆ) இன்றுவரை எழுதப்பட்ட பிற உரைகளும் அவற்றின் நிறை குறைகளும்.

(மூன்று மணிகொண்ட ஒரு வினுத்தாள்)

பகுதி 2.

(அ) திருக்குறள் தோன்றிய காலமும் சூழலும்.

(ஆ) திருக்குறள் கூறும் "அறம் பொருள் இன்பம்" வடமொழி-கிரேக்கம்- இலத்தின் ஆங்கிலம் எனும் மொழிகளிலுள்ள நூல்கள் கூறும் அறம் பொருள் இன்பமும்-ஒற்றுமை வேற்றுமை.

(இ) திருக்குறளும் சமய முதனூல்களும் (கிறித்தவம், பௌத்தம், இஸ்லாம், இந்து சமயங்கள்)

(ஈ) திருக்குறளைப் பற்றித் தமிழகத்திலே தோன்றிய ஆராய்ச்சி நூல்கள்.

(உ) திருக்குறள் ஊக்கிய நூல்கள்-சிறப்பாகச் சங்க நூல்களும் காப்பியங்களும்.

(ஊ) திருக்குறள் மொழி பெயர்ப்புக்கள்.

(மூன்று மணி கொண்ட ஒரு வினுத்தாள்.)

பகுதி 3.

ஆய்வுரை—(முழுத்தாளில் நூறு பக்கங்களுக்குக் குறையாமல் எழுதப்படல் வேண்டும்)

திருக்குறளோடு தொடர்புடையதொரு பொருளைத்

(11-ம் பக்கம் பார்க்க)





பாட்டாளி முதல் பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நிர், 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி 3597—6522

தந்தி தாமரை


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மோ. ரொசாரியோ,
கொழும்பு-2

கே: காதலின் தனிச்சுவை யாது?

ப: இன்பக் கனவு.

ஃ

முல்லைநாதன்,
கொழும்பு-10

கே: 'கொட்டை? கோடை கொடை' இவ் எழுத்துக்களை யுடைய பெயர்ப் பலகைகளைக் கொண்ட பஸ் வண்டிகள் எங்கு செல்பவை?

ப: எல்லாம் "கோட்டை"க்குதான்.

ஃ

மோ. ரொசாரியோ,
கொழும்பு-2.

கே: சிறி லங்கா சுதந்திரக் கட்சியினதும், இடதுசாரி ஐக்கிய முன்னணியினதும் கூட்டாட்சி நாட்டுக்கு நலன் தருமா?

ப: கூட்டாட்சி அமுல் நடத்தும் திட்டங்களைப் பொறுத்தே நன்மை தீமைகளை நிர்ணயிக்க முடியும்.

கே: நியமன அங்கத்தினராக தன்னை நியமிக்கும்படி கவர்னரை வேண்டி, நியமனமும் பேற்று, மக்கள் பிரதிநிதி சபையில் அம்மையார் அமர்ந்தால், அவர் எந்த சமூகத்தினருக்கு பிரதிநிதியாக இருப்பார்?

ப: மலைநாட்டு "ரதல" (நிலப் பிரபுக்கள்) சமூகத்துக்கு என்று நான் கூறமாட்டேன்.

ஃ

சிங்காரவேலு, கண்டி.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன், அதற்கு அவளுடைய தந்தையும், சகோதரனும் தடை போடுகிறார்கள், நான் என்ன செய்வது?

ப: தடையா! காதல் நிச்சயம் வளரும்; கவலைப் படேல்.

ஃ

இரா. வெ. அழகர்சாமி,
பண்டாரவளை.

கே: உலகில், ஒவ்வொரு மொழியினருக்கும் கட்டாய இருமொழித் (தன் தாய் மொழியும்-உலக மொழியும்) திட்டம் ஏற்படவில்லை என்றால், உள்நாட்டில் ஒற்றுமையும், முன்னேற்றமும் காண முடியாது என்பது என் கருத்து. தங்கள் கருத்து?

ப: பேஷ்! அருமையான கருத்து! ஆனால் ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் விரும்பாதவர்கள் ஏன் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதைக் கூற முடியுமா?

ஃ

பரமேஸ்வரி,
ஏழாலை மேற்கு

கே: என் போன்ற சகோதரிகள் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் தற்கொலை புரிவதன் அர்த்தம் என்ன?

ப: வானுலகில் பரீட்சைகள் வெகு சுலபமென்று இங்கு ஒரு வதந்தி அடிபடுகிறது இதை நம்பி அங்கு செல்கின்றனர். ஏமாந்து விரைவில் திரும்பி விடுவர் பூவுலகத்துக்கு.

ஃ

என். வதூத், கம்பளை

கே: காதல் திருமணம் சிறந்ததா? பெற்றோர்கள் செய்து வைக்கும் திருமணம் சிறந்ததா?

ப: பெற்றோர்கள் சம்மதத்தையும் பெறமுடியுமானால் காதல் திருமணமே சிறந்தது.

ஃ

மு. கருணாநிதி,
ஏழாலை மேற்கு

கே: ஓய்! குயுக்தி மாமா! மூன்றும் உலகப் போர் ஏற்படுமா?

ப: உலகப் போர் ஏற்படவிருந்த இரு வாய்ப்புகள் (கியூபா நெருக்கடி, சீன ஆக்கிரமிப்பு) தவறிவிட்டன. கடைசியாக உலகப் போர் ஏற்படுமென எதிர்பார்த்த மலேசியா-இந்தோனேஷிய தகராறும் புஷ்வாணமாகி விட்டது.




ச. சபாநேசன்,
காரைநகர்

கே: தேசியத் தொழிற் சங்கங்கள் எக்காரணத்தைக் கொண்டு தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களைக் கைவிட்டன?

ப: அவை பின்னர் சர்வதேசியத் தொழிற் சங்கங்களாக வளர்ந்துவிட்டதால், இந்தச் சின்னஞ் சிறு தொகையினரை மறந்து விட்டனராம்.

ஃ

ந. கேதீஸ்வரன்,
வெள்ளவத்தை

கே: குயுக்தி மாமியின் கருத்தை வெளியிடும் நீங்கள் அவரிடமே உங்கள் வேலையை ஒப்படைத்தாலென்ன?

ப: அவர் கேள்வி கேட்பவரேயன்றி விடை அளிப்பவரல்ல!

ஃ

லிங்கம்,
யாழ்ப்பாணம்

கே: என்னை ஒரு பெண் சுமார் ஒன்றரை வருடமாகக் காதலித்தாள். விடுமுறைக்குக் கொழும்புக்குச் சென்றுவந்த நாள் தொடக்கம் என்னைத் திரும்பியும் பார்க்கிறாள் இல்லை. அதற்கு என்ன செய்வது? என்ன செய்தால் அவளை என்பால் இழுக்கலாம்?

ப: அதற்கு ஒரே வழி நீங்களும் கொழும்புக்கு ஒரு முறை சென்றுவருவதுதான். கொழும்பிலே காதல் உலகம் நவீனத் தன்மை வாய்ந்தது. அந்த உலகில் அவள் ஏற்கனவே நுழைந்துவிட்டாள். நீங்களும் அதில் நுழைந்து பார்த்தால்தான் பிரச்சினை தீர வழி பிறக்கும்.

ஃ

அப்துல் பரீது,
கின்னியா

கே: எங்கள் பக்கத்துக் கடையில் பழைய சாமான்களை விற்கிறார்கள், அதற்கு என்ன செய்வது?

ப: அதில் தவறில்லை-வாடகைக்கு விட்டால்தான் நீங்கள் ஆட்சேபிக்க முடியும்.

ஃ

ஏ. தங்கவேலு,
சின்ன மட்டுக்கொ[illegible]

கே: கூட்டாட்சியினால் தமிழர்களுக்கு விமோசனம் கிடைக்குமா?

ப: சில சலுகைகள் கிடைக்கலாமென எதிர்பார்ப்பவர்களுமுண்டு. திரு. பீலிப் போன்ற வகுப்புவாதிகள் சேருவதால் எதையும் எதிர்பார்க்க முடியாது என்று கூறுவோரும் உண்டு. மொழி விஷயத்தில் கூட்டாட்சி எந்த மாறுதலையும் செய்யக் கூடாதென ஆளும் கட்சியில் ஒரு பகுதியினர் வேறு வற்புறுத்துகின்றனர். எந்த அடிப்படையில் கூட்டு ஏற்படுகிறது என்பதை அவதானித்தால் உண்மை புலனாகும்.

ஃ

உதயவன்,
வெள்ளவத்தை

கே: சிறிமாவுக்கு நீங்கள் இப்போ கூற வேண்டிய ஆலோசனை என்ன?

ப: 'எதையும் தாமதம் செய்யும் "இராஜ தந்திரத்தை"க் கைவிடுங்கள்' என்பதுதான்.

கே: 'ஜனநாயகமும் நாமும்,' 'இலங்கையின் சுதந்திரபுருஷன்' என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதி வைத்திருக்கின்றேன். அனுப்பினால் பிரசுரிப்பீர்களா?

ப: அந்தச் சிரமம் உங்களுக்கு வேண்டாம். அவற்றை நீங்களே பாதுகாப்பாக வைத்திருங்கள். பிற்காலத்தில் அவை உங்களின் நினைவுச் சின்னமாக இருக்குமல்லவா?

கே: என் நண்பன் சிங்களத்தைப் பகிரங்கமாக வைத்துப் படிக்கின்றான், ஏன் சிங்களத்தைப் படிக்கிறாய் என்று கேட்ட போது, நண்பன் 'நான் சிங்களம் படிப்பது உத்தியோகம் எடுப்பதற்கல்ல, அரசாங்க மொழியென்றல்ல, சிங்களம் படித்தால் சிங்களப் பத்திரிகைகளில் தமிழருக்கு எதிராக என்ன கூறுகிறார்கள் என்பதை அறிந்து அதற்குத் தகுந்த பதில் தமிழிலே எழுதுவதற்கே' என்கிறான்!

ப: அதற்காகச் சிங்களம் படிக்க வேண்டியதில்லை. வாரந்தோறும் தவறாது சுதந்திரனை வாசிக்கச் சொல்லுங்கள். சிங்கள ஏடுகளில் தமிழருக்கெதிராகப் பிரசுரிக்கப்படும் செய்திகள், கட்டுரைகள், தலையங்கங்கள் ஆகியவற்றின் சரியான மொழிபெயர்ப்பு வாரா வாரம் சுதந்திரனில் தரப்படுகிறது.

ஃ

ஆர். அமுது,
நெடுந்தீவு

கே: இடதுசாரி ஐக்கிய முன்னணியில் அங்கத்துவம் வகிக்கும் பிலிப்பிற்குக் கூட்டரசாங்கத்தில் இடம் கிடைக்காதாம் ஏன்?

ப: காதலியைக் கைவிட்டு ஓடிய காதலன் மீண்டும் அதே காதலியை அடைய முயற்சி செய்யும்போது பல இடைஞ்சல்கள் குறுக்கிடுவது இயல்பே.

ஃ

எஸ். எஸ். நாதன்,
செங்கலடி

கே: குடும்பவாழ்க்கை எதைப் போன்றது?

ப: வானவெளிப் பயணத்தைப் போன்றது, மயிரிழை தவறினாலும் மரணம்தான் மிஞ்சும், எதையும் காலம் தாழ்த்தி உணர்வது குடும்ப வாழ்க்கையின் லட்சணம்.

கே: அரசாங்கத்தால் கூட்டுவதாகச் சொல்லப்பட்ட 'சர்வகட்சி வட்டமேசை' மகாநாடு என்னவாயிற்று?

ப: வட்டமேசை கிடைக்காவிட்டால் சதுர மேசையிலும் சர்வகட்சிகளையும் கூட்டலாம். மேசைப் பிரச்சினை தடையாக இருக்கமுடியாது. அனுமார் வாலாக மாறி வரும் கூட்டாட்சிப் பேச்சுதான் தடையாக மாறியுள்ளது. அது தீரட்டும் பார்ப்போம் ஒரு கை!

ஃ

ஞா. பழனித்தம்பி, களுதாவளை.

கே: தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளும் தமிழ்வாணனைப் பற்றி தங்கள் கருத்து யாது?

ப: அவரைப் போன்ற சிலர் இந்நாட்டு எழுத்தாளர் மத்தியிலும் உண்டு.

## குறளமுதம் (இசைப் பாடல்)

—இயற்றியவர்:- 'சிற்பி'—

இராகம்: ஆரபி. தாளம்: ஆதி.

### எடுப்பு

வள்ளுவன் அள்ளித் தந்த தெள்ளு தமிழ்க் குறளை
உள்ளும்போ தெங்களுள்ளம் துள்ளி மகிழ்ந்திடுதே.

### தொடுப்பு

அறம் பொருள் இன்பத்தை அழகாயெடுத்துரைத்து
மறவாது விட்டினையும் மனத்தில் நினைக்கும்படி—வள்ளு

### முடிப்பு

அன்பு அறன் அறிவு ஆழ்ந்த கடவுட் பக்தி
இன்சொல் நல்லொழுக்கம் நன்றி இடையறு முயற்சியையும்
என்றுமே போற்றி செய்து எழிலுறு மிலட்சியமோ(டு)
இவ்வுலகந்தன்னிலே இனியதோர் வாழ்வு காண

அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றேயுல கென்று தொடங்கி
ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின் என்று முடிக்கும்—வள்ளு

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்[illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் மலர்

# திருக்குறள் மொழிபெயர்ப்புகள்

—பேராசிரியர் கா. பொ. இரத்தினம்—
தலைவர் : உலகத் தமிழ் மன்றம்

வள்ளுவன் உலகுக்கு அளித்த அழியாச் செல்வம் திருக்குறள். அச்சிரிய நூல், இன்று உண்மையிலேயே உலகப் பொதுமறையாக மாறி வருவதை எம்மால் காண முடிகிறது.

ஆங்கிலம் தொடக்கம் ருஷிய மொழிவரை, இன்று பல்வேறு மொழிகளிலும் வள்ளுவர் நடமாடுகிறார்.

தமிழ் மறை எந்தெந்த மொழிகளில், எந்தெந்த நாடுகளில் இது வரை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதை விவரிக்கும் இக் கட்டுரையாசிரியர், யப்பான், சீனம், சைகோன் ஆகிய இடங்களிலும் அதை மொழிபெயர்ப்பிப்பதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஒரு மொழியிலுள்ள சிறந்த நூல்களைப் பிற மொழிகளில்மொழிபெயர்த்தல் ஒரு சிறந்த கலையாக இன்று போற்றப்படுகிறது. ஐக்கிய நாடுகளின்நிறுவனம் போன்ற பெரும் நிறுவனங்களும் இப்பணியை ஊக்கி வருகின்றன. பல்லாயிர ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறந்து வாழ்ந்துவரும்தமிழ் மொழியிலே மொழிபெயர்ப்பு நூல்கள் பலவுள. மிகுந்த பழைமை வாய்ந்த தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூலிலே மொழிபெயர்ப்பும் நூல்களை ஆக்கும் முறைகளில் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. வடமொழியிலுள்ள பல நூல்கள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டுள. தமிழிலுள்ள நூல்களும் வடமொழியிற் பெயர்க்கப்பட்டுள.


உலகத்திலுள்ள மொழிகளிலே மிகத் தொகையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டநூல் கிறித்தவ சமய நூலாகிய பைபிளேயாகும். இதற்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ள நூல் இஸ்லாமிய சமயநூலாகிய கோரான் ஆகும். இந்த இரு நூல்களும் இருபெருஞ் சமயங்களின் முதநூல்களாகும்.

சமயச் சார்பற்ற நூல்களுள்ளே தமிழ்மறை எனவும் பொதுமறை எனவும் போற்றப்படும் திருக்குறளே மிகத் தொகையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூலாகும். மேனுட்டு மொழிகளில் முதன் முதலாக மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நூலும் திருக்குறளேயாகும்.

மேனுடுகளிலிருந்து கிறித்தவ சமயப்பணியாற்றுதற்குத் தமிழகம் புக்க சமயத் தொண்டர்களிற் பெரும்பாலாரைத் திருக்குறள் ஈர்த்து ஈர்த்து இன்புறுத்திற்று. திருக்குறளின் ஒப்புயர்வில்லாத சிறப்பினை உணர்ந்த அப்பெருமக்கள் அதனைத் தம் நாட்டவரும் படித்துப் பயன்பெறுதற்காகத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்தார்கள்.

## இலத்தீனில்

தமிழை முறையாகக் கற்றுப் புலமைபெற்றுத்தமிழ்த் தாய்க்குப் பல தொண்டுகள் செய்து புகழ்பெற்ற மேனுட்டறிஞர்களுள்ளே முன்னணியில் விளங்குபவர் இத்தாலிய நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த பெசுக்கி எனும் சமயத்தொண்டராவார். வீரமா முனிவர்எனுந் தமிழ்ப்பெயரைத் தம்பெயராகக் கொண்ட இப்பெரியார் தேம்பாவணி எனுந் தீந்தமிழ்க் காப்பியத்தை ஆக்கிய பெருஞ் சிறப்புக்கு உரியவர். இவர் ஆயிரத்தெழுநூற்றுமுப்பதாம்ஆண்டிலே திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். ஐரோப்பிய மொழிகளில் முதன்முதலாக வெளிவந்த திருக்குறள் மொழிபெயர்ப்பு இவருடைய மொழிபெயர்ப்பேயாகும் என்பர்.



இரங்கூனிலுள்ள அகில பர்மாத் தமிழர் சங்க மண்டபத்தில் உலகத் தமிழ்மன்றத் தலைவர் பேராசிரியர் கா. பொ. இரத்தினம் திருக்குறளைப் பர்மிய மொழியில் மொழி பெயர்த்த திரு வி. மியோ தன்னுவுடன் உரையாடுகிறார்

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிற் செய்யப்பட்ட இம் மொழிபெயர்ப்பின் பின்னர் ஆயிரத்துத் தொண்ணூற்றுப் பன்னிரண்டாம் ஆண்டில் எச். இடபிள்யு. எல்லிசு என்பவர் திருக்குறளின் சில குறள்களை ஆங்கில மொழியிற் பெயர்த்தார். இம்மொழிபெயர்ப்பே முதன்முதலாக ஆங்கிலத்திற் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பாகும். தம் மொழிபெயர்ப்புடன் இவர் [illegible] வாகக் கருத்துரையும் [illegible] நல்கியுள்ளார். இவருடைய கருத்துரையினைச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுளது.

## ஆங்கிலத்தில்

இப்பொழுது திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் இருபத்துக்கு மேலுள. இவற்றை மேனுட்டவரும் தமிழ் நாட்டவரும் ஆக்கியுளர். மேனுட்டவர்கள் பெரும்பாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தம் மொழிபெயர்ப்புக்களைச் செய்துளர்.

தமிழ்மொழியினை நன்கு கற்று அதன் அருமை பெருமைகளில் ஈடுபட்டுத் திருவாசகத்தையும் திருக்குறளையும் நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெருந்தகையர்கள் சி. யு. போப் அவர்களைத்தமிழுலகு நன்கறியும். தம்முடைய கல்லறையிலே தம்மை 'ஒரு தமிழ் மாணவன்' என்றெழுதுமாறு பணித்த இத் தமிழ்த் தொண்டரைத் தமிழ்மக்கள் போப்பையர் என்று போற்றுகின்றனர். இவர் திருக்குறளை மொழிபெயர்த்த ஆண்டு ஆயிரத்தொண்ணூற்றெண்பத்தாறாகும். இவருடைய மொழிபெயர்ப்பினைச்சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் சிறப்புறப் பதித்து வெளியிட்டிருக்கின்றனர்.

## பிற ஐரோப்பிய மொழிகளில்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே திருக்குறளைச் சேர்மன் மொழியிலும், பிரஞ்சு மொழியிலும் மொழிபெயர்த்துள்ளனர். திருக்குறள் முதன் முதல் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையைப் பெற்ற மொழி இலத்தீன் எனக் கண்டோம். அடுத்து ஆங்கில மொழி இடம் பெறுகிறது. மூன்றாவதிடம் பிரஞ்சு மொழிக்குரியது. நான்காவதிடத்தைப் பெறும் ஐரோப்பிய மொழி சேர்மன் மொழியாகும். போலிசு மொழியிலும் உருசிய மொழியிலும் கூட திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## கீழ் நாட்டு மொழிகளில்

[illegible] நூற்றாண்டில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சமக்கிருதத்தில் மூன்று மொழிபெயர்ப்புகள் உள. இன்று வரை இந்தி மொழியில் வெளியான திருக்குறள் மொழிபெயர்ப்புக்கள் நான்கு. மலையாள மொழியிலே நான்கு பேரறிஞர்கள் திருக்குறளை மொழிபெயர்த்துளர். கன்னடத்தில் நீதிமஞ்சரி எனும் பெயருடன் நரசிம்மாச்சாரியார் திருக்குறளை மொழிபெயர்த்தார். ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தொன்பதளவில் நளின்மோகன் சன்யால் என்பவர் தமது வங்காள மொழிபெயர்ப்பை வெளியிட்டார். மராட்டி மொழியில் ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டில் சானே குருசி என்பவர் மொழிபெயர்த்தார். தெலுங்கில் மொழிபெயர்த்தவர் கனுப்பார்த்தி வேங்கடராம வைத்தியநாதர்.

## சிங்களத்தில்

சிங்களமொழியில் சென்ற ஆண்டில் புஞ்சிகாமி எனும் பெண்மணி முதன் முதலாகத் திருக்குறளை மொழிபெயர்த்தார். இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் சார்பிலும் திருக்குறள் மொழிபெயர்ப்பு நடைபெறுகிறது.

பர்மாத்தீவு வைசிய இளைஞர் சங்கத்தின் பெருமுயற்சியால் திரு. வி. மியோ தான்று ஆக்கிய பர்மிய மொழிபெயர்ப்பு இவ்வாண்டில் நூலாக்கப்பட்டுள்ளது. பிஜூச்சித்தீவில் வெளியாகும் 'பசிபிக்கா' எனும் வெளியீட்டின் ஆசிரியர் திரு. வி. எல். பேர்னிக்கு கைவித்திய மொழியின் திருக்குறளை மொழிபெயர்த்து வருகிறார். இவ்விரு மொழிபெயர்ப்புக்

(11-ம் பக்கம் பார்க்க)



# காலம் வியக்கும் கவி

—"பாண்டியூரன்"—

பூவின் மகரந்தப் பொடியுட் பெருங்கடலை
சேமித்த தீரச் செழுங்கவியே! சேவித்தேன்
உள்ளக் கமலத்(து) உறையும் இறையுன்னை,
கொள்ளத்தான உண்டோ குறை?

வெல்ல இனியொருசொல் இல்லா இலக்கியத்தைச்
சொல்லி முடித்தாய் சுருதியென; தொல்லுலகில்,
கன்னித் தமிழின் கருவில் உதித்தகுறள்
அன்னை புகழுக்(கு) அணி!

அன்னைத் தமிழின் அழகைப் பிறவுலகோர்
சென்னிக் குயர்த்துஞ்சீர் செய்தவனின்;
பொன்குறளைப்
பேணுத் தமிழன் பிறந்தும் பெருமிருகம்!
நாணுவேன் கண்டவரின் நட்பு!

பாடல் பலகோடி பாடிப் புகழ்ந்திடினும்
ஈடாமோ வுந்தன் இலக்குக்கு? வாடாத,
கற்பகமே! வாழ்வுக் கருவை யுலகறியக்
கற்பித்தீர் ஐயா கலை!

இல்வாழ்வு, கற்பு, இரங்கல்...இறைமாட்சி,
பொல்லாங்கு இல்லாப் பொருளீட்டல்; நல்மகவு...
காத லுயர்பண்பு...கல்வி, யிறைமாட்சி...
ஓதினீர் வீரத் துயர்வு!

காலச் சுழலைக் கடத்தும் கதிரவன்போல்
காலத்தை வென்ற கவிச்சுடரே! ஞாலத்தில்,
காலப் பிணிக்குக் கடைந்தீர் குறளமுதம்!
காலம் வியக்கும் கவி!

முப்பால் அறத்தில் மொழிந்த திருவாக்கு
தப்பா தொழுகும் தனயர்க்கு; எப்போதும்,
வீடுபேற் றின்பம் விரிந்து கிடக்குமென்று
பாடினீர்; பொய்யாதப் பாடல்!


பல்கி



புல் வெட்டும் கருவி

விரைவாக!




ஒரு சில துளி 3 இன் - ஒன் - ஓயில் விரைவாக இயங்க உதவுகிறது. எல்லா பகுதிகளுக்கும் ஊடுருவிச் செல்கின்றது. பிசாண் தன்மையை ஏற்படுத்தாது.

3 இன் - ஒன் - ஓயில்

ஒழுங்கான ஓயில் ஸ்பிரே
மின்சார மோட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலன்று வென்றி தருவது

படையின் தொழில் தீமையை ஒழிப்பதாகும், பகைவரை அழிப்பதல்ல. அறத்திற்கு இடையூறு ஏற்படுங்கால் அதைத் தடுத்து நிறுத்துவதில் படையினர் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். படை பலத்தை வைத்து மாற்றானை அடிபணியச்செய்வது அறமாகாது. இது அன்றைய அரசியல் தத்துவம் மட்டுமல்ல; இன்றைய அரசியல் தத்துவமும்கூட. இன்றும்கூட கொம்யூனிஸ்டுச் சீன போன்ற நாடுகள் நேசநாடுகளை ஆக்கிரமிப்பதில் ஈடுபட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் வள்ளுவர். அவர் காலத்திலிருந்தது முடியாட்சி. இன்று பெரும்பாலும் நிலவுவது குடியாட்சி. இராணுவப்புரட்சிகளுக்கும் சர்வாதிகார ஆட்சிகளுக்கும் குறைவில்லை. எனினும் ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் அவர் வகுத்த நீதிமுறை என்றென்றும் போற்றிப் பின்பற்ற வேண்டியதொன்று.

### படையின் தொழில்

நாட்டைக் காக்க நல்ல படை வேண்டும். மறுக்கவில்லை வள்ளுவர். 'படைமாட்சி', 'படைச் செருக்கு' என்னும் அதிகாரங்களில் படையின் சிறப்புப் பற்றியும் படை வீரர்களுக்கிருக்க வேண்டிய வீரப் பண்புபற்றியும் விளக்குகிறார் வள்ளுவர். இராணுவ அதிகாரிகளும் வீரதீரசிகாமணிகளும் இவற்றைப் படிப்பதால் பயன் பல பெறலாம். தீமையை அழிப்பதே படையினரின் வேலை, பகைவரை ஒழிப்பதன்று. அறத்திற்கு இடையூறு வந்தபோதுதான் படையினருக்கு வேலை. பகைவருக்குத் துன்பம்வந்தபோதே உதவி செய்வதே ஆண்மைக்குச் சிறப்பாகும் என்கிறார் வள்ளுவர்.

"பேராண்மை என்ப தறுகண்;
ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"

படைபலம் மாத்திரம் ஓர் ஆட்சிக்கு அரணாகி விடாது. செங்கோலாட்சியும் தேவை. நீதியான ஆட்சியே—எல்லா மக்களுக்கும் சமநீதி வழங்கும் ஆட்சியே—வெற்றியோடு நிலைக்கும். படைபலத்தை நம்பி வாழ்ந்த அரசர்களோ அரசாங்கங்களோ நிலைத்தவையான செய்தி வரலாற்றில் இல்லை.

"வேலன்று வென்றி தருவது
மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்"

என்ற வள்ளுவன் குறளுக்கு விளக்கம் தேவை இல்லை.

### வள்ளுவம் பொய்த்ததில்லை

படைபலத்தால் வெற்றி பல கண்ட அசோகனும் கலிங்கத்திலே, படை துறந்து, புத்த தர்மத்தை ஏற்றுக் கொண்டான். இராணுவத்தை நம்பி

**மு. சிவானந்தன்**
**எம். ஏ.**

வாழ்ந்த நாசிச இட்லரையும், பாசிச முசோலினியையும் போற்றுவார் இன்றில்லை. எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான பொதுவுடைமைப் பூங்காவை ஆக்கிவிட்டான் ஸ்டாலின் என்றுதான் எண்ணியிருந்தோம். படைகொண்டு, பயங்கர ஆட்சி கண்டு பாழடித்து விட்டான் ஸ்டாலின் என்ற குரல் ஒலிப்பதை இன்று கேட்கிறோம். குருச்சேவும்



கட்டுரையாசிரியர்

கென்னடியும் படைக் குறைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். 'வேலன்று வென்றி தருவது' என்ற பொய்யாமொழி இதுவரை பொய்க்கவில்லை; இனியும் பொய்க்காது.

### ஏழை அழுத கண்ணீர்

படையைக் காட்டி மக்களை அடக்கிக் கொடுமைகள் பல செய்யலாம். ஆனால் அடக்கப்படும் மக்கள் விடும் கண்ணீரே கூற்றுவனுக்குச் சமமென்றார் வள்ளுவர்.

"அல்லற் பட்டாற்றாது அழுத
கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

ஏழையழுத கண்ணீர் கூரிய வாளொக்கும். லூயி மன்னர்களின் ஆட்சியின் கீழ் ஏழைகள் விட்ட கண்ணீர்தான் பிரெஞ்சுப் புரட்சியாக மாறியது. இரசியாவிலோ இரணியன் போலரசாண்டான் ஜாரென்னும் கொடுங்கோலன், நல்லோரும் சான்றோரும் அரணின்றித் தவித்துக் கண்ணீர் விட்டார்கள். ஆகாவென்றெழுந்தது யுகப்புரட்சி; கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்.

பிரித்தானியரின் இராணுவ ஆட்சியால் இந்திய மக்கள் பட்ட இன்னல்கள் அளப்பில. சுதந்திரப் பயிர் பற்றிப் பாடிய பாரதியாரும் 'கண்ணீரால் காத்தோம், கருகத் திருவுளமோ' என்று இறைவனிடம் உருகி முறையிட்டார். படைபலம் கொண்ட பிரித்தானிய வல்லரசு ஆட்டம் கண்டது.

### மானம் அழிந்த பின்...

ஆள்வோரின் படையைக் கண்டஞ்சி, அக்கிரமங்களை ஏற்றுக்கொள்வது ஆளப்படுவோரின் தவறு, பொறுத்துக் கொள்ளலாம்; காலம் வரும் மட்டுப் காத்திருக்கலாம்; ஆனால் என் செய்வோமென்று ஏங்கி அறமல்லாதவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடாது. மரணத்திற்கஞ்சி, இச்சகம்பேசி, வயிறு வளர்க்கும் ஈனரின் வாழ்வு இழிவானது. 'உணவினைப் பெரிதெனக் கொண்டு தம்முயிர் விற்றிடும்பேடியார்' எனப் பாரதியார் இவர்களைப் பாராட்டுகிறார்! இத்தகையோருக்கு இவ்வுலகிலே பெருமையில்லை; மறுவுலகிலும் உய்வில்லை என்கிறார் வள்ளுவர்.

"புகழின்றால் புத்தேள்
நாட்டுய்யதால் என் மற்று
இகழ்வார் பின் சென்று நிலை"

'இகழ்வார் பின் சென்று நிலை' என்பதற்கு, மானத்தை விட்டு, தன்னை அவமதிப்பார் பின்னே ஒருவன் சென்று நிற்கின்ற நிலை என்று

(13-ம் பக்கம் பார்க்க)

# சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?

—சற்சொருபவதி நாதன் பி. எஸ்சி.—

ஆவர் கட்டிச் சிறை எழுப்பலாம். வாசலுக்கு இரும்புச் சங்கிலியில் பூட்டுப் போட்டு அடைத்து வைக்கலாம். ஆனால், இவற்றால் ஒரு பெண்ணின் கற்புக் காக்கப்படுமென எண்ணினால், அது வெறும் மடமையாகும்.

பெண்ணின் கற்பைக் காக்கக் கூடியசக்தி பெண்ணிடமே உண்டு. அவளுடைய உள்ளத் திண்மையைத் தவிர வேறு எதுவும் காப்பாகாது.

வள்ளுவன் உள்ளத்தில் பிறந்த துல்லிய இக் கருத்தை, 'மெல்லியலாள்' எனும் நிலையில் நின்று கட்டுரையாளர் விளக்குகிறார்.

'பெண்மை வாழ்க' என்றும் 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்றும் நம்மிடையே வாழ்ந்திருந்த பாரதி போல், வள்ளுவரும் பலபல ஆண்டுகட்கு முன்னதாகவே தமிழகத்தில் உரிமைக் குரல் எழுப்பியிருப்பதைக் குறள் பற்றிய அறிஞரின் ஆராய்ச்சி எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது. வள்ளுவர் வாழ்ந்திருந்த காலத்தில் மக்கள் வைதீகக் கொள்கையில் நன்கு ஊறியவராய் மூடப் பழக்க வழக்கங்களுக்கு ஆளாகியிருந்தனர் என்பதை வரலாற்று ஏடுகள் நமக்குப் புலப்படுத்துகின்றன. அத்தகையதொரு சூழலில் வாழ்ந்தும், வள்ளுவர் முன்னேற்றப் பாதையில் தெளிந்த நோக்குடன் நடை பயின்றார்—சமூகம் சீர் பெறப் பல புரட்சிக் கருத்துக்களைக் குறளில் வடித்தார். அவற்றுள் ஒன்று, இந்தப் பெண் அடிமை என்ற நம்பிக்கையை ஒழிக்கும் புதுமைக் கருத்தாகும். வீட்டிலே தொடங்கும் பெண் விடுதலையே நாட்டின் அரசியல் விடுதலைக்குக் காரணமாகிறது என்ற உண்மையை உணர்ந்து இன்று சமுதாயம் செயல்படுகிறது. ஆனால் அன்று கணவனுக்குப் பணிந்து பணிவிடை செய்வதொன்றே கற்புடை மனைவியின் கடமை என்ற மனப்பான்மை இருந்த பொழுது பெண்ணின் சிறப்பை உலகுக்கு உரிய முறையில் எடுத்தியம்பிய பெருமை வள்ளுவர் ஒருவரையே சார்ந்ததாகும்.

### தகையணங் குறுத்தல்

காமத்துப் பாலில், காதலன் காதலி உறவைப் பற்றிப் பேசும் பொழுது, ஆண் பெண்ணை உயர்வாக மதித்துப் போற்ற வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் படுவதைக் காண்கிறோம். உயிர் இருக்கிறதே அது போல் சிறந்தாக நாம் வேறொன்றினையும் கருதுவதில்லை என்றுதான் கூற வேண்டும். — உயிரோடிருந்தால்தான் நாம் விரும்பும் எதனையும் செய்து முடிக்கலாம் என்பதனை உணர்ந்து உயிரைப் போற்றிப் பாதுகாக்கின்றான் மனிதன். அத்தகைய சிறந்த உயிர் போன்றவள் காதலி என்கிறான் வள்ளுவர் கண்ட காதலன்.

தனக்கும், காதலிக்கும் உள்ள உறவை 'உ...

(13-ம் பக்கம் பார்க்க)

பாட்டிடையிட்ட நகை மொழிச் சித்திரம்:

# வானுறையும் வள்ளுவன்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளுவப் பெருந்தகை, வானுலகத்திலே ...... தான் வாழும் துறக்கத் திருமனையிலே, வாசற்புறத்தில் விரித்திருந்த புலி உரியில் வீற்றிருந்து, தனது வெண்மயிர்த் தாடியை வெட்டிக் குறைக்கும் சவரத் தொழிலை நடத்திக்கொண்டிருக்கிறார்! அவர் இருப்பிடம் நோக்கிய அதரிலே, யாரோ ஒரு சிலர் நடந்து வரும் அரவம் கேட்கிறது. சிரைத்தற் பணியைச் சீக்கிரமாக முடித்துக் கொண்டு, எழுந்து நின்றார்; ஏழடி நடந்தார்...வந்தாரை விளித்து, இதோ... 'வருக வருக' என்று வரவேற்புரை வழங்குகிறார்:

'சொல்லு தமிழும் அதன் சுவையும் வளர்த்துயர்ந்த, நல்லைநகர் ஈன்ற நாவலர் பெருந்தகையே!...வா. பாட்டுத் திறத்தாலே, 'தான் வாழ்ந்த நாள் வையத்தைப்' பாலித்து நின்ற எட்டையபுரக் குயிலே! எனதருமைக் கவி மகவே...வா. முத்தமிழுந் துறைபோகக் கற்று, முடிவில் என் சித்தங் கவர்

**இராஜபாரதி**

ந்த செந்தமிழ் 'யாழை', அந்தமில்லா உலகிற்கு அர்ப்பணித்த வித்தகா; விபுலாநந்தா! வா. எல்லோரும் வாருங்கள். என் முன்னே அமருங்கள். செப்புங்கள், புதுத் தமிழ். செவிக்கின்பம் கிட்டட்டும்.

வரவேற்புபசாரத்தில் மெய்ம் மறந்த, துடிப்புப் புலவன் பாரதி, துறவியர் இருவரையும் முந்திக் கொண்டு இதோ...தனக்கே உரித்தான கிறுக்குத் தமிழில் கிண்டல் மொழிகிறான்: (பாடுகிறான்)

வாசுகியின் துணைநலத்தை
வாய்மொழியிற் கண்டோம்,
வரவேற்பில் அடுக்குமொழி
வாரிவருந் தென்றல்
வீசுகின்ற மாற்றத்தின்
விந்தை நிலை கண்டோம்.
தேசுலவும் வெண்தாடி
தேய்ந்த நிலை கண்டோம்,
திருக்குறளில் நாம் கண்ட
தெய்வீகச் 'சோதி'
பேசியதைச் செய்வதனாற்
பெருமகிழ்வு கொண்டோம்.



கட்டுரையாசிரியர்

பாடி முடித்த பாரதியைத் தொடர்ந்து, விபுலாநந்தர் பேசுகிறார்:

எம் பெருமானே; தங்கள் பூசாதினமாய இன்று, தங்களை வாழ்த்திப் பாட வந்த பாரதி, சற்றே கிண்டலும் கேலியுஞ் சேர்த்துப் பாடியமைக்கு மன்னித்தருள்க. அவரது பாட்டின் அடியொற்றி, அடியேன் ஒரு சிறு கேள்வியைக் கிளப்ப வேண்டியவனாகின்றேன்; ஆம். நீண்டு வளர்ந்து, நிலவு முகத்தில் நிழலிட்டிய பட்டு மயிர்த் தாடியைத் தாங்கள் வெட்டிக் குறைத்த காரணம் யாதோ...?

வள்ளுவர், இலேசாகச் செருமிக் கொண்டு வாய் திறந்து பதில் மொழிகிறார்:

எல்லாம் காரணமாகத்தான்... 'சொல்வது யார்க்கும் எளிய; அரியவாம் சொல்லிய வாறு செயல்,' என யானே கூறியுள்ளேன் அல்லவா.....நான் பூலோகத்தில் வசித்த போது, எனது கூற்றுக்கமைய ஒரேஒரு விடயத்தில் நானே நடந்து கொண்டதில்லை. ஆகவேதான், நம் தமிழ் நாட்டு ஓவியப் புலவர்கள், இன்று என்னைத் தாடிச் சாமியாராகச் சித்தரித்துள்ளார்கள். இது, நாவலர் பெருமானுக்கு நான் கூறு முன்பே விளங்கி விட்டது போல் தெரிகிறது. அவரது இலேசான சிரிப்புக்கு அப்படித்தான் அர்த்தம் கொள்ள வேண்டியிருக்கிறது.......மற்

(13-ம் பக்கம் பார்க்க)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப் பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு. கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கள்ளக் குடியேற்றக்காரர்களைக் காட்டிக் கொடுக்க சிங்கள ஒற்றர் படை

## அரசியல் பிக்கு ஒருவர் தலைமையில் ஆரம்பம்

கள்ளக் குடியேற்றக்காரர்களைப் பொலிசுக்குக் காட்டிக் கொடுப்பதற்காக ஒரு தேசிய ஒற்றர்படையொன்று மாத்தறையில் நிறுவப்பட்டிருக்கிறதென கடந்த ஞாயிறு "ரிவிதின" ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

இந்த ஒற்றர்படைக்குப் பஞ்ஞாதஸ்ஸி தேரோ என்னும் பௌத்தபிக்கு தலைமை தாங்குகிறார். இவர் அண்மையில் நடைபெற்ற ஒரு கிராமக் கமிட்டித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பல்வேறு இடங்களில் தலைமறைவாக வசிக்கும் கள்ளக் குடியேற்றக்காரர்களைப் பிடித்துக் கொடுப்பதின் மூலம், கள்ளக் குடியேற்றப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கத்துக்குக் கைகொடுப்பது தான் இந்த ஒற்றர்படையின் அடிப்படை நோக்கம்.

அடுத்த நான்கு மாதங்களுள் இலங்கையில் ஏறத்தாழ எல்லா பட்டினங்களிலும் ஒற்றர்படை அலுவலகங்கள் நிறுவப்படுமென பஞ்ஞாதஸ்ஸி தேரோ கூறுகிறார் என்று 'ரிவிதின'ச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பிக்குகள் முன் வர வேண்டும்

கள்ளக் குடியேற்றப் பிரச்சினை மிக முக்கியமான தேசியப் பிரச்சினையாதலின் பௌத்த பிக்குகள் முன் வந்து இத் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க உதவ வேண்டும் என்று 'தவஸ' அரசியல் நிருபர் 16-5-64ம் திகதி இதழில் எழுதுகிறார்.

'வட இலங்கைக் கரையில் சுமார் 1000 இராணுவத்தினரை நிறுத்திப் புதிதாக வரும் கள்ளக் குடியேற்றக்காரர்களைத் தடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதெனினும், நாட்டினுள் தலைமறைவாக இருக்கும் இலட்சக்கணக்கான கள்ளக் குடியேற்றக்காரர்களை விரட்டுவதற்கு இன்னும் போதுமான முயற்சிகள் செய்யப்படவில்லை' என்று 'தவஸ' அரசியல் நிருபர் மேலும் குறிப்பிடுகிறார்.

**சிங்கள இதழ்களில் . . .**


## பரீட்சை வழிகாட்டிகள்

மிகச் சிறந்ததும் புரிந்து கொள்ளக் கூடியதுமான நவீன முறையில் விரிவாக அமைக்கப்பட்டதுமான கடந்த கால வினாப்பத்திரங்கள் (5-10 வருடங்கள்) மாணவர்களின் பரீட்சைக்கு இன்றியமையாத வழிகாட்டியாக அமைந்துள்ளன.

இலங்கை பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வும் உயர்தர வகுப்புத் தேர்வும்

ஆங்கில மொழி மூலம்

| | | |
|---|---|---|
| பௌதிகவியல் | ரூபா | 10/- |
| தாவரவியல் | ” | 10/- |
| விலங்கியல் | ” | 10/- |
| பிரயோகக் கணிதம் | | 10/- |

தமிழ் மொழி மூலம்

| | | |
|---|---|---|
| தமிழ் | ரூபா | 10/- |
| ஐரோப்பிய வரலாறு | | 10/- |
| இந்திய வரலாறு | ” | 10/- |
| அரசியல் | ” | 10/- |

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) தேர்வு

ஆங்கில மொழி மூலம்

| | | |
|---|---|---|
| உயிரினவியல் | ரூபா | 5/- |
| இரசாயனவியல் | ” | 5/- |
| விலங்கியல் | ” | 5/- |
| தாவரவியல் | ” | 5/- |

தமிழ் மொழி மூலம்

| | | |
|---|---|---|
| தமிழ் பாஷை | ரூபா | 5/- |
| எண் கணிதம் | ” | 5/- |

தபாற் செலவு பிரதி ஒன்றுக்கு 50 சதம்.

வி. பி. பி. அனுப்பப்படமாட்டா.

யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,

நெல்லியடி — கரவெட்டி

கிளைகள்:

107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

13, முதலாவது சப்பெல் ஒழுங்கை, வெள்ளவத்தை.


# பிலிப்பைத் தூண்டி விட்ட மந்திரி யார்?

திரு. சி. பி. டி சில்வாவையும், திரு மைத்திரிபால சேனநாயக்காவையும் மந்திரி சபையிலிருந்து நீக்கினாலன்றி இடதுசாரி முன்னணி அரசாங்கத்தில் சேராது என்று திரு. பிலிப் குணவர்த்தன காலிமுகத் திடலில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கூறியது யாருடைய நிர்ப்பந்தத்தின் மீது என்ற விஷயத்தை இ ஐ. முன்னணியிலும், அரசாங்கக் கட்சியிலுமுள்ள சிலர் கண்டு பிடிக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர் என்று 'லங்கா தீப' 15-5-64ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

'இ. ஐ. முன்னணியிலுள்ள சிலர் கூட்டரசாங்கம் ஏற்படுவதைத் தடுப்பதற்காகத் திரு. பிலிப்புக்கு இம்மாதிரியான யோசனை கூறியதாகச் சில அரசியல்வாதிகள் கருதுகின்றனர்.

திரு. பிலிப் குணவர்த்தனவை அரசாங்கத்துள் செல்லாமல் தடுப்பதற்காகவே இந்த உபாயம் கையாளப்பட்டது என்பது மற்றும் சிலரின் கருத்து.

மேற்கண்ட இரு மந்திரிகளையும் மந்திரி சபையிலிருந்து நீக்குவதற்காக எதிர்க் கட்சியினர் செய்த ஒரு சதி தான் இது என்று அரசாங்க எம். பி.க்கள் சிலர் கருதுகின்றனர்.

மந்திரி சபையிலுள்ள முக்கியமான ஒரு மந்திரியின் நிர்ப்பந்தத்தின் மீது தான் திரு. பிலிப் அவ்வாறு மே தினக் கூட்டத்தில் பேசினார் என்று வேறு சிலர் கருதுகின்றனர்'.

## தமிழ் பயிலும் சிங்களவர்

நீர்கொழும்புப் பகுதியில் சுமார் 2000 சிங்களப் பிள்ளைகளுக்குத் துரதிஷ்டவசமாகத் தமிழ் படிக்கவும், தமிழ் கலாசாரத்திற்கேற்ப வாழவும் வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று 'தவஸ' 10-5-64-ந் திகதி ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

'தங்களின் பிள்ளைகள் தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி பயில வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால், உடனே தங்களுக்கென ஒரு சிங்களப்பாடசாலை அமைத்துத் தரும்படி அந்தப் பிள்ளைகளின் பெற்ேறார் பிரதமருக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளனர்' என்று இச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பதவி நீக்க அறிவித்தலை உடன் வாபஸ் பெறுக

## தமிழரசுக்கட்சி செயற்குழு தீர்மானம்

சிங்கள மொழியில் தேர்ச்சியின்மை காரணமாக தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்கட்கு வழங்கப்பட்டிருக்கும் கட்டாய ஓய்வு முன்னறிவித்தல்களை உடன் திருப்பிப் பெறச்செய்வதற்கு பிரதம மந்திரி தலையிட்டு ஆவன செய்யவேண்டுமென்றும், புதிதாக எவருக்கும் கட்டாய ஓய்வு வழங்கக் கூடாது என்று பிரதமர் அறிவித்தல் விடவேண்டும் என்றும்; பிரதமரை தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் கடிதமூலம் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று கடந்த வாரம் கொழும்பில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழு முடிவுசெய்துள்ளது.

கட்டாய ஓய்வுஉத்தரவின் பேரில் யூன் முதலாம் திகதி முதலாவது தமிழ் அரசாங்க ஊழியர் பதவியிலிருந்து ஓய்வு பெறவேண்டியிருப்பதால் நிலைமையை மீண்டும் ஆராய்வதற்காக கட்சியின் செயற்குழு மீண்டும் மே மாதம் 30ம் திகதி கொழும்பில் கூடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு 2000 சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதென்ற அரசாங்கத்தின் முடிவுபற்றி பின்வரும் வேண்டுகோளை செயற்குழு தமிழ்பேசும்பொதுமக்களுக்குச் சமர்ப்பித்துள்ளது:

'தமிழ்பேசும் பிள்ளைகள் மீது பலவந்தமாகச் சிங்கள மொழியைத் திணிப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளுக்கு 2000 சிங்கள ஆசிரியர்களை நியமிப்பது என்ற அரசாங்கத்தின் முடிவை இறுதிவரை எதிர்த்துப் போராட தமிழ்பேசும் மக்கள் தம்மையும்தங்களது பிள்ளைகளையும் தயாராக்கிக் கொள்ளவேண்டும்.'

மேலும் அத்தீர்மானம் கூறுவதாவது: 'அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பாசிச தன்மை நிறைந்ததாகும். மொழிப்பிரச்சினைக்கும் ஏனைய தமிழ் பேசும் மக்கள் பிரச்சினைக்கும் நல்ல முடிவு காணப்படும் என்று பிரதமர் கூறியிருக்கையில் இச் செயல்கள் அதற்கு முரணாக அமைந்திருக்கின்றன. அரசாங்கத்தின் இம்முடிவு மேலும் வேற்றுமையையே வளர்க்கும் என்றும் இச் செயற்குழு எச்சரிக்கிறது.'

கட்சியின் 9வது தேசிய மாநாட்டை திருமலைமாவட்டத்திலுள்ள நிலாவெளியில் எதிர்வரும் ஆவணித் திங்களில் நடத்துவதென்றுமுடிவு செய்யப்பட்டது. அடுத்த ஆண்டின் கட்சித் தலைவர் தேர்வுக்கு நியமனப் பத்திரங்கள் யூன் மாதம் 15ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்சியின் பிரசார வேலைகளை மன்னார் மாவட்டத்தில் உத்வேகப்படுத்துவதற்காக திருவாளர்கள் வி. ஏ. அழகக்கோன், செ. இராசதுரை, க. பத்மநாதன், கைலாசபிள்ளை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

எஸ் - லொன்

இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக் குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது, அரிப்பேற்படாது, கிருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானல் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

[illegible]

பேங்ஷால் வீதி, கொழும்பு-11.


# காப்பியப் பெருவிழா

## வந்தாறு மூலையில் நடைபெறும்

மட்டக்களப்பு, மே, 20.

கிழக்கிலங்கைத் தமிழ் எழுத்தாளர்சங்கத்தின் அநுசரணையுடன் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய உயர்கலை மன்றம் 22, 23ம் திகதிகளில் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் காப்பியப் பெருவிழா ஒன்றை நடாத்துகிறது.

22ம் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. சி. இராசதுரை தமிழ்க் கொடியேற்றி வைப்பார். மட்டு நகர் முதல்ப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைப்பார். கலாநிதி ஆ. சதாசிவம் தலைமையில் திருவாளர்கள்: கே. எஸ். நடராசா, எஸ். தனஞ்செயராசசிங்கம், புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

பிற்பகல் 7 மணிக்கு விபுலாநந்தர் அரங்கில் திரு. எஸ். ஆறுமுகவடிவேல் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். வானொலி தமிழ் நாடகத் தயாரிப்பாளர் திரு. சண்முகநாதனின் கதா காலட்சேபம், நடமாடி குழுவினரின் 'வீழ்ச்சி' நாடகம், திரு. சி. கணபதிப்பிள்ளை குழுவினரின் தென்மோடி நாட்டுக்கூத்து, எம். சி. முகமட் குழுவினரின் கிராமியக் கவிதை, தமிழ்க் கலா மன்றத்தினரின் 'காதலிக்கத் தெரியாது' நகைச்சுவை நாடகம், ஏ. ரி. பொன்னுத்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைக்கு நடிகர் தங்கவேலு கூறிய பரிகாரம்

## வண்டியில் நடாத்திய வரலாற்று வகுப்புகள்

இந்தியப் பிரயாணத்தின் போது எங்கெல்லாம் சென்றாலும் அங்கெல்லாம் இலங்கைத் தமிழரின் நிலை பற்றிய கேள்வியே முக்கிய இடம் பெற்று விளங்குகிறது. அரசியல் தலைவர்கள், பிரபல எழுத்தாளர்கள், சமூக சேவையாளர்கள் எவரைப் பார்த்தாலும் இதே கேள்விதான். நகைச்சுவை நடிகர் தங்கவேலு இக்கேள்வியைக் கேட்பதுடன் மட்டும் நின்று விடவில்லை. சில மாற்றுத் திட்டங்களையும் கூறினார்.

இராமேஸ்வரத்துப் புண்ணிய தீர்த்தங்களில் நாம் கண்டிப்பாகத் தீர்த்தமாட முடியாது என்று சொன்னதைக் கேட்ட 'கைடு' கன்னத்தில் போட்டுக்கொண்டு 'சிவ சிவா' என்று சிவாநாம பஜனை செய்யத் தொடங்கிவிட்டான்.

அவனுடைய பஜனையை நிறுத்தும்படி பணித்துவிட்டு, 'இராமேஸ்வரத்தில் எத்தனை புண்ணிய தீர்த்தம் இருப்பதாகச் சொன்னாய்?' என்று கேட்கின்றோம்.

### பாவங்களைப் போக்க.........

'லக்ஷ்மண தீர்த்தம் முதல் கோடி தீர்த்தம் வரை மொத்தம் 32 தீர்த்தங்கள் இருக்கின்றன ஸார்! நீங்கள் அவசியம் அவற்றில் தீர்த்தமாடி உங்கள் பாவங்களைப் போக்க வேண்டும்.'

'நாங்கள் ஏற்கனவேயே எங்கள் பாவ மூட்டைகளை இறக்கி வைத்து விட்டோமே!'

'என்ன ஸார்?'

'தலைமன்னாரிலும், தனுஷ்கோடியிலும்!'

'என்ன சொல்றீங்க?'

'தலைமன்னாரிலும், தனுஷ்கோடியிலும் சுங்க அதிகாரிகள் எங்களைப் படுத்திய பாட்டில் எங்கள் பாவங்களெல்லாம் தீர்ந்துவிட்டன! இப்போ புண்ணிய புருஷர்களாக இந்தப் புண்ணிய பூமியில் காலடி எடுத்து வைத்திருக்கின்றோம். மேற்

நவம்

கொண்டு எதற்குத் தீர்த்தம் வேறு ஆட வேண்டும்?'

'ஓகோ அப்படியா விஷயம்?'

'வேண்டுமானால் ஒன்று செய்கின்றோம்-'

'சொல்லுங்க ஸார்'

'இனிமேல் நாங்கள் செய்ய இருக்கும் பாவங்களுக்கு வேண்டுமானால், முன்னேற்பாடாக அந்த முப்பத்திரண்டு தீர்த்தங்களிலும் தலைக்கு இவ்விரண்டு தடவை தீர்த்தமாடி வைக்கின்றோம்!'

'அது ஏன் ஸார் இவ்விரண்டு தடவை?'



பரிகாரம் கூறியவர்

'உள்ள தீர்த்தங்களோ முப்பத்திரண்டு. எம்மில் ஒவ்வொருத்தனும் 32 பாவங்களோடு நிறுத்திக்கொள்ள மாட்டான். ஐம்பது-நூறு

### குமரி முதல் சென்னை வரை-7

என்று செய்து கொண்டே இருப்பான். அதற்காக ஒவ்வொருத்தனும் இவ்விரண்டு தடவை தீர்த்தமாடினால், மொத்தம் 64 பாவங்களுக்காவது தாக்குப் பிடிக்கும்! அப்பவும் பாவங்கள் மீதமிருந்தால், 7 வருஷம் கழித்து மீண்டும் ஒரு தடவை இந்தியா புறப்பட்டால் விஷயம் தீர்ந்தது. தலைமன்னாரிலும், தனுஷ்கோடியிலும் உள்ள சுங்கப் பகுதியினர் மீதிப் பாவங்களைப் பிடுங்கிக் கொள்ளுகின்றார்கள்!'

'7 வருஷங்கள் என்று அப்படி ஏன் கணக்காகச் சொல்லுகின்றீர்கள்?'

'ஒரு தடவை இந்தியா வந்து போனால், அப்புறம் 7 ஆண்டுகள் கழித்துத்தான் அநுமதி கிட்டுகின்றது!'

'ஓகோ! விஷயம் அப்படியா?'

### தமிழரும் உளரா?

இதற்குள் 'ஹூய்' என்ற இராக ஆலாபனையோடு இராமேஸ்வரம் வண்டி மேடைக்கு வந்துவிட்ட படியால் நம் சம்பாஷணை முறிகின்றது. வண்டிக்குள் நம்மையும் திணித்துத் தானும் தொற்றிக் கொள்கின்றான் அந்தக் 'கைடு'.

வண்டி புறப்படுகின்றது...

நம் ஊர் வண்டிக்கும், இந்த வண்டிக்கும் நிறைய வித்தியாசம். நம் நாட்டு வண்டியில் ஒரு 'கொம்பாட்மென்'டிலிருந்து இன்னொரு 'கொம்பாட்மென்'டுக்குச் செல்ல வேண்டுமானால், வண்டியின் ஊடாகவே சென்று விட முடியும். இங்கு விஷயம் வேறு. வண்டியிலிருந்து இறங்கி பின் அடுத்த 'கொம்பாட்மென்'டுக்குப் போக வேண்டும். தனித் தனிப் பெட்டியாக அடைத்து வைத்திருக்கின்றார்கள். தவிரவும், நம் நாட்டு [illegible] (அகலப்பாட்டில்) இருக்கின்றது.

வண்டியிலிருந்த பிரயாணிகள், நாம் இலங்கையிலிருந்து வருகின்றோம் என்பதை அறிந்ததும் ஆர்வத்துடன் நம்முடன் பேச்சுக் கொடுக்கின்றனர். அவர்களின் பேச்சிலிருந்து, நம் இலங்கையைப் பற்றித் தப்பும், தவறுமாகவே தெரிந்து வைத்திருக்கின்றார்கள் என்ற உண்மை நமக்குப் புலப்படுகின்றது.

அவர்கள் நம்மிடம்கேட்ட கேள்விகளின் சில சாம்பிள்கள் இதோ!

'கொழும்பிலிருந்து சிலோனுக்கு எத்தனை மைல்?'

'யாழ்ப்பாணமிருந்து சிலோனுக்குச் செல்ல வேண்டுமானால் எந்த வழி சுலபம்?'

'சிலோனில் தமிழர்களும் இருக்கின்றனரா?'

வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்த அந்தத் தமிழ்நாட்டு அன்பர்களுக்கு நம்மால் முடிந்தவரை நல்ல விளக்கங்கள் கொடுத்து ஒரு பூமிசாஸ்திர—சரித்திர வகுப்புக்களையே நாம் நடாத்துகின்றோம்.

பிரயாணம் செய்துகொண்டிருந்த ஓர் இளைஞர் திடீரென்று நம்மைப் பார்த்துக் கேட்டார்;'ஸார்! சிலோனில் சிங்களவர்களெல்லாம் உங்களை மிகவும் கொடுமைப் படுத்துகின்றார்களாமே? உண்மைதானா?' என்று.

இந்தக் கேள்வியை அவர் உணர்ச்சிப் பெருக்குடன் கேட்டதும், நம் பிரயாணக் கோஷ்டியிலிருந்தஒருவர்சற்றுத் தம் முதுகை நெளித்துக் கொள்கிறார். இலங்கையில் நடந்த இனக்கலவரத்தின் போது, பரந்த அவர் முதுகில், 'பரந்த அடிப்படை'யில் சுருதி சுத்தமாகச் சிங்களச் சகோதரர்களால் வாசிக்கப்பட்ட 'தனி ஆவர்த்தனம்' அவருக்கு ஞாபகம் வந்திருக்க வேண்டும்!

'சே! சே! அப்படியொன்றும் சிங்களவர்கள் எங்களைக் கொடுமைப் படுத்தவில்லையே!' என்று கூறுகின்றோம் நாம்.

'பத்திரிகைகளிலும், மேடைப் பேச்சுக்களிலும் விஷயம் பிரமாதமாக அடிபட்டதே.'

'ஓ; அதுவா? அது அப்படியொன்றும் கொடுமைஎன்று சொல்வதற்கில்லை. பகவான் புத்தர் போதித்த 'ஞான மார்க்கத்தை' எங்களுக்கும் போதித்து, எங்களையெல்லாம் 'போதிசத்துவ' நிலைக்குக் கொண்டுவரப் பாடுபடுகின்றார்கள் சிங்கள அன்பர்கள்?'

'என்ன? என்ன? என்ன சொல்லுகின்றீர்கள்?'

'பகவான் புத்தர் இருந்தாரல்லவா? அவர் தம் ஆசை மனைவியையும், அருமைப் புதல்வனையும், அரண்மனை போகத்தையும் துறந்து விட்டு நாட்டைவிட்டே வெளியேறி, 'ஏ மாந்தர்கள்! ஆசை ஒழிமின்! ஆசை ஒழிமின்! நம் இன்னல்களுக்கெல்லாம் மூலப்பொருளான அந்த ஆசையை ஒழிமின்!' என்று உபதேசித்தாரல்லவா?'

'ஆமாம்'

'இன்று இலங்கையிலுள்ள சிங்களவர்களும், தமிழர்களாகிய நம்மைப்பார்த்து அதையேதான் கூறுகின்றார்கள்!'

'என்ன சொல்லுகின்றீர்கள்?'

'விளங்கவில்லையா? ஏ தமிழர்களே! உங்கள் மனைவிகளையும், மக்களையும் விட்டு விட்டு எங்காவது ஓடிப் போங்கள்! நாட்டாசை வீட்டாசை மனிதனுக்கு நஞ்சாதலால், அந்த நாட்டையும், உங்கள் வீட்டையும் விட்டு விட்டு நடுக்கடலில் போய் விடுங்கள்! மொழிப் பற்றும் உங்களுக்கு நிறைய இருப்பதால், அதையும் உடனடியாக விட்டுத்தொலையுங்கள்! அப்படி நீங்கள் உங்கள் மொழியான தமிழை மறந்தால், ஆசை நீங்கிய ஞானியாகி விடுவீர்கள்—புத்தராகிவிடுவீர்கள்!' என்று தான் சிங்களவர்கள் உப

(15-ம் பக்கம் பார்க்க)

அரசாங்க எழுது வினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரன் பி. ஏ. எழுதும் 'மொழி வழக்கின் வரலாறு' என்னும் தொடர் கட்டுரை இடமின்மையால் இவ்வாரம் இடம் பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளியாகும்.

## சிவசக்தி அரங்கு அளித்த முத்தமிழ் கலை விழா

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் ஆய முத்தமிழுக்கும் மூன்று நாட்களில் விழாவெடுத்தனர் சிவசக்தி கலை அரங்கினர். நமது நாட்டுக்கு ஓரளவு புதுமையான 'பட்டிமன்றம்' முதல் நாள் இடம் பெற்றது. 'தமிழ் இலக்கியத்தில் சிறந்து நிற்பது காதலா வீரமா?' என்ற பொருள் பற்றிய பட்டிமன்ற நிகழ்ச்சியில் வட்டுக் கோட்டைப் பிரதிநிதியும், மட்டக்களப்புப் பிரதிநிதியும் பங்கு பெறுவதாகவிருந்தனர். ஆனால் இருவரும் வராதிருந்த போதும் நற்சுவை நல்கியது. இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து 'பெட்டிப் பாம்பு' நகைச்சுவை நாடகமும் இடம் பெற்றது.

அடுத்த நாள் செல்வி பிரேமளாவின் ஜலதரங்க இசை சிறப்பாகவிருந்தது. திரு. கே. என். நவரத்தினத்தின் மாணவிகளின் நடனங்களும் நடைபெற்றன. 'நாடகத் தயாரிப்பு' பற்றித் திரு. கே. எஸ். நடராசா சிறந்த சொற்பெருக்காற்றினார்.

'பொருத்தமில்லை' என்ற நாடகமும் நடைபெற்றது. நடிகர்கள் பாத்திரங்களின் தன்மையை உணர்ந்து நடித்திருந்தனர். ஆனால் போதிய பயிற்சி இருக்கவில்லை என்பது புலப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளில் திரு. எம். கண்ணன் அளித்த 'ஷாகிபாஜா' வாத்தியக் கச்சேரி, கீதாஞ்சலி நல்லையாவின் மாணவிகள் அளித்த பரதநாட்டிய நிகழ்ச்சி, ஆர். ஜெகசோதி தயாரித்தளித்த மெல்லிசை அரங்கு, இறுதியாக இடம் பெற்ற 'நட்டஈடின்றி இளைப்பாறிய இயமன்' (நாடகம்) ஆதியன இடம் பெற்றன.

மொத்தத்தில் மூன்று நாட்களும் நடைபெற்ற கலை விருந்து தரம் உயர்ந்ததாகவே இருந்தது. ஆனால் இந்த விருந்தை இரசிக்க இரசிகர்களை ஈர்த்திழுக்கும் பணியினை சம்பந்தப்பட்டவர்கள் செய்யவில்லை. போதிய விளம்பரமில்லை. தரங் குறைந்த எத்தனையோ சரக்குகள் விளம்பரத்தால் விலையேறிப் போகும் இக்காலத்தில் இத்தகைய தரமான நிகழ்ச்சிகளின் மேன்மையைப் பேண வேணும், விளம்பரத்தில் கூடிய கவனம் செலுத்தியிருக்க வேண்டியது அவசியம்.

கருத்துக்கள் பொதிந்த நல்ல தரமான நாடகங்கள் தான்; ஆனால் பயிற்சிக் குறைவால் தரம் குறைந்து போய்விட்டன. இக் குறைகளை உற்று நோக்கும்போது கலை அரங்கினர் அனைவரும் ஒருமித்து ஒற்றுமையுடன் செயலாற்றவில்லை என்பது புலனாகிறது. தனி ஒருவருடைய ஆற்றலின் மூலமே தான் இத்தனையாவது வெற்றி கிடைத்தது என்பது தெரிகிறது.

பல சிறப்பான அம்சங்களைப் புகுத்தி கொழும்பு இரசிகர்களுக்கு சிவ சக்தி கலை அரங்கின் மூலம் கொடுத்த திரு. ஆர். ஜெகசோதி பாராட்டுக்குரியவர்.

— முல்லை


### இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்கான
(G. C. E. Ord. Lev.)

புதுமுறையாகவும், இலகுவில் விளங்கக் கூடிய நடையிலும்

★ எண் கணிதம் ★ சரித்திரம் ★ பூமிசாஸ்திரம்
★ தமிழ் பாஷை ★ குடியியல் ★ இஸ்லாம்
★ 101 தமிழ் கட்டுரைகள் ★ உடநலவியல்

என்பனவற்றிற்கான, பரீட்சைப் பத்திரப் பயிற்சிக் கோவைகள் வெளியாகி உள்ளன.

விலை : 101 கட்டுரைகளும் ரூ. 10/-
மற்றும் பாடங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5/-

இலவச விபரங்களுக்கு எழுதவும்.

சர்வகலாசாலை போதனு கழகம்.

540, மருதானை வீதி, தொலைபேசி:
த. பெ. 1079. கொழும்பு. 91699


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1964 மே மாதம் 24-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


# மாவட்ட சபை அமைப்பு

மாவட்டசபை அமைப்பு பற்றிய விசேட குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. அதன் அடிப்படையில் உள்துறை அமைச்சரும், ஓர் அறிக்கையைத் தயாரித்துள்ளாராம்.

நீர்ப்பாசனம், குடியேற்றத் திட்டங்களில் மக்களைக் குடியேற்றுதல், கலாசார விவகாரம், கல்வி (தொழில் கல்வி உட்பட) ஆகியவை மாவட்டசபைகளின் பொறுப்பில் விடக்கூடாதென்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. குடியேற்றத் திட்டங்களைக் கண்காணிக்கும் 'காவற்கார' வேலையைமட்டும் மாவட்டசபைகளுக்குக் கொடுத்தால் போதுமாம்.

குடியேற்றத் திட்டங்களிற் சிங்களவர்களைக் குடியேற்றி, தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கும் செயல் பல ஆண்டுகளாக திட்டப்படி தொடர்ந்து நடைபெறுகிறது. இந்த நில ஆக்கிரமிப்புக்கு மாவட்டசபையால் இடைஞ்சல் ஏற்படாதிருக்கவே மேற்கண்ட சிபார்சு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட சபைகள் ஏற்பட்டபிறகும் சிங்களவர்கள் தமிழ் மண்ணில் தொடர்ந்து குடியேறுவார்கள். அதில் தலையிட சபைக்கு அதிகாரமிருக்காது.

இந்த நிலையை ஏற்றுக்கொண்டால், சில ஆண்டுகளில் தமிழ்பகுதிகளிலுள்ள மாவட்ட சபைகளில் சிங்களப் பிரதிநிதிகளும் கணிசமான அளவு இடம் பெறுவர். இதனால் சபை அலுவல்களில் சிங்கள மொழியும் இடம் பிடித்துக் கொள்ளும்.

வவுனியா, திருமலை, அம்பாறை ஆகிய மாவட்ட சபைகளின் அலுவல்கள் அனைத்தும் சிங்களம், தமிழ் இரு மொழிகளிலும் நடைபெற வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டுள்ளது. சிங்களக் குடியேற்றத்துக்குக் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றிதான் இது.

இப் பிரதேசங்களில் சிங்களவர் தொகை கன வேகத்தில் பெருகிவருகிறது. எனவே இந்த மாவட்ட சபைகளில் இரு மொழி நிர்வாகம் படிப்படியாக தனிச் சிங்கள நிர்வாகமாக மாறிவிடக்கூடும்.

சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தாதிருந்தால், இதர தமிழ் மாவட்ட சபைகளிலும் சில ஆண்டுகளில் இரு மொழி நிர்வாகம் ஏற்பட்டு, பின்னர் தனிச் சிங்கள நிர்வாகமாக மாறிவிட வழி ஏற்படும்.

ஆதலின், தமிழ்ப் பகுதி மாவட்ட சபைகளில் தமிழில் மட்டுமே நிர்வாகம் நடைபெற வேண்டும். அத்துடன் மாவட்ட சபைகளின் அனுமதியுடன்தான் தமிழ் மண்ணில் எத்தகைய குடியேற்றமும் நடத்தப்பட வேண்டும். இவ்விரு அதிகாரங்களும் மிக முக்கியமானவை.

இரு மொழி நிர்வாகத்தைப் பற்றிச் சிபார்சு செய்யும் இந்த விசாரணைக் குழு தமிழ் பேசும் மக்கள் கணிசமான தொகை வசிக்கும் கொழும்பு மாவட்டம் போன்ற மாவட்ட சபைகளிலும் இரு மொழிகளிலும் நிர்வாகம் நடைபெறவேண்டும் என்று ஏன் சிபார்சு செய்யவில்லை?

மாவட்ட சபைகளின் அலுவல்கள் இரு மொழிகளிலும் நடத்த முடியுமானால், அரசாங்க அலுவல்கள் மட்டும் ஏன் இரு மொழிகளிலும் நடத்த முடியாது? இதற்கும் ஆட்சியாளர் பதில் கூறியாக வேண்டும்.

தொழில், கல்வித் துறையில் தமிழ்ப் பகுதிகள் மிகவும் பின் தங்கியுள்ளன. இவ்விஷயத்தில் தமிழ் பேசும் மக்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது. தமிழ்ப் பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்கும், வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கவும் தொழிற் கல்வியும் மாவட்ட சபைகளின் பொறுப்பில் விடப்பட வேண்டும். இல்லையேல் பாரபட்ச நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்.

தமிழ் பேசும் மக்களின் கலாசார வளர்ச்சிக்கான பொறுப்பு அரசாங்கத்தின் கையிலிருக்கும் வரை வெறும் கண் துடைப்புக் காரியங்கள்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கும். மாவட்ட சபைகள் அந்தப் பொறுப்பை ஏற்றாலன்றிக் கலாசார வளர்ச்சி இன்று போல் என்றும் பெயரளவில் தான் இருக்க முடியும்.

விசாரணைக் குழுவின் சிபார்சுகளைப் பார்த்தால் இன்று அரசாங்க அதிபரிடமுள்ள அதிகாரங்கள் கூட மாவட்ட சபைக்குக் கிடைக்காதென்றே தோன்றுகிறது. இத்தகைய பொம்மை மாவட்ட சபைகளால் என்ன பயன்?

தென்னகத்தில் "ஜில்லா போர்டு" என்னும் மாவட்ட சபைகள் தனியாகப் பாடசாலைகளை நடத்துகின்றன. திருநெல்வேலி "ஜில்லா போர்டு"க்கு ஒரு காலத்தில் அந்த ஜில்லாவில் புகையிரத சேவையை நடத்தும் அதிகாரம் கூட வழங்கப்பட்டிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

போதிய அதிகாரங்கள் மாவட்ட சபைக்கு வழங்கப்பட வேண்டும். மொழிச் சிக்கலைத் தீர்க்கும் அடிப்படையாகவும் அது அமைய வேண்டும். இன்றேல் அது வெறும் கண்துடைப்புச் சபையாகவே இருக்குமென்று எச்சரிக்கின்றோம். ஏதோ சில சலுகைகளை வழங்கியதாகப் பறைசாற்றிக் கொள்வதற்கு மட்டும் மாவட்ட சபை அமைப்பதானால் அதில் ஏமாந்து போகிறவர்கள் தமிழ் பேசும் மக்களல்ல.

# சுதந்திரக் கட்சித் தலைமை கையாளும் தந்திரம்!

## கொம்யூனிஸ்ட் கட்சிமீது குற்றச்சாட்டு

கூட்டாச்சிப் பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

இரு கட்சிகளை உதறித் தள்ளிவிட்டு கூட்டரசாங்கத்தில் சேர ஒரு கட்சிக்கு மட்டும் கதவைத்திறந்துவைக்க மந்திரிசபை முடிவுசெய்துள்ளது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியை (அதாவது முன்னணியில் இணைந்துள்ள மூன்று கட்சிகளையும்) கூட்டரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று முன்னணி கோரியது.

அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. வேறு வார்த்தைகளில் கூறின் இடதுசாரி ஐக்கிய முன்னணி கூட்டாட்சியில் சேர முடியாது. சமசமாஜக் கட்சி தனியாகச் சேரவேண்டுமானால் சேரலாம் என்பதே. இது இ. ஐ. முன்னணிக்கு விழுந்த பலத்த அடியாகும்.

ஆகவே 'சமசமாஜக் கட்சி அரசாங்கத்தில் சேருவது இடதுசாரி ஐக்கிய முன்னணி சேருவதாகும்' என்ற நிலையை இ. ஐ. முன்னணி ஏற்றுக்கொண்டாலன்றி உத்தேச அரசாங்கம்சுதந்திரக்கட்சி—இ. ஐ. முன்னணி அரசாங்கமாகஇருக்காது. அது சுதந்திரக் கட்சி—சமசமாஜக் கட்சி அரசாங்கமாகவே இருக்கும்.

### இ. ஐ. முன்னணியின் எதிர்காலம்

ச. ச. கட்சி அரசாங்கத்தில் சேருவதாக முடிவு செய்து, ச. ச. கட்சி சேருவது இ. ஐ. முன்னணி சேருவதேயாகும் என்ற நிலையை மற்ற இரு கட்சிகளும் அங்கீகரிக்க மறுத்தால் இ. ஐ. முன்னணியின் எதிர்காலம் என்னவாகும். இக்கேள்வி அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

அந்த நிலைமை ஏற்படும்போது இ. ஐ. முன்னணி முறிந்துவிடுமென்றே எதிர்பார்க்கலாம். வேறு சொற்களில் கூறின், ச. ச. கட்சியின் முடிவைப் பொறுத்தேயிருக்கிறது இ. ஐ. முன்னணியின் எதிர்காலம.

### வேறு சில முயற்சிகள்

கூட்டரசாங்கப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறவும் சாத்தியக் கூறுகள் உண்டு. திரு. பிலிப்புக்குப் பதிலாக திரு. வில்லியம் டி. சில்வாவுக்கு இடம் பெற்றுக் கொடுக்கவும் முயற்சிகள் நடைபெறக் கூடும். கொம்யூனிஸ்ட் கட்சி பதவி பெறுமல அரசாங்கத்தில் சேர்ந்து தன் கைவரிசையைக் காட்டத் திட்டமிடவும் கூடும்.

இந்த முயற்சிகள் பலிக்காவிட்டால், ச. ச. கட்சிமட்டும் தனித்து அரசாங்கத்தில் சேருமா?

இக் கேள்விக்கு விசேட காண்பதில் ச. ச. கட்சியினுள் பலத்த கருத்து வேற்றுமை நிலவுகிறது. கூட்டரசாங்கத்தில் கட்சி சேர்ந்தேயாக வேண்டும் என்று டாக்டர் என். எம். பெரேரா கோஷ்டியினர் திட்டவட்டமாக முடிவு செய்துள்ளனராம்.

### மாநாடு முடிவு செய்யும்

இது பற்றிய இறுதி முடிவை அடுத்த மாதம் 6, 7ந் திகதிகளில் கூடும் கட்சி உறுப்பினர்களின் மாநாடு முடிவு செய்யும்.

கூட்டாட்சியில் கட்சி தனியாகச் சேர வேண்டுமென்ற டாக்டர் பெரேராவின் பிரேரணையை மாநாடு ஏற்றுக் கொண்டால், அத்துடன் இ. ஐ. முன்னணிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும். அந்த நிலை ஏற்படின் இடதுசாரி ஐக்கியமுன்னணிக்குவெற்றிகரமாகக் குழிதோண்டிய தங்களின் இராஜதந்திரம் வெற்றிபெற்றதைக் கண்டு சுதந்திரக் கட்சித் தலைமை மகிழ்ச்சியடையலாம்.

டாக்டர் பெரேராவின் பிரேரணை மத்தியக் குழுக் கூட்டத்தில் நடந்ததைப் போல மாநாட்டிலும் தோல்வியடைந்தால், டாக்டர் அதனை ஏற்று அரசாங்கத்தில் சேர மறுத்துவிடுவாரா? அதற்கு மாறாக அவரும் அவரது சகாக்களும் கட்சியிலிருந்து வெளியேறி அரசாங்கத்தில் சேருவார்கள் என்றே கட்சிக்குள் அவரை எதிர்க்கும் வட்டாரங்கள் கூறுகின்றன.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

அவ்வாறு என். எம். கோஷ்டி கட்சியிலிருந்து வெளியேறிவிட்டால், கட்சி நிச்சியம் பிளவுபடும். ஆதலின் ச. ச. கட்சியைப் பிளவுபடுத்துவதற்காகத் தாங்கள் கையாண்ட உபாயம் பலித்ததைக் கண்டு சுதந்திரக்கட்சித் தலைமை மகிழ்ச்சியடையலாம்.

### என். எம். இல்லாத இ. ஐ. முன்னணி

அத்தகைய நிலைமை ஏற்படும் பட்சத்தில் இ. ஐ. முன்னணி முறிந்து போகாது. மூன்று கட்சிகளைக் கொண்ட முன்னணியாக வழக்கம் போல அது இயங்கிக்கொண்டிருக்கும். ஆனால் அதில் டாக்டர் என். எம். இருக்க மாட்டார்.

சமசமாஜக் கட்சி அரசாங்கத்தில் சேருவதில்லையென்று கட்சி மாநாடு முடிவு செய்துவிட்டு, டாக்டர் பெரேராவும் கட்சிக்குக் கட்டுப்பட்டுவிட்டால், கூட்டாட்சிப் பேச்சுவார்த்தைகள் படுதோல்வி அடைந்துவிடும்.

பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துவிட்டால், அதன் பின் அரசாங்கம் என்ன செய்யும்?

### அடுத்து என்ன?

சுதந்திரக் கட்சியால் இனித் தனியாக ஆட்சி புரிய முடியாது. ஆகையால்தான் பிரதமர் இடதுசாரிகள் உதவியை நாட முயற்சி செய்தார் என்பது பகிரங்க இரகசியம். அவர்முயற்சி பலிக்கவில்லையேல், அவருக்குள்ள ஒரே வழி பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்துவதுதான்.

அடுத்த பட்ஜெட் பாராளுமன்றத்தில் நிறைவேறினாலும், தோல்வி கண்டாலும் பிரதமர் மேற்கண்ட நடவடிக்கையைத்தான் எடுக்க முடியுமென்பது அரசியல் வட்டாரங்களின் கருத்து.

ஒரு கவர்ச்சியான சிம்மாசனப் பிரசங்கம், ஒரு வரவு-செலவுத்திட்டம், ஒருகவர்ச்சியான போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஆகிய ஆயுதங்களைக்கையில் ஏந்திக்கொண்டு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க துணிச்சலுடன் தேர்தலில் குதித்து விடுவார் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்து.

### கொ. கட்சிக்கு ஆபத்து

மந்திரிகளும் பிரதமரும் சேர்ந்து கொம்யூனிஸ்ட் கட்சியை ஒரு பெரிய சிக்கலில் மாட்டி வைத்துள்ளனர்.

மதம் பற்றிய பிரச்சினையாலும் இலங்கையின் சர்வதேசக் கொள்கை சம்பந்தமாகச் சிக்கல் (இலங்கையின் நடுநிலைமைக் கொள்கைக்கு ஆபத்து) ஏற்படுமென்பதாலும் கொம்யூனிஸ்ட் கட்சியை மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள முடியா

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் ஆசிரியர் கவனத்துக்கு

'ஜாதிகுரு சங்கமய' என்ற சிங்கள ஆசிரியர்களின் தொழிற்சங்கம்தான், தொழிற்சங்கங்களுக்குள் முதன் முதலில் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு பேராதரவு கொடுத்தது. இத்தகைய சங்கத்தின் தற்போதைய வேடத்தைக்கண்டு மயங்கிய சில தமிழ் ஆசிரிய சங்கங்கள் விட்டில் பூச்சிகளாகிவிடக் கங்கணங் கட்டிக் கொண்டிருப்பதை எண்ணுகையில் ஒரு புறம் வேதனை தான் ஏற்படுகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஜாதிகுரு சங்கமயத்தின் தலைவர் திரு. பீட்டர் சில்வா பேசினார். 2000 சிங்கள ஆசிரியர்களை தமிழ் பேசும் மக்கள் வெறுத்தொதுக்கலாகாது என்றும், சிங்களப் பிரதேசங்களில் தமிழ் ஆசிரியர்கள் கடமை புரியும் போது வடக்குக் கிழக்கில் ஏன் சிங்கள ஆசிரியர்கள் கடமை பார்க்க முடியாது என்றும் அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

சிங்களப் பிரதேசங்களுக்குச் செல்லும் எந்தத் தமிழ் ஆசிரியரும் சிங்களவருக்கு தமிழ்போதிக்கவில்லை. அதேபோல் வடக்குக் கிழக்கு செல்லும் சிங்கள ஆசிரியர்களும் தமிழ் பேசுவோருக்கு சிங்களம் கற்பிக்காது தங்கள் சிங்கள மக்களுக்கே சிங்களம் கற்பிப்பதை எவரும் எந்நிலையிலும் ஆட்சேபிக்கப் போவதில்லை. தமிழ் பேசும் மக்களுக்கு சிங்களம் போதிக்கச் செல்வதையே தமிழ் பேசும் மக்கள் கண்டிக்கிறார்கள் என்பதை திரு. பீட்டர் சில்வா தெளிவாக உணர வேண்டாமா?

முதன் முதலாக தமிழ் பேசும் ஆசிரிய சமுதாயத்துக்காக இன ரீதியில் தொழிற் சங்கம் அமைத்தவர்கள் தமிழ் ஆசிரியர்கள். பொதுவாக இயங்க ஆரம்பித்த பொது சேவைத் தொழிற் சங்கங்கள் பல, தமிழ்பேசும் மக்களின் உரிமைப் பிரச்சினைகளில் எவ்வாறு நடந்து கொண்டன என்பதை நாம் விபரிக்க வேண்டிய அவசியமில்லை.

கோடீசுவரன் வழக்கையும் அது உருவான வரலாற்றையும் உற்று நோக்கி தமிழாசிரியர்கள் தங்களை விட்டில் பூச்சிகளாக்காதிருப்பார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களக் குடியேற்றத்தைத் தொடர்ந்து நடத்த ஏற்பாடு

## மக்களை குடியேற்றும் அதிகாரம் மாவட்ட சபைக்கு கிடையாது

நீர்ப்பாசன வேலைகளும், குடியேற்றத் திட்டங்களில் மக்களைக் குடியேற்றும் பொறுப்பும் உத்தேச மாவட்ட சபைகளிடம் விடக் கூடாதென்று மாவட்ட சபை அமைப்பு பற்றிய விசாரணை நடத்திய விசாரணைக்குழு தனது அறிக்கையில் சிபார்சு செய்துள்ளது.

தற்போது அரசாங்க அதிபர்களின் நிர்வாகத்தின் கீழுள்ள காலி, திருமலை, யாழ்ப்பாணம் சுங்க இலாகா விவாகாரங்களை நேரடியாக மத்திய அரசாங்கமே கவனிக்க வேண்டுமென்பது விசாரணைக் குழுவின் மற்றொரு சிபார்சாகும்.

குடியேற்றத் திட்டங்களில் மக்களைக் குடியேற்றும் பிரச்சினை தேசியத் தன்மை வாய்ந்ததென்றும் அந்தப் பொறுப்பு மத்திய அரசாங்கத்திடமே விடப்படவேண்டுமென்றும் குடியேற்றத் திட்டங்களைக் கண்காணிக்கும் பொறுப்பை மட்டும் மாவட்ட சபைகளிடம் ஒப்படைக்கலாமென்றும் இக் குழு சிபார்சு செய்துள்ளது.

### ஆரம்பக் கல்வி மட்டும்

கல்வி, கலாச்சார விவகாரம், தொழில் கல்வி, பாடப் புத்தகம் தெரிவு செய்தல், பரீட்சை, ஆசிரியர் நியமனம் ஆகியவைகளும் மத்திய அரசாங்கத்தின் வசமே இருக்க வேண்டுமென்றும், ஆனால் ஆரம்பக் கல்வி விவகாரங்கள் மட்டும் மாவட்ட சபைகளிடம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் பிரஸ்தாப அறிக்கை குறிப்பிடப் பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக உள்நாட்டிலோ கடன் திரட்டும் பொறுப்பும் மாவட்ட சபைகளிடம் கொடுக்க முடியாதாம்.

தேர்தல் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களும் தேர்தல் கமிஷனர் கையிலேயே இருக்கவேண்டுமென்று விசாரணை சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மந்திரி சபைக்குச் சமர்ப்பிப்பதற்காக, இந்த அறிக்கையின் அடிப்படையில் உள்நாட்டு விவகார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா ஓர் அறிக்கை தயாரித்திருக்கிறாரென்றும், மந்திரி சபை இந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டதும், அதற்கான நகல் மசோதா தயாரிக்கப்படுமென்றும் தெரிகிறது.

---

ஜி. ஸி. ஈ. உயர்தரத் தேர்வும்
பல்கலைக் கழகப் புதுமுக தேர்வும்

இலங்கையின் மிகப் பிரசித்தி வாய்ந்த இன்ஸ்டிடியூட், இலங்கையிலேயே சிறந்த அஞ்சல் மூலம் கல்வி, விவேச மீட்டல் பாடங்கள், பரீட்சை வழிகாட்டிகள், வழங்குகிறது

**யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,**
நெல்லியடி — கரவெட்டி
கிளைகள்:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
13, முதலாவது சப்பல் ஒழுங்கை, கொழும்பு-6.

---

## 7வது முறை சிறை புகுந்த அண்ணு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறுவதற்கு முன்னரே அண்ணு அவர்களும் அவர் குழுவைச் சேர்ந்த ஏனைய நால்வரும் கைதுசெய்யப்பட்டார்கள்.

தேசிய கௌரவத்தைஅவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு சென்னை மாவட்ட நீதிபதியால் அண்ணுவுக்கும் ஏனையவர்களுக்கும் ஆறு மாத கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆறுமாத கடுங்காவல் தண்டனையை முடித்துவிட்டு வருகிற யூன் மாதம் 13ம் திகதி அண்ணு அவர்கள் சென்னை மத்திய சிறையிலிருந்து வெளிவருகிறார்கள்.

முப்பது வருட அரசியல் வாழ்வில் ஏழாவது முறையாகச் சிறை புகுந்த அண்ணு அவர்களின் தண்டனைக் காலம் இம்மாதம் 24ம்திகதி உடன் முடிவடைய வேண்டும். ஆனால் அண்ணு அவர்கள் தம்சிற்றன்னையார்மறைவையொட்டி பரோலில் விடுதலை பெற்றிருந்த காலத்தைச் சிறையில் அனுபவிக்க வேண்டியிருப்பதால் யூன் மாதம் 14ம் திகதிவரை சிறையில் இருந்தாகவேண்டும்.

யூன் மாதம் 14ம் நாள் ஞாயிற்றுக்கிழமையாக விருப்பதால் 13ம் நாள் அண்ணு அவர்கள் விடுதலையாகிறார்கள்.

அண்ணு அவர்களுடன் கைது செய்யப்பட்ட திருவாளர்கள்: டி. எம். பார்த்தசாரதி, டி. கே. பொன்னுவேலு, வி. வெங்கா, கே. பி. சுந்தரம் ஆகியோர் இம்மாதம் 23ம் திகதி விடுதலையாகிறார்கள்.

இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஏனைய இடங்களில் கைது செய்யப்பட்ட தி. மு. க. தலைமை நிலையச் செயலாளர் கே. ஏ. மதியழகன் எம். எல். ஏ. குழுவினர் இம்மாதம் 26ம்திகதியும், பேராசிரியர் க. அன்பழகன் எம். எல். சி. குழுவினர் யூன் மாதம் 2ம் திகதியும் ஆறு மாத கடுங்காவல் தண்டனையை முடித்துக்கொண்டு விடுதலையாகிறார்கள்.

இந்தி எதிர்ப்புப்போராட்டத்தில் இதுவரை 500க்கும் மேற்பட்டவர்கள் சிறைவாசம் அனுபவித்து வருகிறார்கள்.

---

## இலங்கைத் தமிழரசுக் கட்சி

கட்சிக் கிளைகளுக்கும் அங்கத்தவர்களுக்கும்

### அறிவித்தல்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 9 வது தேசிய மாநாட்டை இவ்வாண்டு ஆவணி மாதத்தில் (ஆகஸ்ட் 1964) நிலாவெளியில் (திருகோணமலை மாவட்டம்) நடாத்தக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருக்கிறது. கட்சி அமைப்பு விதிகளின் பிரகாரம் மாநாட்டின்முன்பு கட்சித் தலைவர் தெரிவு நடைபெறும். நாலு வருடங்களாவது கட்சியில் இயங்கும் அங்கத்தவராக இருந்தவரே தலைவராகத் தெரிவு செய்யப்பட அருகதையுடையவராவர்.

தலைவர் பதவிக்கு நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர் யூன் மாதம் 15ம் திகதி அல்லது அதற்கு முன்பு பொதுச் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக நியமனப் பத்திரங்களை அனுப்பும்படி கேட்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு நியமனப் பத்திரமும் பிரேரிப்போராகவும் அனுமதிப்போராகவும் ஆறு இயங்கும் அங்கத்தவரால் கையொப்பமிடப்பட்டு இருக்கவேண்டும். பிரேரிக்கப்படும் அபேட்சகரின் சம்மதம் நியமனப் பத்திரத்துடன் அனுப்பப்படவேண்டும்.

நியமனப் பத்திரங்கள் அனுப்பும் முகவரி:-

பொதுச் செயலாளர்,
**இலங்கை தமிழ் அரசுக் கட்சி**
16, அல்பிறெட் கவுஸ் காடின்ஸ்,
கொழும்பு-3.

(ஒப்பம்) இ. மு. வி. நாகநாதன்
பொதுச் செயலாளர்

17—5—64

---

## திருமலையில் காணிப் பங்கீடு

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பெரியகுளப் பகுதியில் துண்டுக்கு நாலு ஏக்கர் வீதம் ஆயிரம் துண்டுக் காணிகள் கொடுப்பதற்காக அரசாங்கம் பொதுமக்களிடமிருந்து விண்ணப்பம் கோரியுள்ளது. விண்ணப்பப் பத்திரங்கள் 1-6-64ம் திகதிக்கு முன்னர் திருமலை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். திருகோணமலை, உப்புவெளி, சாம்பல்தீவு, நிலாவெளி வாசிகள் மட்டுமே இக்காணிகளைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

---

## சுதந்திரக்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தென மந்திரி சபை முடிவு செய்திருப்பதாகப் பிரதம மந்திரி இ. ஐ. முன்னணித் தலைவர்களிடம் கூறியுள்ளார்.

இஃது அக் கட்சியின் மீது சுமத்திய பாரதூரமான குற்றச் சாட்டாகும். கொ. கட்சி ஓர் ஆதிக்க வல்லரசின் கைப் பாவை-மதங்களை எதிர்க்கும் மதவிரோதக் கட்சி என்பதே குற்றச் சாட்டுகள்.

குற்றச் சாட்டுகளைச் சுமத்தியவர்கள் சாதாரணமானவர்களல்ல—நாட்டின் பிரதம மந்திரியும், அவரது மந்திரி சபையும். அக்கட்சியை அடியோடு அழித்துவிடுவதற்கு இவ்விரு குற்றச் சாட்டுக்களுமே போதுமானவை.

ஒரு பகிரங்கப் பிரகடனத்தின் மூலம் தக்க ஆதாரங்களுடன் கொம்யூனிஸ்ட் கட்சி இக் குற்றச் சாட்டைத் திட்டவட்டமாக மறுக்காவிட்டால், மக்கள் அவற்றை நிச்சயம் நம்புவார்கள். ஆட்சி பீடத்தின் அதிபதிகள் அக் குற்றச் சாட்டை சுமத்தியிருப்பதே அதற்குக் காரணம்.

---

இசைக் கருவிகளில் ஆராய்ச்சி நடாத்தி வரும் சங்கீத வித்தியாலயா18ம்நூற்றாண்டுக்கு முன்னர் ஐரோப்பிய நடன விற்பன்னர்கள் பயன் படுத்திய 'போசெட்' என்னும் சிறிய வயலினைச் செய்திருக்கிறது.

## காப்பியப்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

துரை குழுவினரின் 'உலோபி' நாடகம் ஆகியன இடம் பெறும்.

23ம் திகதி காலை அருள் வாக்கி அப்துல் காதிறுப் புலவர் அரங்கில் 'மரபு'நூல் வெளியீட்டு விழா நடைபெறும். பிற்பகல் ஆனந்தாகுமாரசாமி அரங்கில் கலாநிதி ஆ. சதாசிவம் தலைமையில் தொடர்ந்து காப்பிய விழா நடைபெறும். ஜனப் அப்துல் காதிர், பண்டிதர் சு. வேலுப்பிள்ளை ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

பிற்பகல் ஆறுமணியளவில் ஈழகேசரிப் பொன்னையா அரங்கில் கனக-செந்திநாதனின் எழுத்துத்துறை வெள்ளிவிழா நடைபெறும். புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை, செந்திநாதன் அவர்கட்கு 'இரசிகமணி' விருது சூட்டுவார். பிற்பகல் 7 மணிக்கு முகாந்திரம் சதாசிவ ஐயர் அரங்கில் தேவன்-யாழ்ப்பாணம் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

---

### கல்வி

ஜீ. சீ. ஈ. வகுப்பு—ஆங்கிலம், சிங்களம் உள்பட—கலையியல் பாடங்கள் காலை 8-30 தொடக்கம் 12-30 வரை நடைபெறுகிறது. மாணவ மாணவிகளுக்கிடமுண்டு.

சர்வகலாசாலை
**போதனு கழகம் (U.T.I.)**
540, மருதானை வீதி,
கொழும்பு.
தொலைபேசி : 91699.

---

# இது புதிது!

## இது முதல்தரமான! ஹன்சயா

கல்வனைஸ்ட் தகர வாளிகள்



★ இலங்கையில் செய்யப்பட்டது
★ பாவனைக்குச் சிறந்தது
★ சிககனமானது



'அன்னம்' அடையாள கல்வனைஸ்ட் வாளிகளையே கேளுங்கள்.



சென்ற் அந்தனீஸ் இன்டஸ்ரீஸ்
752, பேஸ்லைன் ரோட், கொழும்பு 9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மஞ்சட் கோலம்

'மாலதி'

'என்னைக் கொன்று விட்டால் உங்கள் வாழ்வு மலர்ந்து விடுமா?...' கண்ணீரும் கப்பலையுமாகக் கெஞ்சித் தவித்தது இந்தக் குரல்.

நற நறவென்று கடித்த பற்களின் இறுக்கம் தளர்ந்தது. அவளது கழுத்தை நெரித்துக் கொண்டிருந்த முரட்டுக்கரங்களும் வலிமை கரைந்து தளர்ந்தன; கைகளை விலக்கிக் கொண்டவனாய் அவன் சோபாவிலே போய் அமர்ந்தான்.

'பெண்ணா இவள்?...' அந்த நெஞ்சம் எரிமலையாகக் குமுறியது. 'பாதகி...' உள்ளத்துள்ளே நெருப்பைக் கொட்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் அவளைக் கீறிக் கிழித்து ரத்தம் குடித்தாற்றான் அந்த ஆத்திரம் அடங்கும் போலிருந்தது. 'வஞ்சகி...' தாங்க முடியாத ஏமாற்றத்தால் அந்த உள்ளம் வீங்கி வெடித்து அழுதது.

'கண்ணீர் சிந்துகிறாளாம் கண்ணீர்; நீலிக் கண்ணீர்...' அவளைப் பார்க்கப் பார்க்க வேகம் பற்றிக் கொண்டு மூண்டது. ஆனாலும் அவன் மனிதனாக அமர்ந்திருந்தான். அவளும்தான்; அசையாத சிலையொன்றுக்கு கண்ணீர் பெருக்கும் வல்லபம் மாத்திரம் ஏற்பட்டு விட்டதைப் போல பெருக்கிக் கொண்டிருந்தாள். அது அவனது நெஞ்சத்தை நெக்குருக்குவதற்குப் பதிலாக நெருப்பை மூட்டி எரிச்சலைக் கிளறியது.

'பார்வையும் அழகும் இளமையும் ... பாசாங்குக்காரி... கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாளே; கொஞ்சிக் கொஞ்சி...' அருவருப்பான அவலட்சணம் அந்த நளினத்துக்குள்ளே மூடிக்கிடப்பதை அவன் இப்போதுதான் உணர்ந்தான். 'சே, எதற்கு வாழ்வு?' செத்துவிட வேண்டும் போலிருந்தது. ஆனாலும் இன்னும் மனிதனாகத்தான் அமர்ந்து கொண்டிருந்தான்.

சந்திரன் ஒன்றும் பெரிய 'ஏசண்டுத்துரை'யல்ல; சாதாரண தமிழாசிரியன். திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்கு மாறும்போது அவனது தலைவிதியே இப்படி மாறும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அந்தக் கருவியாக ஒரு நளினா குறுக்கிடுவாளென்றோ பக்கத்து வீட்டு யன்னலினூடாக ஊடுருவிய விழியம்புகளைத் தடுக்கவோ தப்பவோ முடியாதென்றோ அவன் கனவும் கூடக் காணவில்லை.

குறுகுறுத்த அந்த அகன்ற கருவிழிகளிலே குழந்தைத்தனம் மின்னுவதாக எடைபோடவில்லை அவன். அவற்றின் மயக்கும் காந்த சக்தியிலிருந்து விலகிக் கொள்ளவும் முடியாதென்பதை நாளுக்கு நாள் அவன் உணர்ந்தான். நிமிர்ந்து பார்க்கும்போதே இதயத்தில் மின்னல் தாக்குவது போல ஒரு மயக்க அதிர்ச்சி! அது அடிக்கடி ஏற்படுவதை அவன் விரும்பினான். உள்ளே உள்ளே பாய்ந்து எதற்காகவோ கிறங்கி ஏங்க வைக்கும் அந்தக் குவளைக் கருவிழிகள் நாள்தோறும் அவனுக்குப் போதை யூட்டின. ஆரம்பத்தில் வெட்கிக் கூசிய அவனது விழிகள் நேருக்கு நேராகப் பார்க்கவே பழக்கப்பட்டன. விசாலமான அந்த விழிகள் படபடத்து அடிக்கும்போது வேடிக்கை பார்த்தான். ஆரம்பத்தில் எதிர்மாறாக எடையிட்டவன் இப்போது அவை குழந்தை விழிகள் தாம் என நினைக்கமுற்பட்டான்.

அவன் சலனமற்ற குழந்தைப் புத்தியோடுதான் பார்க்கிறாளா? அப்படியானால் எல்லாம் மனப் பிரமைதானா? பாவம்; அவள் ஒன்றுமே புரியாத பச்சைக் குழந்தைதானா?

இது உள்ளத்தின் விசித்திரமான கேலிக் கூத்து!

'அந்த ஜன்னலோரம்தான் அவளது அழகுக் கருமபீடம்! அதிலிருந்து தரிசனம் தருவதுதான் அவளது ஒரே தொழில். இந்த வாடகை வீட்டின் மகாராணியும் அவள்தான். வாடகைக்கு விட்டால் நாள்தோறும் கண்காணிக்க வேண்டுமென்று அந்தக் கண்களில் எழுதி ஒட்டிக் கிடக்கிறதோ? ஒருவேளை அந்தக் கண்களும் வாடகைக்கு விடப்படுமோ?'

சே; என்ன சின்னத்தனமான நினைப்புக்கள்.

அந்த ஜன்னலைப் பார்ப்பதில்லையென்று திடசங்கற்பம் பூண்டான். ஆனால் அந்த ஜன்னல் இருவிழிகளைப் புதைத்து வைத்துக் கொண்டு நிமிடம் தவறாமல் அவனைப் பார்த்துக் கொண்டேயிருந்தது!

ஒரு நாள்; அவனுக்கு எரிச்சலாக வந்தது. சவரம் செய்யும்போது அப்படி என்ன, பார்க்க வேண்டிக் கிடக்கிறது? இங்கு யாரும் 'அடல்ற்ஸ் ஒன்லி' சினிமா காட்டவில்லையே!

சோப்பு நுரையை அள்ளிச் சமுக்கென்று வீசினான். அவளின் இரண்டு கண்களையும் குறிதவறாமல் அது நிரப்பிக் கொண்டதும் துடைத்துக்கொண்டே விம்மினாள். பார்க்கப் பரிதாபமாக, ஏன் வீசினோமென்றிருந்தது அவனுக்கு

அந்த அனுதாபம் இதயக் கரைகளை அரித்தது. தனக்குத் தண்டனையாக அவள் காறித் துப்பவேண்டுமே என்று கண்களை அகல அகலத் திறந்தான். ஆனால் ஜன்னல் வெறிச்சோடிக் கிடந்தது. அவன் எதிர்பார்த்தது போல அவள் பெற்றோர் தும்புக்கட்டும் கையுமாக அவனது அறையை முற்றுகையிடவுமில்லை.

'நல்லவள்'...என்றது அடிமனம். நெடுமூச்சு சூடாக எழுந்து அவனையே சுட்டது. அந்தச் சூட்டைத் தணிக்கக் கண்கள் குளுமையைத் தேடித் தேடி ஏமாந்தன. பாவம், இரக்கமற்ற அந்த ஜன்னல் பலமான கள்ளிப் பலகையால் முகமூடியணிந்து கொண்டு அவனை ஏளனம் செய்து நகைத்துக் கிடந்தது.

மனப் புழுக்கத்தின் தாக்கமோ என்னவோ பள்ளி விட்டு வரும்போதே குலப்பனோடு வந்து விழுந்தான். இரண்டு நாட்கள் நகர்ந்தன. சந்திரனின் அறை சாத்தியே கிடந்தது.

நளினிக்கு இருப்புக் கொள்ளவில்லை. குட்டி போட்ட பூனை போல அங்குமிங்கும் நடந்து தோற்றவளாக துணிந்துவந்து கதவை நீக்கினாள். அவன் கிடந்த கோலம் அவளைத் திடுக்கிட வைத்தது.

'மிஸ்டர்!...'

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

'இரண்டுநாளாகக் காய்ச்சலாகவா படுக்கிறீங்க?...எங்களுக்குச் சொல்லக்கூடாது?'

'நீங்களென்றால்' இன்னும் எத்தனை பேர்? காய்ச்சல் போதையில் நினைக்காமலே பிதற்றினான்.

'அதாவது; நான் வீட்டுச் சொந்தக்காரி.'

'எத்தனையாவது படித்திருக்கிறாய்? ஏ, பி, ஸி, டி சொல்லு பார்ப்போம்...'

'ஏய் மிஸ்டர்...' கடைசி எழுத்திலே அவளுக்குக் குரல் தளம்பியது.

'உங்களுக்கு என்ன? நீங்க என்ன இப்படி?...' கண்ணீர் விழியோரத்தை நனைக்க அடம்பிடித்து முன்னுக்கு வந்தது.

'எங்கே, பல்லைக் காட்டு... நகம்...தலை...சிவினயா? வீட்டிலே எண்ணெயில்லையா?... காலையிலே ஏன் குளிக்கவில்லை?...நீட்டு கையை உம்! நீட்டு...' அதட்டலிலே அவள் உண்மையாகவே பள்ளி மாணவியாகி நடுங்கினாள். கைதானாகவே நீண்டது. ஆனால் பிரம்புதான் வளைந்து நிமிரவில்லை. இது பள்ளிக்கூடமில்லையென்ற உணர்வு பெற்றவளாக திரும்பி அவசரமாக ஓட்டம் பிடித்தாள்.

திரும்பும்போது டக்டக்கென்ற சப்பாத்தின் ஒலியோடு டாக்டரையும் இழுத்து வந்தாள்.

இப்படி ஆரம்பித்த உறவு சந்திரன் பள்ளிவிட்டு வரும் வரை நளினா சாப்பிடாது காத்திருக்கும் நிலைவரை உயர்ந்து வளர்ந்தது. ஆனால் இந்த மூன்று நாட்களுக்குள்ளே அது இப்படித்திசை மாறுமென்று நினைக்கக் கூட அவனால் முடியவில்லையே!

'பாசாங்குக்காரி!...வஞ்சகி...! கொலைகாரி!...' அவன் நேருக்கு நேர் பார்த்த பார்வையிலே நெருப்புச் சுவாலை பிறந்தது. அவள் பொசுங்கிக் கருகினாள்.

என்ன நினைத்தாளோ; தாவணியை இடுப்பிலே செருகியவள் முன் வராந்தாவுக்கு ஓடி இறப்பிலே செருகியிருந்த மலைப்பிரம்பை உருவியெடுத்தாள். வேகமாக அவனை நோக்கி வந்தவள் கையைக்கட்டியவளாக பின்புறத்தை வளமாக அவனுக்குத் தந்து பலிபீடத்துக் கன்னி ஆடு போல நின்று கொண்டு அதை அவனிடம் நீட்டினாள்.

விசுக்கென்று உருவியவன் வெறிகாரனாக மாறினான். அது ஆவேசத்தோடு சுழன்று சுழன்று நிமிர்ந்து எதிர்பாராத இடங்களிலெல்லாம் ரத்தக்கோடு கிழித்தது.

அவனது கை சோர்ந்து விட்டது. அடுத்தகணம் அவளது தலையை அது தாங்கியிராவிட்டால் அது 'சீமெண்ட்' தரையிலே மோதிச் சிதறியிருக்கும். கழுத்து வளைந்து, அளகம் அவிழ்ந்து அவனது மடியிலே அவள் துவண்டு கிடந்தாள்.

அவள் பெண்; மெல்லிய மலர்போன்றவள். இந்த மிருகத்தன்மைக்கு அந்தப் பூவுடல் தாக்குப் பிடிக்குமா என்பது அவனுக்குத் தெரியவில்லையா?...குளிர்ந்த நீர்த் [illegible]களூடே சூடான விழித்துளிகளும் அவள் முகத்தில் தெளிப்புண்டன என்பதை அறிய அவளுக்கு உணர்வு இருக்கவில்லை.

மெல்ல அவள் விழிகளைத் திறந்தபோது நீர்த்திரையிட்ட இரண்டு சிவந்த விழிகள் அவன் முகத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தன.

'இப்போதாவது உங்கள் கோபம் ஆறியதா?...' அவளது அதரங்கள் மிருதுவாக அசைந்து வேதனையோடு இழைந்தன. அவன் பேசவில்லை. எங்கோ வெறித்து நோக்கிக்கொண்டிருந்தான். அவள் கண்ணீருக்கிடையே அவனை இறைஞ்சினாள்.

'என்னை மன்னித்து விடுங்கள். ஒன்றை நினைத்தேன். அது ஒன்றாக முடியுமென்பது புத்திக்கு எட்டவேயில்லை. அந்த 'லாச்சியை'த் திறந்து ஒரு படமிருக்கிறது; எடுத்துவாருங்கள்...' நீண்ட நேரத்தின்பின் அவன் வேண்டா வெறுப்பாக எடுத்து வந்தான்.

'பார்த்தீர்களா? முத்துவேல் மணமானவர் என்பதை இப்போது நம்புகிறீர்களா? அவரை நான் மணக்க முடியுமென்பதை உங்களால் நம்ப முடிகிறதா? ஊர் வாயை மூட உங்கள் உடைமையாக என்னை ஆக்கிவிடுங்கள் என்றபோதெல்லாம் என்னைதை வரட்டுமென்றீர்களே! எந்த நம்பிக்கையில் வசையுரைகளைத் தாங்கி வந்தேனோ அந்த நம்பிக்கையிலேயே முந்தாநாள் மண்ணைப் போட்டீர்கள். ஞாபகமிருக்கிறதா? அப்போதுதான் என் பேதை மனம் இப்படி நினைத்தது. அந்த நினைப்பு அடுத்தவீட்டுப் பாட்டிமூலம் முத்துவேலையும் என்னையும் முடிச்சுப் போட்டு உங்கள் காதிலே மோதவிட்டது. இதனாலாவது உடனே என்னை உங்கள் உடைமையாக்குவீர்கள் என்று கனவு கண்டேன். அந்தத் தவறுக்கு இந்தத் தண்டனை போதவே போதாது...'

'ஆ; நளினி!...' சந்திரனின் தேகம் நடுங்கியது. தனது கையையே வெறித்து நோக்கியவனாக எழுந்தான். கதவிடுக்கிலே நுழைந்து நெரிபடவிருந்த அதே கணத்தில் இன்னொரு பூக்கரம் அதனோடு இணைந்துகொண்டது.

'ஏன் நின்றுவிட்டீர்கள்? கதவைச் சாத்துங்கள். இந்தக்கையும் அதிலே பங்கு கொள்ளாமல் போகாது.'

சந்திரன் விக்கித்து நின்றுவிட்டான். அவன்கரங்களைக் கண்களிலே அள்ளி ஒற்றிக் கொண்டு அவள் குளிப்பாட்டினாள்.

அடுத்தநாள் பொங்கல்.

அவளது தோல்வி வெற்றியாக மலர்ந்தது. அந்தத் தளிர்க்கரங்கள் இட்ட பாலமுது பாகாக இனித்தது.

நடுநிசி.

பட்டுமெத்தையிலே பனிமலர்கள் உதிர்ந்து கிடந்தன. ஊதுபத்திகள் தம்மையே சாம்பலாக்கிக் கொண்டு நறுமணத்தை அள்ளி வீசின.

'எல்லாரும் படுத்துவிட்ட பிறகும் இவள் என்ன செய்கிறாள்?...' ஜன்னலூடாக மேகத்தில் மறைந்தும் மறையாத தாரகைகளைக் குறிவைத்துக்கொண்டிருந்தான்.

வளைகள் கலகலத்தன.

கதவு மெதுவாக நீங்கிக் கொண்டது. அவள் கட்டிலோரமாக நாணமொழுக நின்றுகொண்டிருந்தாள். பின்புறமாக அவனது கை விழ்ந்ததோ இல்லையோ 'ஊ...' என்ற வேதனையோடு நெளிந்துகொடுத்தாள். இப்போது அந்தமலைப்பிரம்பின் வெறிபிடித்த பயங்கரச் சுழற்சி மனக் கண்ணிலே,

(15-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பிள்ளைகட்கு சிங்களம் போதனு மொழி

### கல்விப் பிரச்சினை

## வெற்றி பெறும் வரை ஓயமாட்டோம்!

'வாங்க......வாங்க......என்னங்க தலைவரே! எப்படிங்க?!'

'என்னமோ உங்க புண்ணியத்திலே நல்ல சுகத்தோட தான் வாழ்ந்துகிட்டு இருக்கோம்!'

நாங்க என்னிக்காவது புண்ணியம் செய்திருந்தால் நம்ம பிழைப்புத்தனம் இப்படி கேவலமாகவா இருக்கும்?......'

'ஏங்க......எப்படிங்க நம்ம இ. தொ. கழகம்'?

'கழகங்களா ... 'நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக' வளர்ந்து வரும் வளர்ச்சி கண்டு, மாற்றுக் கட்சிக்காரர்கள் கூட மருண்டு மருண்டு பார்த்து, சுருண்டு சுருண்டு படுக்கிருர்கள்!'

'ஆமாம்!...ஆமாம்... இந்த நல்லதை செய்யத் துணிந்த நமக்குத்தான் எத்தனை எதிர்ப்பு! ... எத்தனை எதிர்ப்பு!'

'எதிர்ப்பு அவசியம் இருக்கணுமுங்க...அப்படி இருந்தால் தான், வெகு வேகமா நம்ம கழகம் வளர்ந்து, நாமும் முன்னேற முடியும் இல்லிங்களா?'

'உண்மை தானுங்க... இருந்தாலும், நமக்குன்னு பாடுபடறேன்னு சொல்லிக்கிட்டு திரிஞ்சவங்க, அவுங்க வயிற்று பிழைப்பிற்கே ஆபத்து வந்துவிட்டதென்று குறுக்குவழிகளைக் கையாளத் துவங்கிட்டாங்க... இவங்க... என்ன!'

'ஆமாம், இப்ப கொஞ்ச நாளா, 'நாய்கள் வேட்டையாடுவதுபோல்' 'மனித வேட்டை' நடக்குதில்லிங்களா?'

'ஆமாம்!'

'இந்த சந்தர்ப்பத்தைச் சரியாப் பயன்படுத்தி, காலா காலமாக வாழ்ந்து வரும் நம்ம சகத் தொழிலாளரை 'கள்ளத்தோணி' 'கள்ள குடியேற்றக்காரன்' என்றெல்லாம் மொட்டைக் கடிதங்களை முட்டாள்தனமா அயோக்கியர்கள் எழுதி சும்மா இருக்கிற சங்கை ஊதி கெடுத்தான் ஆண்டி, என்பதை போலவும்-ஆடு நனைகிறதென்று ஓநாய் கண்ணீர் விட்ட கதை போலவும், அட்டகாசம் செய்ய தூண்டிவிடுகின்ற அப்பாவிகள் அதிகம் பேரு. நாங்களும் மனிதர்கள் என்று வெட்கமில்லாமல் வெளியில் கூறிக் கொண்டு ஏதேதோ சங்கத்தையும், பொது சேவையையும் செய்து வர்ரதாக வேறு தம்பட்டம் அடிச்சி திரியுதுங்க'

'என்ன இவ்வளவு சொல்லிட்டிங்க!!'

'அதுதான் 'சேவை'ங்களா...அதுக்குமேலே என்னலே மாற்றுக்கட்சி 'மகான்'களைபற்றிவிசேசமா சொல்ல முடியாதுங்க!!'

'அப்படிங்களா...சரி! இருக்கட்டும்...ஆமா...நம்ம கழகம், கட்டுப்பாட்டை மீறுமா, கடமை செய்ததினலே தானுங்களே, 'காங்கிரசு கோட்டை'யெல்லாம் சரிஞ்சி பழைய மண்ணேடு கலந்து மண்ணுகிவிட்டிருச்சி என்னங்க?...!'

'ஓகோ! அதுவா...இப்ப நினைச்சாலும், ஒப்பாரிவைக்கத்தான் தோணுது!'

'எவ்வளவு உண்மையை சொன்னலும் பொதுமக்கள் புரிஞ்சிகிட்டா புது வாழ்வு தான்!'

'ஆமா...மா!...அப்படி இல்லேன்ன, கொள்ளை, ஏமாற்று மோசடி செய்கிற பேர்வழிகளுக்குத்தான் பெருவாழ்வு!'

'நம்ம கழகத்தை எதிர்க்கிறதுக்கு எத்தனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காங்க தெரியுங்களா...!'

'தெரியுங்க தெரியுங்க!'

'இன்றைக்கு மலைநாட்டுத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவேண்டும், அவர்களின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு ஆகிய பிரச்சினைகளை தீர்த்துவைக்க வேண்டும் என்று கடந்த காலத்திலிருந்து கட்சிகளை வைத்து 'தில்லு முல்லு' செய்ததை தவிர தங்கள் பிழைப்பிற்கும், நாட்டின் பிழைப்பிற்கும் உழைத்துக் கொட்டிய உத்தம குலத்தின் உயர்வுக்கு ஏதாவது

## மலை நாடு

நடவடிக்கை மேற்கொண்டிருப்பார்களா?'

'ஐயோ அதையேன்... ...சொல்றீங்க...அவைகளை செய்யவா சங்கம் அமைத்தார்கள் இல்லையே!'

"கார், பங்களா, தோட்டம், மளிகை கடை, ஆகியவைகளை முதலில் தேடிக் கொள்ள வேண்டும், சுய தேவைகளை பூர்த்திசெய்து கொண்டுதான் மற்றவை பின்னல் என்ற இலட்சியத்திற்காக பாடுபட்டும் வருகிருர்கள் என்பதுதானே இன்றைய நிலை!'

'ஆ! அதுமட்டுங்களா... ...காட்டிக் கொடுத்தல், இது தான் அவர்களின் கை தேர்ந்த கட்சி வேலை!'

'வந்துங்க தலைவரே! நம்ம கழகம் பாருங்க, தோட்டப் பாடசாலைகளில் எட்டாம் வகுப்புவரை கல்வியும், தோட்டங்களின் சுகாதார சேவைகளையும் சீராக்க திட்டமிட்டு செயலாற்றியும் வருகிறது. நிச்சயமாக தோட்டக் கல்விப் பிரச்சினை 'வெற்றிபெறும் வரை ஓயமாட்டோம்' என்று உறுப்பினர்கள் சங்கற்பம் செய்துங் கொண்டிருக்கிருர்கள்!'

'இதுவல்லவா பணி!'

'ஆமா என்னலான ஒத்துழைப்பு என்றுமே இதற்கு உண்டு.'

'சரிங்க, நேரமும் நினைப்பும், சரியா வந்தால் நிச்சயம் வெற்றிதான். நம்மினத்திற்கும் நல்ல வாழ்வுதான் என்னங்க...!'

'நேரமே ஆகிருச்சி, நான் வர்ரேன், பிறகு சந்திப்போம்.'

[ஒரு தோட்டக் கமிட்டித் தலைவரும், ஒரு உறுப்பினரும் நிகழ்த்திய உரையாடல்.]

## திருக்குறள் மணி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்தெடுத்து நவம்பர்த் திங்கட் கடைசி நாளுக்கு முன் தமிழ் மறைக் கழகத்துக்கு அறிவித்து, அதன் ஒப்புதலைப் பெறல் வேண்டும். ஆய்வுரைக்கு ஒப்புதல் பெற அனுப்பும் விண்ணப்பத்தில் ஆய்வுரையின் பொருளைப் பற்றிய விபரங்களும் ஆய்வுரைக்குப் பயன்படுத்தும் நூல்களும் குறிப்பிடல் வேண்டும். ஆய்வுரையைத் தேர்வுக்கு அடுத்த மூன்று திங்களுக்குள்ளே தமிழ்மறைக் கழகத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

### விண்ணப்பங்கள்

தேர்வுக்குத் தோற்ற விரும்புவோர் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தை நிரப்பித் தேர்வுப் பணம் பத்து ரூபாவுக்கு ஓர் காசுக் கட்டளையும் சேர்த்துத் தமிழ் மறைக் கழகத்துக்குத் திசெம்பர்த் திங்கள் கடைசி நாளுக்கு முன் அனுப்புதல் வேண்டும். (காசுக் கட்டளையைத் தலைவர் பெயருக்கு வெள்ளவத்தை அஞ்சல் அலுவலகத்திற் பணம் பெறத்தக்கதாக அனுப்புக).

### சான்றிதழ்

தேர்விலே தேறுவோருக்குத் "திருக்குறள் மணி"ப் பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

விண்ணப்பப்பத்திரமும் தேர்வு விபரங்களும் பெற விரும்புவோர் தமிழ் மறைக் கழகத்துக்கு 50 சதமுத்திரை அனுப்புதல் வேண்டும்.

## திருக்குறள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் இவ்வாண்டில் வெளியாகும்.

### மலாயில்

சுவாமி சத்தியானந்தா அவர்களுடைய நன் முயற்சியால் நூற்று முப்பது திருக்குறள்கள் மலாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள. தமிழ் மொழியையும் அரசாங்க மொழியாக்கி அதன் ஆக்கத்துக்கும் நன்கு உழைத்து வரும் சிங்கப்பூர் அரசினரின் தேசிய மொழி பண்பாட்டுக் கழகம் திருக்குறளை விரைவில் மலாய் மொழியிலும் சீன மொழியிலும் மொழிபெயர்க்க முயலும் என்றறிகிரோம்.

இந்திய அரசாங்கத்தின் நிறுவகமான இந்திய சாகித்திய மன்றம் திருக்குறளை இந்தியாவின் பிரதேச மொழிகளில் மொழிபெயர்க்க முடிவு செய்து இப்பெரும் பணியைச் செய்யவுந் தொடங்கியுளது. உருது மொழி பெயர்ப்பும், குசராத்தி மொழிபெயர்ப்பும் முடிவடைந்துள. வங்காள மொழிபெயர்ப்பு நடைபெறுகிறது.

இன்னுஞ் சில ஆண்டுகளில் உலகத்திலுள்ள ஏனைய சிறந்த மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுப்போற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

## தோட்ட மக்களை இனமாற்றம் செய்யச் சதி

**மலையகம் வாழ் 10,000,00 க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் எந்த மொழியின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிருர்களோ, அந்த மொழியின் மூலம் அவர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி போதிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. அதற்கு முதற்படியாக அரசாங்கம் தோட்டப் பாடசாலைகளைத் தேசியமயமாக்குமாம். அதற்கான மசோதாவும் தயாராகிறதாம்.**

தாய் மொழியின் மூலம் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கவேண்டுமென்பது அனைவராலும் அங்கிகரிக்கப்பட்ட ஒரு நியதி. அதாவது: ஒவ்வொரு பிள்ளைக்கும் அதன் தாய் மொழியே போதனு மொழியாகவேண்டும்.

ஆனல் சட்ட மூலம் தாய் மொழியை அகற்றிவிட்டு வேற்று மொழியொன்றின் மூலம் கல்வி போதிப்பதென்ருல், உண்மையில் ஆட்சியாளர்களுக்கு அசாத்திய துணிச்சல்தான் வேண்டும்!

### சதித்திட்டத்தின் நோக்கம்

மலையகம் வாழ் தமிழரின் எதிர்காலச் சந்ததியினரைச் சிங்களவராக மாற்றி, தமிழ் இனத்தையும், தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் அழித்து விடுவதே இந்தச் சதித் திட்டத்தின் நோக்கம்.

பத்து லட்சம் மக்களின் குடியுரிமையைப் பறித்து விட்டதால், கல்வி உரிமையையும் பறித்து விடலாம், இறுதியில் இனமாற்றமும் செய்து விடலாம் என்று ஆட்சியாளர் எண்ணுவதாகத் தெரிகிறது.

அவர்களை அன்னியர்களென்று ஆட்சியாளர் கருதுகின்றனரேயன்றி, சம்பந்தப்பட்ட அந்த மக்கள் தங்களைப் பற்றி அப்படிக் கருதவில்லை.

### மக்கள் தீர்ப்பு

யார் என்ன கூறிய போதிலும், எத்தனை சட்டங்களை இயற்றிய போதிலும் தாங்கள் இந் நாட்டுப் பிரஜைகளே என்பதை அவர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். அவர்களின் அந்த நிலையை யாராலும் அசைக்க முடியாது.

அன்னியருக்கு அரசகரும மொழி மூலம் கல்வி போதிக்கலாம் என்ற ஒரு நியதி உண்டாம். அதைப் பயன்படுத்தி, 10,000,00 மக்களையும் அன்னியர்களாகத் தாங்களே எண்ணிக் கொண்டு அல்லது தாங்களே அதற்கான சட்டம் செய்து கொண்டு, அவர்களுக்குச் சிங்களத்தைப் போதனு மொழியாக்க முயற்சி செய்வது அவலை நினைத்து உரலை இடிப்பதாகும்.

தங்களின் இனம், மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைத் தள்ளிவிட்டு, தங்களுக்கு முற்றிலும் பொருந்தாத இனம், மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை மலைநாட்டுத் தமிழர்கள் தழுவிக் கொள்ளுவார்களென்றுஎதிர்பார்ப்பவர்கள் ஏமாந்து போவார்கள்.

காங்கிரஸ் சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆகவே, தமிழ் இனத்தையும், மொழியையும், கலாசாரத்தையும் அழிக்க அவை ஆட்சியாளருக்குப் பக்க பலமாக நிற்குமென எதிர்பார்க்கலாம்.

ஆனல் 'தோட்டச் சிங்கம்' வீறுகொண்டெழுந்து விட்டால் காங்கிரஸும் ஓட்டம் பிடிக்க வேண்டியதுதான்.

காங்கிரஸின் உதவியை நம்பி சிங்களத்தைத் திணிக்க முயன்ருல், ஆட்சியாளர் இறுதியில் ஏமாந்து போவது திண்ணம்.


### பரீட்சைகள்

பின் வரும் பரீட்சைகளில் ஏராளமான மாணவர்களின் தேர்ச்சிக்கு யூனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ் அளிக்கும் திறன்மிக்க அஞ்சல் பாடங்களே காரணம். சித்திெய்த விரும்பும் ஒவ்வொரு மாணவரும் எங்களுடன் தொடர்பு கொள்க.

இலங்கை பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வும்
ஜி. சி. ஈ. உயர்தரத் தேர்வும்!
கலை, விஞ்ஞானம்
கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண ஜி. சி. ஈ.) தேர்வு:
கலை, விஞ்ஞானம்,
வாணிபம்.

**யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,**
நெல்லியடி கரவெட்டி
கிளைகள்:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
13, முதலாவது சப்பெல் ஒழுங்கை, வெள்ளவத்தை. கொழும்பு-6.



**"மந்திர சக்தியை"**

நிருபிப்பதற்காக உங்கள் காரணம் எதுவானலும் நிறைவேற்றித்தர முடியும். உங்கள் காரணத்தை விபரமாக எழுதி அனுப்பவும்.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்
**பி. எம். திசாநாயக்க**
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் தலைமை காரியாலயம்
கம்பளை.



**முருங்கை போஞ்சி விதைகள்**

வெகு நாளாக எதிர்பார்த்திருந்த அமெரிக்கன் முருங்கை போஞ்சி, குத்து பட்டர், குத்து முருங்கை போஞ்சி போன்ற பல ரகங்கள் வந்துள்ளன.

தேவையிருப்பின் ஆடர் அனுப்பி வைக்கவும்.

**எஸ். ஏ. பொன்னுத்து**
தபால் பெட்டி 16,
நுவரெலியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னியின் செல்வனில் சரோஜாதேவி நடிக்கமாட்டார்?

## வைஜயந்திமாலா அமர்த்தப்படலாம்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தயாரிக்கும் தமிழ்-ஆங்கில படமான 'பொன்னியின் செல்வ'னில் சரோஜாதேவி நடிக்க மாட்டார் எனத் தகவல் கிடைத்துள்ளது. இதற்கான காரணம் மர்மமாகவே உள்ளது.

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் பேராசிரியர் 'கல்கி' எழுதிய பொன்னியின் செல்வன் கதையைதமிழிலும், ஆங்கிலத்திலும் வர்ணத்தில் தயாரிக்க வேண்டிய ஒழுங்குகள் செய்துவிட்டார் என்பது தெரிந்ததே. பொன்னியின் செல்வராக எம். ஜி. ஆரே தோன்றுவதுடன் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார். இந்த விபரங்கள் ஏற்கனவே சுதந்திரனில் வெளியாகின.

நடிகர் நடிகைகளின் பட்டியலில் சரோஜாதேவியின் பெயரும் இருந்தது. ஆனால் சரோஜாதேவியை நீக்கிவிடுவதற்கு எம். ஜி. ஆர்.ஆலோசித்து வருவதாக சினிமா வட்டாரங்களில் பலத்த வதந்தி அடிபடுகிறது.

சரோஜாதேவி தோன்றவிருந்த பாகத்தில் ஆங்கிலம் சரளமாகப் பேசவல்ல வைஜயந்திமாலாவைப் போட்டு நடிக்கும்படி பலர் புரட்சி நடிகருக்கு ஆலோசனை கூறியதாகவும் தெரிய வருகிறது. இந்த வார இறுதிக்குள் முழு விவரங்களும் வெளியாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

# தகராறு வரலாறு





எம். ஜி. ஆர், சிவாஜி ஆகியஇருவருடைய தயவையும் நாடித் திரியும் கூட்டம் ஒன்று தனித் தனியே இயங்கி வருகிறது. படத் தயாரிப்பாளர்கள் பலரும் இந்த வட்டத்துள் சிக்கி இருக்கிறார்கள். எம். ஜி. ஆரை தமது படங்களில் புகுத்தி விரைவாகப் படத்தை முடித்துத் திரையிட வேண்டுமென்றால் ஏதாவது ஒரு கதையைச் சோடித்து புரட்சி நடிகரிடம் புளுகியடிப்பார்கள். கதையோடு கதையாக சிவாஜியைப் பற்றியும் சில வார்த்தைகளை அனாவசியமாக உதிர்த்து விடுகிறார்கள்.

இதே ரீதியில் சிவாஜி கணேசனிடமும், சிவாஜியின் கருணைகடாட்சம் வேண்டி நிற்கும் ஒரு குழு, புரட்சி நடிகரைப்பற்றிக் கதையளக்கும். இயல்பாகவே இச்சந்தர்ப்பங்களில் குரோதம் இரு சாராரிடத்திலும் வளர இடமுமேற்படுகிறது.

கெய்ரோவில்நடைபெற்ற திரைப்பட விழாவுக்கு சிவாஜி கணேசன் புறப்படும் போது அவரை வழியனுப்புவதற்காக மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சினிமாத்துறையாளர்களை வரும் திரண்டிருந்தார்கள். மலர் மாலை அணிவித்த எம். ஜி. ஆரின் பாதங்களில் விழுந்து சிவாஜி விடை பெற்றதையும், இருவரும் கண்ணீர் மல்க ஆரத் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டதையும் கண்டவர்கள் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டபேறு பெற்றவர்களே. இத்தகைய அன்பு உள்ளங் கொண்ட சிவாஜி—எம். ஜி. ஆர் இருவரையும் வெட்டிப் பிரிப்பது பெரும் பாதகமாகும்.

1959ம் ஆண்டு சென்னையில் நகரசபைத் தேர்தல் ஜுரத்தின் வேகம் மிகக் கோரமாக ஏறிக்கொண்டிருந்தது. சிலவாரங்களுக்கு முன்பாகத்தான் சிவாஜி கணேசன் வடநாடு சென்று திரும்பியிருந்தார். ஒருகூட்டத்தில் பேசும் போது, 'கலைத்துறையில் தெற்கு வளர்ந்துள்ளது வடக்குத் தேய்கிறது' என்று கூறினார். அடுத்த நாள் வெளியாகிய தினசரி ஒன்று கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்திருந்த செய்தி ஒன்று பெரும் புயலைக் கிளப்பியது.

'தெற்கு வளருகிறது வடக்குத் தேய்கிறது என்கிறார் சிவாஜி. தி. மு. கழகத்திலிருந்து வெளியேறிய சிவாஜி கணேசன், தி. மு. க வின் தெற்குத் தேய்கிறது என்ற கருத்துக்கு மாறாக கருத்துத் தெரிவித்துள்ளார்' என்ற கருத்துப்பட அச்செய்தி பிரசுரமாகியிருந்தது.

இச் செய்தி, பத்திரிகைச் செய்தித் திரிப்புகளுக்கு மட்டுமல்லாமல் எம். ஜி. ஆரினைச் சுற்றி வளைந்து திரியும் குழுவினரின் செருகல்களுக்கும் இலக்காகி விசுவரூபமெடுத்தது.

இராயப்பேட்டையில் நடந்த ஒரு தி. மு.க கூட்டத்தில் அன்று எம். ஜி. ஆர் பிரதான பேச்சாளராகக் கலந்து கொண்டார். புரட்சி நடிகரின் பேச்சின் பின்னரே நாவலர் நெடுஞ்செழியனும், அறிஞர் அண்ணாவும் பேசுவதாகவிருந்தனர். புரட்சி நடிகரின் பேச்சின் பின்னர் அண்ணாவின் பேச்சைத் தானும் கேட்பதற்கு கூட்டத்தினர் நிற்க விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது.

"எனது அருமைத் தம்பி சிவாஜி, எங்கள் முகாமிற்குள்ளிருந்து வளர்ந்தவர். எந்தக் கருத்தில், தெற்குத் தேய்கிறது என்று கூறுகிறோம் என்பதை நன்கு தெரிந்தவர், சிவாஜி அந்த வார்த்தை கூறியுள்ளார் என்பதை நான் நம்ப முடியாது. அவர் அப்படிக் கூறியிருந்தால்............!" என்று தனது வலது கையை உயர்த்திக் காட்டிவிட்டு வேறு பொருளுக்கு இறங்கி விட்டார்.

இதனால் ஏற்பட்ட பிரதிபலிப்புகள்—அப்பப்பா!

(தொடரும்)

நமது சென்னை நிருபர் தரும் தொடர் சித்திரம்

# 'அளவோடு பணம் போட்டு அழகு படம் பிடிப்போம்'

## படாதிபதிகளுக்கு ம. பொ. சி. அறிவுரை

உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது. அளவோடு பணம் செலவிட்டு படம் தயாரித்தால் படம் தோல்வியுறுவதைத் தவிர்க்கலாம்.

'கர்ணன்' திரைப்பட 100வது நாள் விழாவின் போது ம. பொ. சி. பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'ஒரு படம் நூறு நாட்கள் வரை ஓடி வெற்றி விழாக் கொண்டாடுகிறது. இருந்தாலும் செலவு செய்த பணத்தில் பெரும் பகுதி இன்னும் வந்து சேராத நிலை! தயாரிப்பாளருக்கு பெரும் நஷ்டம். இதுபோன்றதொரு சூழ்நிலை வளர்ந்தால், படத்துறை எப்படி உருப்படும்?'

'ஒரு படத்தை தயாரிக்க ஆரம்பிக்கும்போது, செலவு விஷயத்தில் ஜாக்கிரதையாகஇருக்கவேண்டும். தமிழ் படங்களைப் பார்க்கும் தமிழ் மக்கள் மூன்றுகோடி பேர் தான் இருக்கிறார்கள். இதை மனதில் வைத்துநாம்செலவு செய்யும் தொகை போடவேண்டிய எல்லைக்குள் அடங்கியிருக்கிறதா என்பதை கவனிக்கவேண்டும்.

"நன்மையும் தீமையும் எல்லாத் தொழில்களிலுமிருக்கிறது. குறை கூறுவதன்மூலம் தொழில் நசிந்துப்போவதை நான் விரும்பாதவன். தான் வளரவேண்டும் என்பதோடு இந்த தொழில் வளரவேண்டும் என்ற எண்ணம் இந்தத் தொழிலிலுள்ள எல்லோருக்கும் இருக்க வேண்டும். சினிமாத் தொழிலைப் பொறுத்தவரை கூட்டு முயற்சிதேவை. ஒரு படம் தோல்வியடைந்தால், அதற்கான காரணத்தை ஆராய்ந்து, அடுத்துத் தயாரிக்கும் படங்களில் அவற்றை தவிர்க்கவேண்டும். படகில் உட்கார்ந்திருப்பவன், முதலில் படகைக் காப்பாற்றவேண்டும். அப்போதுதான் தன்னையும் காப்பாற்றமுடியும். அதுபோல தொழிலைத்தான் முதலில் காப்பாற்றவேண்டும். சோதனைகள் வரும்போது அதைச் சமாளிக்கும் திறன் வேண்டும்.

'இன்றைய மக்கள் உங்களைவிட புத்திசாலிகளாக இருக்கிறார்கள்'. படத்தைப் பார்த்துவிட்டு கதை இல்லை என்று சொல்லும் அளவுக்கு மக்கள் வளர்ந்து இருக்கிறார்கள். ஆகவே நல்ல கதைகளாகப்பார்த்துப்படமாக்க வேண்டும். எழுத்தாளர்கள் நன்கு கவனம்செலுத்தி உழைக்கவேண்டும். எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிக்க, படத்துறையினரும் அவர்களைப் போஷிக்க வேண்டும்.

'நமக்காக மட்டுமல்ல, நாட்டுக்காகவும் நாம் இருக்கிறோம் என்பதை உணர வேண்டும். மாபெரும் பல்கலைக்கழகம் சாதிக்கமுடியாத ஒன்றை ஒரு திரைப் படம் சாதிக்கமுடியும்.

'எல்லோருடைய படங்களும் நன்றாகஓட வேண்டும். ஒருவர் படம் தோல்வியுற்றால், அது தொழிலுக்கே ஆபத்துதான். போட்டி,முன்னேற்றத்தைவளர்க்கவேண்டுமேதவிர, பகையைவளர்க்கக்கூடாது.'

## நன்னேக்கு நாடக சபா

நாடகக் கலையின் வளர்ச்சி சமுதாய சீர்திருத்தம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்படி சம்மாந்துறை நன்னேக்கு நாடக சபா 1-5-64ல் உதயமாகியது. ஏற்கனவே நாடகக் கலையில் எழுச்சி மிக்க கலைஞர்களால் நிறுவப்பட்ட இச் சபா, இந்த வருடத்தில் சிறந்ததொரு நாடகத்தை அரங்கேற்றுவதற்குரிய ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்து வருவதாக இதன் தலைவர் திரு. யூ. செயின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இலங்கை எங்கிலுமுள்ள நாடக இயக்கங்களுடன் தொடர்புகொண்டுழைக்க இச் சபையினர் விரும்புகின்றனர்.

காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்
1227



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சரித்திர குடிமையியற் கழகம் நடத்திய 'ஆவது பெண்ணாலே' என்னும் நாடகத்தில் இரு காட்சிகள்.



31ம் திகதி மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் தில்லை நளின கலா நாடக மன்றத்தாரின் 'முல்லைக் குமரி' நாடகத்தில் காசியப்பனுகத் தோன்றும் திரு. மைக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானுறையும் வள்ளுவன்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ருென்று விரித்து மழுப்பாமல் விடயத்துக்கு வருகிறேன்; 'உலகம் பழித்தது ஒழித்துவிடின் மழித்தலும் நீட்டலும் வேண்டாம்' என்பது என் கூற்றல்லவா... அது காரணம்; நான் பெருந்தாடியைக் குறுந்தாடியாக்கிச் சவரத் தொழில் செய்தது, காரியம்!

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஆறுமுகநாவலர் அவர்கள் திருவாய் மலர்கிருர்:

ஐயா, ஒன்று செய்தீர்கள், அதையும்—இன்று செய்தீர்கள்...நன்று நன்று. 'செய்வதைச் சொல்; சொல்வதைச் செய்'; இதைத்தான் நான், பூலோக வாழ்வில் கடைப்பிடித்தேன். உங்களுக்கு என் பாராட்டு....... பாரதி, பேச்சில் இடைமறித்துப் பாடுகிருர்:

சொல்லிலே வாழ்க்கையின்
சூழ்ச்சி தெரித்தனே;
சுத்த சன் மார்க்கத்தை
நித்தியமும்
தெள்ளிய இந்தமிழ் ஏட்டில்
படைத்தனே;
தேறினேம், நாம் அதில்
ஊறினமே.

★

வான் புகழ் தங்களுக்கு இந்த
குறள்; தமிழ்
வழங்கு பொன்னுட்டுத்
திருமறையாய்
நாம் புகழ்ந் தேற்றவும்
தேன் கவி சாற்றவும்
நற்கரு வூலங்கள் வழங்கியதே!

★

தெய்வத் தமிழ்மறை
வையத்திற்கே தந்து
தெய்விக மான எம்
முன்னவனே;
ஐய; இந் நாளிலெம் அஞ்சலி
சாற்றினேம்
ஆசி கூறுய் கவி மன்னவனே

இவ்வண்ணம் பாரதி பாடி முடித்ததும், நாவலர் பேச்சைத் தொடங்குகிருர்: சுவாமி; இந்து சமயக் கோட்பாடுகளும் இன் தமிழ்ச் சமூகத்தின் மேம்பாடுகளும், தங்கள் தெய்வக்குறளில் சுருக்கமாகவும் சூக்குமமாகவும் நன்கு விளக்கப்படுகின்றன. அறத்துப் பால் அமிர்தகலசமாகவும், பொருட்பால் பொற் சுரங்கமாகவும், என்றும் நிலை நின்று, கொள்பவர் கொள்ளும் அளவுக்குக் கொடுத்துதவுமென் பதில் ஐயமே இல்லை...இக் கட்டத்தில் பாரதி இடைமறித்து குறும்பு கலந்த குரலிலே, 'நாவலர்பிரான் அவர்களும், விபுலாநந்த சுவாமியும் கட்டைப் பிரமச்சாரிகள்! ஆகவே, அவர்கள் காமத்துப் பாலையிட்டுப் பேசவில்லை; அப்பாலின் கவியின்பம், மற்றெப்பாலிலும் காண முடியாத வகையில் அமைந்துள்ளது! ஐயா; 'பாட்டிற் கலந்திட ஒரு பத்தினிப் பெண் துணை கொள்ளாத' இவ்விருவருக்கும், அடுத்த பிறவியிலாவது......' என்று இழுத்தார்.

இந்நிலையில், விபுலாநந்தர் புன்முறுவல் சிந்தியவாறே புரட்சிக் கவிஞனைப் பார்த்து 'எம் இருவருக்கும், பாட்டில் கலந்திடப் பத்தினித்துணை இல்லையென்று பாரதியார் திட்டமாகக் கூறுகிருரே...அவருக்குச் செல்லம்மாள் இருந்தது போல எங்களுக்குக் 'கலையம்மாள்'...அதாவது,வெண்டாமரை வாசனி, விடுதல் அறியா விருப்புடன் எம்மோடு விற்றிருந்தாளே...' ...எனக் கூறியதும், வள்ளுவருக்கே சிரிப்புத் தாங்கமுடியவில்லை. 'தம்பி விபுலாநந்தன், தருணம் பார்த்துத் தர்க்கரீதியாகப் பேசுவதில் வெகு சமர்த்தன்! வாழட்டும் உன் வாய் மொழிகள்'... ...என வாழ்த்தினர், வள்ளுவர்! அவ்வாழ்த்துக்குகைம் மாருக, ஈசன் உவக்கும் இன் மலர் மூன்றைப் பூலோகத்தில் இசைத்ததுபோல, வள்ளுவர் உவக்கும் வாசமலர் மூன்றை, இதோ வானுலகில் இசைக்கிருர்:

பொன் உதிர்த்தும்
முள்முருக்கோ
புன்னையவள்
மென் மலரோ,
'எண் எழுத்தைக் கண்'
என்ருர்க்
கேற்றமலர் ஏதடியோ?
பொன் உதிர்த்தும் பூவுமல்ல,
புன்னை மலர்க்
கொத்துமல்ல;
வண்தகைசேர் வாழ்வலரே
வள்ளுவனுர் வேண்டுவது.

★

செறி தாழைச் செம்மடலோ,
செவ்வரத்தம்
பூங்கொம்போ,
இருதாளிற் குறள் தந்த
எம் பெருமான்
வேண்டுவது?
செறிதாழம் போதுமல்ல,
செவ்வரத்தங்
கொம்புமல்ல;
கரவறியா உள்மலரே
கவிமகனுர் வேண்டுவது.

★

செவ்வாம்பற் பூங்கமழோ,
செகத்தலர்ந்த கற்பகமோ;
அவ்வை முன்னேன்
ஆனவர்க்கு
அர்ப்பணிக்கும்
மலரெதுவோ?
செவ்வாம்பற் கமழல்ல;
செப்பிய கற் பகமுமல்ல;
நவ்வை இலா நெஞ்சலரே
'நாவலர்கோன்'
வேண்டுவது!

சுவாமி, இவ்வாறு பாடியதும், நாவலர் எழுந்து: ஆகா...அற்புதமான பாடல்! அன்று,முப்பாலைக்கொடுத்த எந்தாய்க்கு இன்று, மும்மலர்களைச் சூட்டிஞய்... ...இதோ, யானும் இந் நல் நாளில் என் இதய ஒலியான கவிமலர் ஒன்றைச் சூட்ட யாசிக்கிறேன்...எனக் கூறி இதோ...பாடுகிருர்:

சமயமெலாங் கூறுகின்ற
சமரசத்தைச்
சாருகப் பிழிந்து வார்த்தே
அமையு தமிழ்
வேதமெனும் அருங்குறளை
அகிலத்திற் களித்த
தேவே!
உமையவளுக் கொருபாக
முவந்தளித்த
ஒருமுதல்வன்
நிலைநின் ருங்கு
எமதருமைக் கவிமன்னு!
இருவேறு
உலகினிலும்
இசைந்து வாழி.

வாழ்த்துப் பாடலைச்செவியுற்ற வள்ளுவன், பூரித்த மனதோடு, தன் பூசைத்திரு நாளில் வருகை தந்து பாராட்டிய மூவருக்கும் நன்றிகூறினர். இவ்வளவில், மூவரும் வள்ளுவனிடமிருந்து, பிரிய விடை கோரினர். ஆம்; 'உவப்பத் தலைக்கூடி, உள்ளப் பிரிதல், அனைத்தேபுலவர் தொழில்!' வாழ்க, வானுறையும்வள்ளுவன்.

# சிறைகாக்கும் காப்பு..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிடை அன்ன மற்றன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு' என்று விளம்புகின்ருன். இன்னும் காதலி பிரிவது தன் வாழ்க்கையே முடிவதற்குச் சமானம் என்னும் பொருள்பட 'வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை, சாதல் அதற்கன்னவர் நீங்குமிடத்து' என்றும் கூறுகிருன் அக் காதலன். பெண்ணின் உயர்வு பற்றிய உவமை அணி இத்துடன் நின்று விடவில்லை. 'கருமணியிற் பாவாய் நீ போதாயாம் வீழுந்திருநுதற்கில்லையிடம்' என்று கூறும் காதலன் வாக்கிலே பெண்ணைக் கண்ணின் கருமணிப் பாவையாகப் போற்றும் சிறப்பைக் காண்கின்ருேம். 'கண்ணில் இருக்கும் பாவையே நீ விலகு, நான் விரும்பும் அழகிய நெற்றியையுடைய பெண்ணிற்கு நீ இருப்பதால், இடமில்லாதிருக்கின்றது' என்று அவன் கூறும் வாக்கிலே பெண்ணற்ற உலகு கண்ணற்ற வாழ்வாக இருண்டு விடும் என்ற கருத்தினை வள்ளுவர் வலியுறுத்துவதை நாம் காண முடிகிறது.

## பெண் அடிமையா?

இவ்வாறு பெண்ணை உயிராக, வாழ்க்கையாகக் கண்ணின் கருமணியாக மதிப்பதுடன் திருப்திப்பட்டு விடவில்லை, வள்ளுவர். அவளைத் தெய்வத்துக்குச் சமமாகவே ஒரு குறளில் உயர்த்தி விடுகின்ருர். 'உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்' என்று காதலன், தன் காதலியை மறவாது நினைத்துக் கொண்டே இருப்பதாகக் கூறுகின்ருன் — நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றும் நினைக்கத் தக்கது இறைவன் திருநாம அன்ருே? இவனே தன் காதலியை அந்த ஆண்டவனை நினைப்பது போலல்லவா இடையருது நினைக்கின்ருன். இதைவிட வேறு பெருமை பெண்ணுக்கு வே[illegible] கணவனுகப் போகின்[illegible] காதலியைத் தெய்வமாக எண்ணும் பொழுது, மனைவியானவள் கணவனைத் தெய்வமாக எண்ணித் தொழுவதால் அவளுக்கு இழிவு ஏற்பட்டு விடுமா? ஒரு பொழுதும் இல்லை, இதனை வள்ளுவர் கருத்தில் கொண்டே 'தெய்வம் தொழாள் கொழுநற் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்று குறள் எழுதினுர் எனலாம். இதனைத் தப்பர்த்தம் செய்து பெண்ணை அடிமையாகக் கணவனைத் தொழுது போற்றச் சொல்கிருர் வள்ளுவர் என்று சிலர் குற்றம் சாட்டுவதேனே?

## பெண் வழி சேறல்

'பெண் வழி சேறல்' என்ருெரு அதிகாரம், அதில் மனைவி சொல் கேட்பவன் மடையன் என்கிருரே வள்ளுவர், இதுவா அவர் பேசும் சமத்துவம் என்று சிலர் கேட்கின்றனர். உண்மையில் வள்ளுவர் தெய்வமாக மதிக்கும் பெண்ணை அறிவற்றவளாக இழிவுபடுத்தும் நோக்குடன் இவ்வதிகாரத்தை எழுதவில்லை. சில ஆண்கள் காம இன்பத்தில் மயங்கி, மதிகெட்டுத் தமக்கு மனைவியாக வாய்த்தவள் தீய குணமுடையவளா இல்லையா என்பதை அறியும் ஆற்றலிழந்தவராய் அவள் சொற்படி நடக்க முற்படுகின்றனர். இது ஆண்மைக்கு இழுக்கு என்று அவனைக் கண்டிப்பதே இவ்வதிகாரத்தில் வள்ளுவரின் நோக்கமாகத் தெரிகின்றது. பெண்ணுனவள் சமத்தும் பேசி, எத்துறையிலும் புகுந்து செயலாற்றினுலும் இயற்கையானது அவளுக்கு மக்களைப் பெற்று வளர்க்கும் பெரும் பணியைச் சுமத்தி இருப்பதால் அவளால் மற்றைய புறத்துறைகளில் முழுத் திறமையும், ஆர்வமும் காட்டி உழைக்க முடியாதிருக்கின்றது.

இதனை மனதிற்கொண்டே [illegible] பொருளீட்டுதல் [illegible] விடயத்தில் எல்லாம் பெண்களின் ஆலோசனை ஒன்றையே பெரிதென மதிக்கக் கூடாது என்ருர். பெண்கள் ஒருவகையில் ஆடம்பரச் செலவு செய்யும் மனப்பான்மை உடையராகவே திகழ்கின்றனர், இதனுல் வரவுக்கு மிஞ்சிய செலவினுல் குடும்பம் அல்லற்பட நேரிடும்என்பதை எண்ணித்தான் போலும் வள்ளுவர் தீய வழியில் பெண் உன்னைச் செல்லத் தூண்டினுல் அவள் உன் உயிரினுமினிய மனைவியாக இருந்தாலும் சரி, அவள் வழி செல்லாதே என்று ஆணுக்கு அறிவுறை சொல்ல இவ்வதிகாமத்தை எழுதினுர் என்றுதான் நாம் கருத வேண்டும்.

## ஆண் கற்பு

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்" என்று பெண்ணிற்குக் கற்பின் அவசியத்தை நேராக வலியுறுத்துவது போல் ஆணுக்கும் கற்பு வேண்டும் என்பதை அதே பதப் பிரயோகத்தினுல் வலியுறுத்தவில்லை எனினும் வள்ளுவர் ஆண்களுக்குக் கற்பு அவசியம் என்பதனை இரு அதிகாரங்களில் மறைமுகமாக வலியுறுத்துவதைக் காண்கின்ருேம்.

ஒன்று 'பிறனில் விழையாமை', மற்றையது 'வரைவின் மகளிர்' என்பதாகும்— பிறன் மனைவியை விரும்பாதே என்று கூறுமிடத்தில் 'விளித்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற் தீமை புரிந்தொழுகுவார்' என்று பிறனில் விழைபவனைச் செத்த பிணத்திறகுச் சமானமாக வர்ணித்துக் கற்பின் அவசியத்தை உணர்த்த வள்ளுவர் முற்படுகின்ருர்.

## புதுமை வாதி

இத்தக் கற்பு பற்றிப் பேசும் பொழுதுதான் வள்ளுவர் பெண் அடிமை ஒழிய வேண்டும் என்ற புதுக் கருத்தினை வெளியிட்டுப் புரட்சி செய்கின்ருர் என்பதற்கான சிறந்ததொரு சான்றினைக் காண்கின்ருேம். ஒரே ஒரு குறள் பெண் உரிமை என்ற புரட்சிக் குரலை நம் செவிக்கெல்லாம் கேட்கும்படி ஒலிக்கின்றது எனலாம். அதுதான் "சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர் நிறைகாக்கும் காப்பே காப்பு" என்ற குறளாகும்.

அந்தக் காலத்தில் பெண்களை அடிமையாக எண்ணியதோடு அவர்கள் பிறர் கண்ணிலும் படாதபடி பூட்டி வைத்தார்கள். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று அடுப்பங்கரையில் பெண்ணைச் சிறை வைத்த சமுதாய வழக்கத்தைத் தகர்த் தெறிந்து பெண்ணிற்கு விடுதலை வேண்டும் என்ற உரிமை முழக்கத்தை வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல் அழகிய வார்த்தைகளில் ஆனுல் மிக ஆணித்தரமாக ஆண் சமூகத்திற்கு எடுத்தியம்பி விட்டார். இக் குறள் வழி வள்ளுவர் என்றுதான் கூற வேண்டும்.

மகளிர் தம் மனத் திண்மையாற் காப்பது கற்பு. அவர்களை நான்குசுவர்களுக்குள் சிறை வைப்பதால் மட்டும் கற்பு காக்கப்படுகின்றது என்று கனவு காண வேண்டாம்—சிறை வைத்தால் உடலைப் பாதுகாக்கலாம்; ஆனுல் கற்பு உள்ளத்தையும் பற்றியதாகும், உள்ளத் தூய்மையைக் காக்கச் சுவர் துணை செய்யாது என்று ஆண்களுக்கு அறிவுரை பகரும் வள்ளுவரையும் அதே சமயம் பெண்கள் மனத் திண்மை உடையராய், கற்பினைப் பேணி உரிமை பெற்று வாழ முன் வர வேண்டும் என்று பெண்களுக்கு நல்லுரை வழங்கும் புதுமைவாதி வள்ளுவரை நாம் திருக்குறளில் சந்திக்கின்ருேம்.

# மலரடி வணங்கிடுவோம்

"ஜெயம்"

ஈரடி களிலே இவ்வுல களந்திட்ட
இறைவனும் வள்ளுவனே—பொது
மறைதந்த வல்லவனே
சீரடி போற்றியே சிலமாய் நாம்வாழ
செய்வோமே சபதமதே—நலம்
பெய்வானே சுபம்நமதே!

நேரடி வழியினில் நேர்மையாய் வாழ்வாங்கு
வாழவே குறள்தந்தான்—சிரம்
தாழவே அருள்தந்தோம்
காரடி பிறக்கின்ற கருணையாம் மழைபோல
கருத்தையே ஆக்கினன்பால்—மனம்
நிறுத்தியே நேக்கினேம்யாம்!

உலகநிலை உண்மையாய் உய்த்துணர நாமுமே
உவந்துபல் செய்யுள்தந்தான்—புவி
அளந்துநல் மெய்யைக்கண்டான்
கலகநிலை மாறியே களிப்புடன் வாழ்ந்திடும்
காட்சியைக் காணவந்தான்—குறளை
சாட்சியாய் தந்துசென்ருன்!

நலதுபல சொல்லிய நல்லவன் வாக்கைநாம்
நம்மிதயம் கொண்டிடுவோம்-வாழ்வில்
நல்லுதயம் கண்டிடுவோம்
அலகிலா விளையாட் டுடையவர் அருள்பெற
குறளடிக் கிணங்கிடுவோம்—தெய்வ
மலரடி வணங்கிடுவோம்!

# வேலன்று...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

'பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு' அடிமைகளாய் படைக்கஞ்சி வாழக்கூடாது.

'மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்பது ஆன்ருேர் வாக்கு, இதனையே வள்ளுவரும்,

"ஒட்டார் பின் சென்ருெருவன்
வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்

> உயர்ந்த கொள்கை யுடைய பெரியார் வெகுளுவாராயின், அரசனும் இடையே தன்னிலை யிழந்து கெடுவான்.
> —வள்ளுவர்

## 'நீங்கள் ஒரு கணக்குப் புலியா'?

சென்ற இதழில் 'நீங்கள் ஒரு கணக்குப் புலியா?' என்று தெரியாமல் கேட்டுவிட்ட எனது கேள்விக்காக மருமக்கள் அனைவரும் என்னை மன்னிப்பார்களாக.

'மாமா! இப்படிக் கேள்வியைக் கேட்டு விடாதீர்கள். ஏனெனில், மருமக்கள் எல்லோரும் கணக்குப் புலிகளாக மாறினுல், உங்கள் பாடு திண்டாட்டம்தான்' என்று சங்கானையைச் சேர்ந்த மருமகன் மு. சுத்தானந்தம் என்னைப் பயமுறுத்தி இருந்தார்.

அவர் சொன்னது சரி என்பதைச் சென்ற வாரம் மாமா மீது பாய்ந்து வந்த நூற்றுக்கணக்கான கணக்குப் புலிகள் நிரூபித்து விட்டனவே!

நீங்கள் இவ்வளவு உற்சாகத்துடன் போட்டியில் பங்கு பற்றியது, மாமாவுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. வேறு போட்டிகளையும் விரைவில் ஆரம்பிக்கலாமென எண்ணியுள்ளேன்.

'நீங்கள் ஒரு கணக்குப் புலியா?' என்ற புதிருக்கு விடையனுப்பிய நூற்றுக்கணக்கான மருமக்களில், பிழையான மறுமொழி அனுப்பிய மருமக்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இதையிட்டு மாமாவுக்கும் பெருமைதான்.

ஆனுல்.........ஒரு வருத்தமுண்டு. இத்தனை மருமக்களுக்கும் பரிசு அளிக்கவோ அல்லது தனித்தனிப் பாராட்டுதலை அனுப்பவோ இயலாதேயென்பதைத்தான் குறிப்பிடுகிறேன்.

என்ருலும், மருமக்கள் இதனுல் மனம் சோர்ந்துவிட மாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை.

இப்போட்டியில் பங்குபற்றிய மருமக்கள் யாவருக்கும் 'வளர்மதி' சார்பிலும் 'சுதந்திரன்' சார்பிலும் எனது நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முறையே முதல் மூன்று சரியான விடை—விளக்கம் அனுப்பியமூன்று மருமக்களும்தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். அவர்களின் விபரமும் கேள்விக்கான விடை—விளக்கமும் அடுத்த இதழில் இடம் பெறும்.

வணக்கம்.

— வளர்மதி மாமா

## இடமில்லை

'புதுமைகள் பாரீர் உலகினிலே' என்னும் தொடர் கட்டுரைக் கோவை, இடமின்மையால் இவ்விதழில் இடம் பெறவில்லை.

> காமம் மலரை விட மென்மையானது. அதன் மென்மையை உணர்ந்தவரே அதனுல் ஏற்படும் இன்பத்தை நுகர முடியும்.—வள்ளுவர்




# வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளுவன்

—கல்முனை செல்வராசா—

இவ்வையகத்தில் மனிதன் பிறந்து வாழ்ந்து மண்ணேடு மண்ணுக மடிந்துவிடுகிருன். இந்தச்சாபக்கேடு மனித சமுதாயத்திற்கு மட்டுமல்ல, இறைவன் படைத்த உயிர் இனங்கள் அத்தனைக்கும் இதே கதிதான். ஆனுல் மனிதன் பகுத்தறிவுள்ளவன். இறைவன் படைப்பினிலே மனிதன் முதலிடம் வகிக்கின்ருன். அவன் கருணை உள்ளம் கொண்டவன். அவனுக்கு இந்தக்கொடிய சாவிலும் விடுதலை அடைய விலக்கு உண்டு. விலக்கின் உண்மையை அறிய வேண்டுமாயின் எம் வள்ளுவப் பெருமான் எமக்கு யாத்தருளிய குறளை நாம் துருவித் துருவி ஆராய வேண்டும். ஆராய்ந்து அதன் கருத்துப்படி நாம் நடப்போமாயின் இந்தக் கொடிய சாவில் இருந்து நாம் நிச்சயம் விடுதலை அடைவோம்.

குறள், உருவத்தில் கடுகு போன்றதாக இருந்தாலும் அதனிடம் கடலையொத்த கருத்துள்ளது. இந்த உயர்ந்த கருத்துக்கள்தான் எம்மை இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழவைப்பன. நாம் இப்பூமியில் வாழ்கின்ருேம்; ஈற்றில் இருந்த இடமே இல்லாமல் அழிந்தொழிந்து போகின்ருேம். இப்படி வாழ்தல் வெறும் சாரமற்ற வாழ்வாகும். உதாரணமாக ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய, புத்தபெருமானும், யேசுவும், சோக்கிரட்டீசும் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்ருர்கள். இவ்வுலகம் உள்ள மட்டும் வாழத்தான் போகிருர்கள். காரணம் யாதெனில் அன்று அவர்கள் எமக்கு வாழ்ந்து காட்டிய வாழ்வும் அவர்கள் மனித சமுதாயத்தை தவருன வழிகளிலிருந்து காப்பாற்றச் செய்த அளப்பெரும் சேவைகளுமே இன்றும் அப்பெரியார்களின் புகழ் வையத்தில் விளங்கக் காரணமாகும்.

வள்ளுவப் பெருமான் எமக்கு யாத்தருளிய குறளில் மனித சமுதாயத்திற்கு வேண்டிய ஒவ்வொரு தேவையையும் தம் குறளில் முத்துமுத்தாய்எடுத்துந் தந்துள்ளார். இல்லறம் நடத்தி எல்லை அற்ற இன்பம் காண்பதற்கும் துறவத்தை மேற்கொண்டு தூய வாழ்வு வாழவும் பெருமான் அவர்கள் பெரும் உதவி புரிந்துள்ளார் என்பதை மறக்க முடியாது. இல்லறத்தை நல்லறமாக்கி அதில் அன்பும் அறனையும் செப்புறக்கலந்து செம்மையாக வாழலாம் என்பது வள்ளுவரின் அசையாத நம்பிக்கையாகும்.

> 'அன்பும் அறனு முடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது'

என்று கூறுகின்ருர். பிறர் துன்பங்களிலும் இன்பங்களிலும் பங்கு கொண்டு அவர்களின் துன்பம் துடைத்து, பிறர்பழி இல்லாமல் வாழ்வோமாயின், நாம் இவ்வுலகில் மட்டுமல்லாது மறுவுலகிலும் இறைவனின் திருவடிகளைக் காணலாம்.

'அன்புடயார் என்பும் உரியர் பிறர்க்கு'. அன்பு செய்பவர்களின் என்பும் அதாவது அவர்களின் எலும்பும் பிறருக்கே உரித்தாகும். நாம் இவற்றையெல்லாம் அடைய துன்பப்பட்டாலும், பொறுமையை என்றும் கைவிடாமல் இருப்போமாயின் சுடர்வீசும் பொன்போல் நாம் வையகத்தில் வாழ்வாங்கு வாழலாம்.

## அடுத்த இதழிலிருந்து ஆரம்பம்!

விறுவிறுப்பான, புதிய தொடர் கதை!

## 'சோலை மண்டபம்'

பூமியிலிருந்து விஞ்ஞானக் கோஷ்டி ஒன்று செவ்வாய் மண்டலம் பறக்கிறது!

அங்கு.........

அவர்கள் அடைந்த அதிசயமான அனுபவங்கள்! அவர்களை நோக்கிய ஆபத்தும் அபாயமும்! ஈற்றில் அவர்கள் தப்பி வந்த வரலாறு!

இவற்றையெல்லாம் உங்கள் 'வளர்மதி'யில் அடுத்த வாரம் தொடக்கம் படித்து மகிழுங்கள்!

> நன்ருல் யாதொன்றும் செய்ய முடியாத வலியார் மேல் கோபம் கொள்வது, தனக்கே தீமையை விளைப்பதாகும். அதனிலும் தீங்கிழைப்பது, தன்னிலும் மெலியார்மீது சினப்பது. சினம் எவ்வகையிலும் கொடிதே.
> —வள்ளுவர்

> ஏப்போதும் பிறர் செய்த குற்றத்தைப் பொறுக்கவும்; அதனிலும் நல்லது, அக் குற்றத்தை அப்போதே மறந்து விடுதல்.
> —வள்ளுவர்

## இவர்கள் யார் தெரியுமா?

'இவர்கள் யார் தெரியுமா'எனச் சென்ற இதழில் வெளியிட்ட கேள்விக்குச் சரியான விடைகள் இதோ:

காருக்குறிச்சி அருணசலம் —நாதசுரம்

பாரதிதாசன் —கவிதை

எஸ். அனந்தராம கிருஷ்ணன் —தொழில் நிர்வாகம்

நாச்சியார் கோவில் ராகவப் பிள்ளை —தவில்

கண்ணும்பா —சினிமா

[சரியான விடை அனுப்பியோர் விபரம் அடுத்த வாரம்.]

# வள்ளுவரின் பரந்த நோக்கு

—இ. வி. ச. ஈஸ்வரன், மல்லாகம்—

இந்த பரந்த உலகத்தில் தோன்றிய மக்களுள் ஒரு சிலரை மட்டுமே நாம் போற்றுகின்ருேம். அதற்குக் காரணம் என்ன? அவர்கள் பல துறைகளில் செயற்கரிய செயலைச் செய்து மங்காப் புகழ் பெற்றமையே ஆகும். அத்தகைய உலகம் போற்றும் அறிஞர்களுள் திருவள்ளுவர் ஒருவராவர். வள்ளுவரின் பரந்த அறிவையும் அவர் ஆற்றிய பெரும் சேவையையும் நாம் ஆராய்வோம்.

பொதுவாக அறிவை நான்கு வகையாகப் பிரித்து விடலாம். அவையாவன கல்வியறிவு, கேள்வி அறிவு, பகுத்தறிவு, அனுபவ அறிவு என்பன. திருக்குறளை நாம் ஆழ்ந்து நோக்குமிடத்து வள்ளுவர் இந்த நான்கு கூறுகளிலும் தலைசிறந்து விளங்கியவர் என்பது தெளிவாகும்.

ஒருசில குறள்களை மட்டும் நோக்குமிடத்து, 'நவில்தொறும் நூல் நயம்', 'அறிதோறும் அறியாமை கண்டற்றல்' என்னும் குறள்கள் திருவள்ளுவரின் கல்வி அறிவை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்', 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும்' என்னும் இரண்டு குறள்களும் திருவள்ளுவர் எவ்வளவிற்கு பகுத்தறிவுப் பண்பில் முதன்மை பெற்றிருந்தார் என்பதை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' என்னும் குறள் வள்ளுவரின் கேள்விச் செல்வத்திற்கு சிறந்த சான்று பகருகின்றது. 'யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தோன்றும்', 'மக்களேபோல்வர் கயவர்' ஆகிய குறள்கள் வள்ளுவரின் கேள்வி அறிவிற்கு தக்க சான்று பகருகின்றன.

தெள்ளிய கருத்துக்களின் தேக்கமாய் வள்ளுவர் செய்துள்ள திருக்குறள் வாழ்வுக்கு பெரும் துணையாய் விளங்குகின்றது.

எந்த ஒரு காரியத்தையும் இலகுவில்தீர்த்து வைக்கக் கூடிய முறையில் அரும் பெரும் நூலாம் திருக்குறளை ஆக்கியுள்ளார் வள்ளுவர்.

அறமாகவும் அன்பாகவும் அறிவாகவும் இறைவனைக் காணும் வள்ளுவர் உலக மதங்கள் எல்லாவற்றையும் ஒரு நோக்குடன் பார்த்து, சமய பேதமற்ற முறையில் திருக்குறளை ஆக்கியுள்ளார்.

வள்ளுவர் சமயம் பொதுச் சமயம்; அவருடைய நூல் பொது நூல்; அவர் நாமம் என்றென்றும் அழியாது வாழும்.

## வள்ளுவனை, வாழ்த்துவோம்

—செ. குணரெத்தினம்—


பாலோடு, தேன் கலந்து,
பழங்களும் சேர்த்தெடுத்து,
சோற்ருேடு அருந்தும் போது
சுவை நன்ருயிருந்திட்டாலும்
ஓர் 'குறள்' படித்ததிலே,
உண்டாகும் சுவைக்கு முன்னே
நேர் நிற்க முடியாதிந்த,
நிலையில்லாச் சுவைகளெல்லாம்.

வள்ளுவன் தந்த இந்த,
வான்புகழ் குறளையெல்லாம்,
எல்லோரும் படித்து ஆங்கே,
இருக்கின்றபடி நடந்தால்,
நல்வாழ்வு மலரும் உண்மை,
நமக் கெல்லாம் 'குறளை'த்தந்த,
வள்ளுவன் மன(மு)ம் குளிரும்
வாழ்த்துவோம் அவரை நாங்கள்!

> எழுத்துக்கெல்லாம் முதன்மையானது அகரம். உலகனைத்துக்கும் முதன்மையானவர் இறைவன்.
> —வள்ளுவர்

# அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பில் சிறப்பாக நடைபெற்ற மொழிவழித் தொழிற்சங்க மேதினக் கூட்டத்தை முன் விட்டு நகர வீதிகளினூடாக நடாத்தப்பட்ட ஈருருளி ஊர்வலத்தில் ஒரு பகுதியையும், அங்காடி மைதானத்தில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் திரண்டிருந்த தொழிலாளர் கூட்டத்தில் ஒரு பகுதியையும், கூட்ட அமைப்பாளரும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளருமான திரு. அ. புவனேஸ்வரன் நன்றியுரை நிகழ்த்துவதையும் படத்தில் காண்க.

படம்: இதயம்.

# உலக வரலாற்று நூலை முதலில் தோற்றுவித்த இபுனு கல்தூன்

—எஸ். ஏ. பி. பிஸ்ருல் கரீம்—

வட மேற்கு ஆபிரிக்காவில் உள்ள தூனிஸ் என்னும் இடத்தில் 1332-ம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி அபுஜைதித் வலியுத்தீன் அப்துல் றஹ்மான் என்ற பெயரைப் பொருந்தியவராகப் பிறந்து 1406ம் ஆண்டு, இவ்வுலகை நீத்த பெரியார் இபுனு கல்தூன் அவர்களுக்கு இஸ்லாமியர் முன்னேற்றக் கழகம் இம் மாதம் நினைவு விழா வெடுப்பதை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.

மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து வளமுற்று வாழ அவனுக்கு ஓர் வழி காட்டி அத்தியாவசியம். உலகத்தில் முதல் மூலமாய்த் திகழும் அந்த மனிதனுக்கு வழி காட்டியாக வரலாறு ஒன்றுதான் அமையமுடியும். அதனால் அந்த வரலாறு தனித்தத்துவார்த்தம் நிரம்பியதாக, வாழ்விலும்—தாழ்விலும்—ஆட்சியிலும்—அமைதியிலும் சமூகத்திலும் நாகரிகத்திலும்—சமூக இயலிலும்-சமய தர்மத்திலும்-பொருளியலிலும்-புது மெருகூட்டி புகழ் தரக்—கூடியதாக அமைய வேண்டும். இதுவே சரித்திரம். இப்படியாக வரலாறு எழுதப்பட வேண்டும் என்று ஒரு வரலாற்றுக் காவியத்தை உலகத்தில் ஒப்புயர்வற்ற காவியமாக எம்மத்தியில் கிழக்கில் உதித்த ஒருவர் ஒப்புவித்தார். அந்தக் காவியம் தான் 'கிதாபுல் இபர்' என்ற உலக வரலாறாகும், அதன் ஆசிரியர் இப்னு கல்தூன் என்பவராகும்.

## உலக வரலாறு

உலக வரலாறு முகத்தமா என்ற முன்னுரையையும், வரலாறு என்ற இரண்டாவது தொகுதியையும், சுய சரிதை என்ற மூன்றாவது தொகுதியையும் கொண்டதாகும். அவர் தமது முன்னுரை என்ற முகத்தமாவை ஆறு பகுதிகளாகப் பிரித்துள்ளார்.

அவையாவன:—

* மனித சமுதாயம்
* மிலேச்ச இனத்தவர்
* அரசர் கடமை.
* நாகரிக வளர்ச்சி.
* வாழ்க்கை முறை.
* அறிவு வளர்ச்சி.

இப்படியாக மானிட சமூகத்தின் அறிவியல் தத்துவத்தை தெளிவுடனும் திறமையுடனும் வெகு விமரிசையாகப் பகுத்தும் தொகுத்தும் ஆராய்ந்துள்ளார். இப்னு கல்தூன். சமுதாய இயலை ஐரோப்பா சென்ற நூற்றாண்டிற்றான் கண்டது. ஆனால் இதை ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய முகத்தமா என்ற கல்தூனின் நூல் எடுத்துக் காட்டியது. இதை ஐரோப்பிய மேதை லூட் விக்கம்ப்ளா விக்ஸ் பார் வியக்கப் பறை சாற்றியுள்ளார்.

இரண்டாவது பாகமான உலக வரலாற்றில் அராபியர், ஸிரியர், பாரஸீகர், எகிப்தியர், கிரேக்கர், யூதர், உரோமர், துருக்கியர், பரங்கியர், பர்பர் ஆகியோரின் சரித்திரத்தைச் சம்பூர்ணமாக எழுதியுள்ளார்.

மூன்றாவது பாகமாக தமது சுய சரிதையை எழுதினார்.

## மஞ்சள் கோலம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மின்னியது. நெஞ்சம் பாகாக உருகியது அவனுக்கு.

'அழுகிறீர்களா?' ...அவளது பட்டு விரல்கள் மிருதுவாகக் கண்ணீரை அழிக்க முயன்றன.

அவனது கைகள் இடையை நவினமாக வலம் வந்தன. அவள் நாணம் குழைய விலகினாள்.

வெட்கம் மீதூரக் குப்புறப் படுத்துக் கொண்டாள். வெதுவெதுப்பான எனதுயோ இன்னத்தோடு அவனுக்குத் தந்துவிட்டு முகம் புதைத்தாள்.

கொதிக்க வைத்த மஞ்சட் குழம்பை கமகமக்கும் சந்தனச் சாந்தென்ற நினைப் போடு தீண்டிய ... விரல்கள் பொறுமையோடு அந்த ரத்தக் கோடுகளுக்கு மேலாகக் கோலமிட்டன.

இளம் சூடான அந்த ஸ்வரிசம் அவனை எதிர்பார்த்துக் கிடக்கும் இன்பத்தைவிட எத்தனையோ மடங்கு இதமாகவிருந்தது. இதயத்தின் உள்ளே அந்த இன்ப ... ... ...

(யாவும் கற்பனை)

## திருக்குறள் மாநாடு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு மணிக்கு ஆரம்பமாகும். பண்டிதர் செ. துரைசிங்கம், பண்டிதை சத்திய தேவி துரைசிங்கம் ஆகியோர் முறையே 'வள்ளுவர் புலமை', 'வள்ளுவர் அறநெறி' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்கள்.

சர்வகலாசாலைத் தமிழ்ப் பகுதி விரிவுரையாளர் திரு. செ. தனஞ்செயராஜசிங்கம் எம். ஏ., எம். லிற். 'திருவள்ளுவர் மொழி நடை' என்னும் பொருள் பற்றி சிறப்புரை நிகழ்த்துவார். 'திருவள்ளுவர் போற்றிய பண்புகள்' என்ற தலைப்பில் கவியரங்கம் ஒன்றும் நடைபெறும். திருவாட்டி பரஞ்சோதியம்மாளின் திருக்குறள் இசை விருந்தும், விக்னேஸ்வராக் கல்லூரியினர் அளிக்கும் 'புதியபாதை' என்னும் நாடகமும் நடைபெறும்.

### மூன்றும் நாள் நிகழ்ச்சி

மூன்றும் நாள் நிகழ்ச்சி திரு. கத்தையா வைத்தியநாதன் தலைமையில் செவ்வாய்க்கிழமை மாலை ஆரம்பமாகும். 'திருவள்ளுவர் வைதிக நெறியைத் தழுவியவரா? தமிழ் நெறியைத் தழுவியரா?' என்ற தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தில் திருவாளர்கள்: அ. சின்னத்தம்பி, க. கார்த்திகேசு, நா. ஆறுமுகம், ஈழ வேந்தன், சி. நமசிவாயம் பிள்ளை, புதுமைலோலன், இ. சி. சோதிநாதன், நாவேந்தன், இ. சங்கர், செல்வி சற்சொரூபவதி நாதன் ஆகியோர் பங்கு பற்றி உரை நிகழ்த்துவார்கள். 'பாசத்தின் பரிசு' என்னும் நாடகமும் நடைபெறும்.

—

மனிதர்களின் பண்புக்கு ஓர் எடுத்துக் காட்டு அவர்கள் ஆடை அணிந்து கொள்ளும் முறை. அதைப் போலவே காதலைப் பற்றி வர்ணிக்கும் போதும் எழுத்துக்களுக்கு ஆடை அவசியம்.

—அகிலன்

# தமிழர் பிரச்சினைக்கு....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிக்கின்றார்கள்! அந்த நல்லுபதேசத்தைக் கேட்க மறுக்கும் தமிழர்களின் முதுகில் நன்கு உறைக்கக் கொடுத்து அவர்களைக் 'கட்டாய ஞானி'களாக்க முற்படுகின்றனர். இதைப் போய்க் கொடுமையென்பதா?'

## எங்கும் இதே கேள்வி

நம்மிடம் கேள்வி கேட்ட அந்த அன்பர் முகத்தைச் சுழித்துக்கொண்டு, தாம் இறங்கவேண்டிய ஏதோ ஓர் ஸ்டேஷனில் இறங்கிப்போய் விடுகின்றார்.

நாம் கூறியது தத்துவம் அல்லவா? அது விளங்கித்தான் இராது அவருக்கு!

இந்தக் கேள்வியை அந்த இளைஞர் எந்தச் சுபமுகூர்த்தத்தில் கேட்டாரோ தெரியவில்லை. நாம் இந்தப் பிரயாணத்தின்போது எங்கெங்கெல்லாம் சென்றோமோ அங்கங்கெல்லாம் இந்தக் கேள்வியைத்தான் முக்கியமாக எல்லாரும் நம்மிடம் கேட்டார்கள்! சென்னையில் வைத்து நாம் சந்தித்த சினிமா நட்சத்திரங்கள்; அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள் பலருங்கூட இதே கேள்வியைத்தான் கேட்டு வைத்தார்கள்! பிரபல நகைச்சுவை நடிகர் தங்கவேல் அவர்களும் இதே கேள்வியை நம்மிடம் கேட்டதுடன் நில்லாமல் அதற்கு ஒரு மாற்றுப் பரிகாரத்தையும் சொல்லிவைத்தார்! தாமே முன்னின்று அதை அமுல் நடத்திப் பிரச்சினையைப் 'பைசல்' செய்வதாகவும் கூறினார்! அந்த விபரங்களையெல்லாம் நாம் இப்போ பார்த்துக்கொண்டிருக்க நமக்கு இப்போ நேரம் இல்லை. நாம் பிரயாணம் செய்த வண்டி இதோ இராமேஸ்வரம் ஸ்டேஷனில் வந்து நிற்பதால், நாம் முதலில் வண்டியிலிருந்து இறங்கவேண்டியுள்ளது. பின்னால் வேண்டுமானால், சுவிஸ்தாரமாக அவ்வித விபரங்களைப் பார்த்துவைப்போம்.

## எடுத்தனர் ஓட்டம்

'கைடு' எங்களைப் பக்குவமாகக் கீழே இறக்கிவிட்டான். எங்கள் மூட்டை முடிச்சுக்களையும் அவன் ஒருவனே தனியாகச் சுமந்து கொண்டான். ராம பிரானுக்கு ஓர் அநுமான்; எங்களுக்கு இவன்! எந்தெந்த இராவணனிடம் எங்களைக் கொண்டு மாட்டிவிடப் போகின்றானோ? ஆ! இதோ மாட்டிவிட்டானே! ஒன்றல்ல; பல இராவணர்கள்! குதிரை, மாட்டு வண்டிக்காரரின் ரூபத்தில் இதோ எங்களை முற்றுகை இடுகின்றனரே! மூட்டைச் சுமையோடு நின்ற 'கைடு' அவர்கள் மத்தியில் நின்று 'கரகம்' ஆடுகின்றானே! ஐயோ! அவன் தலையில் இருந்த மூட்டைச் சுமையை ஆளுக்கொரு வண்டிக்காரனாக இழுக்கின்றனரே! அதனால் மூட்டைகள் சிதறி அவற்றில் இருந்த துணிமணிகளெல்லாம் சிதறி நான்கு திசைக்கும் ஓடுகின்றனவே! இதோ!...இதோ! அப்படி மூட்டையை இழுத்து அதனால் தோல்விகண்ட வண்டிக்காரன் ஒருவன் நம்மைப் பிடித்தே இழுக்க ஆரம்பித்துவிடுகின்றானே!

ஒருபடியாக மூன்று வண்டிகளில் சாமான்கள் ஏற்றப்படுகின்றன. இந்த இழுவைப் போட்டியில் தோல்விகண்ட வண்டிக்காரர்கள் மற்ற வண்டிக்காரர்களைத், திட்டிச் சபித்துக்கொண்டு அப்பால் போகின்றனர்.

'கைடு' நம்மை அழைத்துக் கொண்டு இராமேஸ்வரம் கோயிலுக்கு அண்மையில் இருந்த ஒரு சத்திரத்தில் நம்மைக் கொண்டுவந்து விடுகின்றான்.

சாமான்களை இறக்கி வைத்த கையோடு, நம் பிரயாணக்கோஷ்டியினர் ஆளுக்கொரு திசையாக அலறி அடித்துக்கொண்டு ஓட்டம் பிடிக்கின்றனர் ......

(வளரும்)

# திருக்குறள் ....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்குறள் சமுதாய சீர்திருத்தத்தையே பன்னிப் பன்னிப் பேசுவதால், குறள் தாழ்ந்த ஒரு சமுதாயத்தை, உயர் நிலைக்குக் கொண்டுவர எழுந்த நூல் என ஒரு சிலர் கருத்துத் தெரிவிப்பர். இது பொருந்தாக் கூற்றும். மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும், நல்வாழ்வுக்கும் அத்தியாவசியமான அடிப்படை உண்மைகளைத்தான் வள்ளுவர் விளக்குகின்றார். அவர் கூறும் அந்த உண்மைகள் வாழ்வின் அடிப்படை உண்மைகளாகும்.

## பண்பு

சங்க மருவிய காலத்தில் தோன்றிய சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களுக்கும், திருக்குறளுக்குமிடையே யுள்ள முக்கிய வேற்றுமை குறளில் பிரசார வாசனை குறைந்து காணப்படுவதாகும். மணிமேகலையைத் திறனாய்வுக் கண்ணோட்டத்தில் ஆராய்பவர்கள் பௌத்த ஆசிரியர் சாத்தனார் வெற்றி பெற்றாரா? அன்று இலக்கிய ஆசிரியர் சாத்தனார் வெற்றி பெற்றாரா? என்ற கேள்விக்கு விடை காண முனைவது இயற்கை.

திருக்குறளில் இத்தகைய கேள்விக்கே இடமில்லாமல் போய்விடுகின்றது. ஏனெனில் கருத்துக்கள் மீறிய நிலையில் கலைப் பண்போ, அன்று கலைப் பண்பை மீறிய நிலையில் கருத்துக்களின் அழுத்தமோ குறளில்காணப் படவில்லை. வள்ளுவரின் கருத்துக்களோடு, கலைப் பண்பும் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளது. கலைப் பண்பா? கருத்துக்களா? என்று குறளைப் பிரித்து நோக்க முனைந்தால் அது குறளை உரிய முறையில் புரியாததால் ஏற்பட்ட விளைவென்றே கூற வேண்டும்.

## குறை

தமிழிலக்கியத்தின் சிறப்புக்கும், தொன்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டான குறள், சிறந்த இலக்கியப் பேழை மட்டுமல்ல; ஒரு வரலாற்றுக் கருவூலம். ஆனால் இலக்கியப் பேழை என்ற நிலைக்கு வளர்ந்துள்ள குறள் பற்றிய ஆராய்ச்சி, வரலாற்றுக் கருவூலம் என்ற அடிப்படையில் போதுமளவு ஆராயப்படாதது ஒரு குறையாகவே உள்ளது.

—

## அகில இலங்கை தமிழ்மறைத் தேர்வு

தமிழ்மறைக் கழகம் நடத்தும் அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு 20-6-64-இல இலங்கையில் 55 இடங்களில் நடைபெறும். தேர்வுக்குத் தோற்றுவோர் யாவருக்கும் நுழைவுச் சீட்டுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. நுழைவுச் சீட்டுக்களைப் பெறாதவர்கள் யாரேனும் இருப்பின் அவர்கள் உடனே தமிழ்மறைக் கழகத்துக்கு எழுதி அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

## செண்ட்ரல் (மருதானை)

ஈரோஸ் (பாமன்கடை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருகோணமலை)

ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) லிபேர்ட்டி (பதுளை) ஆனந்தா (கம்பளை)

ஜெமினி கணேசன் * ராகினி * எம். என். நம்பியார்
எஸ். ஏ. அசோகன் * நாகேஷ் * மனோரமா
ஆகியோர் நடித்த

ராஜலட்சுமி பிக்சர்ஸ்

# ஏழை பங்காளன்

இன்னிசை நடன விருந்து! மகிழ்ச்சிச் சித்திரம்!!
பரவசமூட்டும் பாடல்கள்!!! பார்க்க வேண்டிய படம்!!!!



டைரக்ஷன்: கே. சங்கர்
கதை வசனம்: மா. லட்சுமணன்
பாடல்கள்: கண்ணதாசன்
சங்கீதம்-வயலின்-தயாரிப்பு: கே. வி. மகாதேவன்

---

# கெயிட்டி – 3வது சனத்திரள் வாரம்!

மற்றும் 7 திரைகளில்!



சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன்,
விஜயகுமாரி, முத்துராமன், நாகேஷ்,
எஸ். வி. சகஸ்ரநாமம், ஓ. ஏ. கே. தேவர்,
மனோரமா, எம். வி. ராஜம்மா
மற்றும் பலர் நடித்த

# குங்குமம்

டைரக்ஷன்: கிருஷ்ணன்—பஞ்சு
இசை: கே. வி.மகாதேவன்
பாடல்கள்: கண்ணதாசன்—அருணாசலம்

பின்னணி: சௌந்தரராஜன்—சுசிலா—ஜானகி—ராஜலட்சுமி

---



எதிர்பாருங்கள்!

கல்யாண் குமார்—தேவிகா—புஷ்பலதா
சந்திரபாபு—பி. எஸ். சரோஜா—ராஜ்ஸ்ரீ
நடித்த

# யாருக்கு சொந்தம்

---

செல்லமஹால் 7வது வாரம்!

எம். ஜி. ராமச்சந்திரன்—சரோஜாதேவி
நடித்த

# தர்மம் தலை காக்கும்

---

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கொம்பனிவீதி) ஜுபிட்டர் (குருனாகல்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)




எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—ரங்கராவ்
சுப்பையா—ராதா—ராஜன்—நாகேஷ்—நாகையா
புஷ்பலதா—மனோரமா—அசோகன்—சரஸ்வதி—

---

# 9வது வெற்றியூட்டும் கூட்டு வாரம்!

மைலன் (கொழும்பு) நியூ இந்திரா (வவுனியா) பராசக்தி (கிளிநொச்சி)
அயன் (மன்னார்) கிரஸன்ட் (புத்தளம்) லக்ஷ்மி (முருங்கன்)

மற்றும் 5 திரைகளில்

எம். ஜி. ராமச்சந்திரன்,
சரோஜாதேவி, ராதா, அசோகன்,
மணிமாலா, நாகேஷ்
மற்றும் பலர் நடித்த

# பெரிய இடத்துப் பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் மே மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.